# வருடாந்த அறிக்கை

# 2019



**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**

இலங்கை
தொலைத்தொடர்புகள்
ஒழுங்குபடுத்தும்
ஆணைக்குழு

வருடாந்த அறிக்கை 2019

## தலைவரின் செய்தி



2019 ஆம் ஆண்டிற்கான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) ஆண்டறிக்கையை முன்வைப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

சுமார் 32.8 மில்லியன் கையடக்க தொலைபேசி சந்தாதாரர்கள், 2.3 மில்லியன் நிலையான சந்தாதாரர்கள் மற்றும் 13.4 மில்லியன் புரோட்பேண்ட் சந்தாதாரர்களைக் கொண்ட நமது நாடு மிகவும் துடிப்பான தொலைத்தொடர்புத் துறையைக் கொண்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டின் இறுதியில், கையடக்க தொலைபேசி ஊடுருவல் மற்றும் நிலையான தொலைபேசி ஊடுருவல் முறையே 150.8% மற்றும் 10.5% ஆக இருந்தது. தொலைத்தொடர்புத் தொழில் இலங்கையின் பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் பகுதியாக இருந்து வருகின்றதுடன் இது கையடக்க தொலைபேசியின் பரவலால் ஏற்பட்டுள்ளது. இந்தத் தொழில் புதிய வேலைகள், வருமானங்களை உருவாக்கியுள்ளதுடன் சந்தை பொருளாதார வளர்ச்சியை விரிவுபடுத்துவதற்கும், சிறந்த பொருளாதார தகவல் ஓட்டத்தை உருவாக்குவதற்கும், பரிவர்த்தனை செலவுகளைக் குறைப்பதற்கும் போக்குவரத்து நேரத்தில் சேமிப்பதற்கும் பங்களிக்கிறது.

தொலைத்தொடர்பு துறையின் முன்னேற்றங்களுடன், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் (ஐ.சீ.ரீ) துறையும் சமீப காலங்களில் கணிசமாக வளர்ந்துள்ளது. நம் நாட்டின் எதிர்கால இலக்குகளை அடைய புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் பயன்பாடுகளுடன் முன்னேற இரு துறைகளிலும் விரைவான முன்னேற்றத்தின் அவசியத்தை இது அங்கீகரிக்கிறது.

ஆணைக்குழு ஆண்டின் செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் பல அம்சங்களில் வெற்றிகரமாக உள்ளது. இந்த காலகட்டத்தில் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் சில செயற்பாடுகளை குறிப்பிடுவது பயனுள்ளது. நாட்டின் கல்வி அமைச்சுடன் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்ட ஐ.சீ.ரீ உள்நாட்டு தொண்டர் பிரதான திட்டத்தின் மூலம் சர்வதேச சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்தி கிராமப்புற மற்றும் தொலைதூர பாடசாலைகளுக்கு முன்னுரிமை அளிப்பது ஒரு முக்கிய சிறப்பம்சமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் (எஸ்.டி.ஜி) சூழலில், துறைசார் அிவிருத்தித் திட்டங்கள் மூலம் ரீ.ஆர்.சி இவ்வாண்டுக்குத் தேவையான செயற்பாடுகளைத் ஆரம்பித்துள்ளது.

கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான எஸ்.ஏரீ.ஆர்.சீ (SATRC) செயற்குழுவின் கூட்டத்தை ரீ.ஆர்.சீ.எஸ்.எல் மேலும் நடத்தியது. துணை பிராந்திய ஒத்துழைப்பு, கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் பிரச்சினைகள் மற்றும் பரஸ்பர பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்து கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனுடன் தொடர்புடைய ஆண்டின் நிதி முன்னேற்றத்தைப் பொறுத்தவரை, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் வருமானம் ரூ. 38,575 மில்லியன் ஆக இருந்த அதே நேரத்தில் ஆணைக்குழு ரூபா 27.6 பில்லியன் தொகையை திரண்ட நிதிக்கு பங்களிப்பு செய்துள்ளது.

முன்னோட்டத்தில் ஒரு வருடத்திற்குள் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் அளித்த பங்களிப்பைப் பாராட்டும் அதே வேளையில், ரீ.ஆர்.சீ.எஸ்.எல் உறுதிப்படுத்தும் மூலோபாய பணியைக் கொண்டுள்ளதுடன் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதோடு கூடுதலாக நாட்டின் டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்திற்கு தேவையான உட்கட்டமைப்பையும் கொண்டுள்ளது.

தேசத்தின் முன்னேற்றத்திற்காக இந்த தேசிய இலக்குகளை பின்பற்றுவதில் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் வெற்றி பெற விரும்புகிறேன்.

மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) டபிள்யூ.டபிள்யூ.வீ, ஆர்.டபிள்யூ.பீ, ஆர்எஸ்.பீ, யூ.எஸ்.பீ, என்டீசீ, பீஎஸ்சீ, எம்பில் (WWV RWP RSP USP ndc psc Mphil)
பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்
தலைவர், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

# உள்ளடக்கம்

**அத்தியாயம் 01** ........................................ 1

இலங்கைத் தொலைத்தொடர்புகள்
ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு -
தோற்றம், தொலைநோக்கு,
நோக்கங்கள், பொறுப்புக்கள் மற்றும்
பணிகள

**அத்தியாயம் 02** ........................................ 7

இலங்கை தொலைத்தொடர்புகள்
ஒழங்குபடுத்தும் ஆணைக்குழ இன்
கலவை

**அத்தியாயம் 03** ........................................ 11

டெலிகொம் இன்போ கிராபிக்ஸ்

**அத்தியாயம் 04** ........................................ 17

2019 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர்
நாயகத்தின் செயல்முன்னேற்ற ஆய்வு

**அத்தியாயம் 05** ........................................ 37

பிரிவுகளின் செயல்திறன்

**அத்தியாயம் 06** ........................................ 107

நிதி அறிக்கை - டிசம்பர் 2019
உடன் முடிவடைந்த ஆண்டிற்காக

**அத்தியாயம் 07** ........................................ 141

கணக்காய்வாளர் நாயகத்தின
அறிக்கை

# சுருக்கக் குறியீட்டுப் பட்டியல்

| | |
|---|---|
| APNIC | ஆசிய பசுபிக் வலைப்பின்னல் தகவல் மையம |
| APT | ஆசிய பசுபிக் டெலிகொம் ஒற்றுமை |
| ARPU | ஒரு பயனருக்கு சராசரி வருவாய |
| ASMS | அன்டெனா கட்டமைப்பு முகாமைத்துவ அமைப்பு |
| BOI | முதலீட்டு சபை |
| CERT | கணனி அவசர தயார்நிலை அணி |
| CID | குற்றவியல் புலனாய்வுத் துறை |
| CSR | கூட்டாண்மை சமூகப் பொறுப்பு |
| CTO | பொதுநலவாய தொலைத்தொடர்பு நிறுவனம |
| CWG | ஆலோசனை குழுக்கள |
| DOA | விவசாயத் திணைக்களம |
| DTH | நேரடியாக வீட்டை நோக்கி |
| FAO | உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு |
| GCI | உலகளாவிய இணைய பாதுகாப்பு குறியீடு |
| GND | கிராம நிலதாரி பிரிவுகள |
| GMDSS | உலகளாவிய கடல்சார் பாதுகாப்பு அமைப்பு |
| HFDF | அதிக அதிர்வெண் திசை கண்டுபிடிப்பு |
| ICT | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம |
| ICTA | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம |
| IMT | தொலை தொடர்பு நிறுவனம |
| IMEI | சர்வதேச செல்பேசி அடையாள எண |
| ISP | இணையச் சேவை வழங்குதல |
| IT | தகவல் தொழில்நுட்பம |
| ITOL | சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குனர் தீர்வை |
| ITU | சர்வதேச தொலைத் தொடர்பு சங்கம |
| JICA | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம |
| LT | தாமரைக் கோபுரம |
| MFR | மாஸ்டர் அதிர்வெண் பதிவு |
| MOA | கமத்தொழில் அமைச்சு |
| NIA | தேசிய தகவல் நிறுவனம |
| NAITA | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை |
| NVQ | தேசிய தொழிற் பயிற்சி தகைமைகள |
| OLAC | வெளிச்செல்லும் உள்ளூர் அணுகல் கட்டணங்கள |
| OTT | உயர் மட்டம |
| PCU | திட்ட ஆலோசனை பிரிவு |
| PPP | தனியார் பொதுக் பங்குடமை |
| PSTN | பொதுமக்கள் மாற்று தொலைபேசி வலையமைப்பு |
| QOS | சேவை அளவு |
| RMC | பிராந்திய கண்காணிப்பு மையம |
| RMS | தொலை கண்காணிப்பு நிலையங்கள |
| RTE | வானொலி முனைய உபகரணங்கள |
| SATRC | பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம |
| SAFIR | உட்கட்டமைப்பு கட்டுப்பாட்டுக்கான தெற்காசிய கூட்டமைப்பு |
| SED | சிறிய நிறுவனங்களின் வளர்ச்சி |
| SLLRDC | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி |
| SME | சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள |
| TL | தொலைத்தொடர்பு வரி |
| TDC | தொலைத்தொடர்பு அபிவிருத்தி கட்டணங்கள |
| TRCSL | இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு |

| | |
|---|---|
| TSO | தொலைத் தொடர்பு அமைப்பை இயக்குபவர்கள |
| UDA | நகர அபிவிருத்தி அதிகாரசபை |
| URL | இணையத்தள முகவரி |
| VTC | தொழில் பயிற்சி நிறுவனங்கள |
| WTISD | உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம |

# அட்டவணைகள்


அட்டவணை 01: தொலைத்தொடர்பு துறையின் புள்ளிவிபர கண்ணோட்டம் ........................................12

அட்டவணை 02: நெட்வேர்க் பிரிவின் புள்ளிவிபரம் ........................................44

அட்டவணை 03: அரசாங்க நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட குறுகிய குறியீடுகள் ........................................44

அட்டவணை 04: தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட குறுகிய குறியீடுகள் ........................................45

அட்டவணை 05: வழங்கப்பட்ட உபகரணங்கள் அனுமதி மற்றும் அங்கீகார வகைகளின் எண்ணிக்கை ........................................45

அட்டவணை 06: ஆண்டு சந்தாக்கள் ........................................52

அட்டவணை 07: ஸ்பெக்ட்ராம் பயனாளிகளுக்கு 2019 இல் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை ........................................55

அட்டவணை 08: 2019 இல் பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் ........................................55

அட்டவணை 09: 2019 இல் பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் ........................................55

அட்டவணை 10: 2019 இல் வழங்கப்பட்ட அனுமதி கடிதங்களின் எண்ணிக்கை ........................................56

அட்டவணை 11: காலத்திற்கான கையடக்க மற்றும் நிலையான அணுகல் சந்தாதாரர் தளங்களின் எண்ணிக்கை ........................................58

அட்டவணை 12: காலத்திற்கான கையடக்க மற்றும் நிலையான அணுகல் செயற்படுத்துனரின் .......59

அட்டவணை 13: தொலைத்தொடர்பு வரி 2012-2019 ........................................59

அட்டவணை 14: செஸ் 2012-2019 ........................................60

அட்டவணை 15: செல்லூலர் கோபுர வரி சேகரிப்பு - 2019 ........................................60

அட்டவணை 16: யைடக்க குறுஞ் செய்தி சேவைகள் வரி சேகரிப்பு ........................................61

அட்டவணை 17: மாத்தறை மாவட்ட தகவல் ........................................62

அட்டவணை 18: இரத்தினபுரி மாவட்ட தகவல ........................................62

அட்டவணை 19: அம்பாந்தோட்டை மாவட்ட தகவல் ........................................63

அட்டவணை 20: தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டண வரி சேகரித்தல ........................................64

அட்டவணை 21: 2017-2018 ஆண்டுகளுக்கான மொத்த வருமானம் ........................................64

அட்டவணை 22: 2017-2018 ஆண்டுகளுக்கான மொத்த இலாபம் மற்றும் நட்டம் ........................................64

அட்டவணை 23: ஒப்பந்தத்தின் சுருக்கம் ........................................72

அட்டவணை 24: கொழும்பு தாமரை கோபுர செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை முன்னேற்றம் ........................................72

அட்டவணை 25: கொழும்பு தலைமை அலுவலக விரிவாக்க கட்டிட திட்டத்தின் முன்னேற்றம் ........78

அட்டவணை 26: கதிரான புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல் செயறட்திட்டத்தின் முன்னேற்றம் ...........81

அட்டவணை 27: 2019 இல் வழங்கப்பட்ட உள்ளக சுற்றறிக்கைகள் ........................................84

அட்டவணை 28: 2019 இல் கலந்து கொண்ட வெளிநாட்டு நிகழ்ச்சிகள் ........................................85

அட்டவணை 29: 2019 இல் கலந்து கொண்ட உள்நாட்டு நிகழ்ச்சிகள் ........................................87

அட்டவணை 30: 2017 - 2019 முதல் ஆணைக்குழுவின் வருமானம் ........................................94

அட்டவணை 31: திரண்ட நிதிக்கு பணம் அனுப்புதல் ........................................97

# விளக்கப்படம்


விளக்கப்படம் 01: முறைமை உரிமங்களின் எண்ணிக்கை ....12

விளக்கப்படம் 02: ஒட்டுமொத்த நிலையான மற்றும் கையடக்க சந்தாதாரர்களின் வளர்ச்சி ....12

விளக்கப்படம் 03: நிலையான புரோட்பேண்ட், நரோபேண்ட் மற்றும் கையடக்க புரோட்பேண்ட் சந்தாக்கள் ....13

விளக்கப்படம் 04: தொலைநோக்கு ....13

விளக்கப்படம் 05: கைடக்க மற்றும் நிலையான அணுகல் சந்தா வளர்ச்சி ....13

விளக்கப்படம் 06: தொலைத்தொடர்பு துறையில் முதலீடுகள் ....14

விளக்கப்படம் 07: கையடக்க மற்றும் நிலையான அணுகல் செற்படுத்துனரினால் ஒரு பயனருக்கான சராசரி வருமானம் ....14

விளக்கப்படம் 08: தொலைத்தொடர்பு வரியின் வளர்ச்சி ....14

விளக்கப்படம் 09: செஸ் ....15

விளக்கப்படம் 10: திரண்ட நிதிக்கு பணம் அனுப்புதல ....15

விளக்கப்படம் 11: தொலைத்தொடர்பு வரியின் வளர்ச்சி ....59

விளக்கப்படம் 12: செஸ் இன் வளர்ச்சி ....60

விளக்கப்படம் 13: 2019 இல் யைடக்க குறுஞ் செய்தி சேவைகள் வரியின் வளர்ச்சி ....61

விளக்கப்படம் 14: திட்டமிடப்பட்டதற்கு எதிரான உண்மையான முன்னேற்றம் மற்றும் இலக்கு பூர்த்தித் திகதி இல்லாமல் தொடர்கிறது ....73

விளக்கப்படம் 15: 2019 இல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் பதவியணியினர்களின் பங்கேற்பு ....85

விளக்கப்படம் 16: தொலைத்தொடர்பு வரி 2017-2019 (ரூபா மில்லியன்) ....95

விளக்கப்படம் 17: சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர் வரி 2017-2019 (ரூபா மில்) ....96

விளக்கப்படம் 18: ரீ.ஆர்.சீ.எஸ்.எல் 2017-2019 இன் மொத்த சேகரிப்பு (ரூபா மில்) ....96

## படம்

படம் 01: ஐஊவு தன்னார்வத் திட்டத்தின் திட்டத்தின் திறப்பு விழா ....48
படம் 02: ஐஊவு தன்னார்வத் திட்டத்தின் நடைமுறை அமர்வுகள் ....48
படம் 03: ஐஊவு தன்னார்வத் திட்டத்தின் வுசுஊளுடு ஆய்வு வருகைகள் ....49
படம் 04: ஐஊவு தொண்டர் திட்டத்தின் நிறைவு விழா ....49
படம் 05: கொள்கை, ஒழுங்குபடுத்தல் மற்றும் சேவைகள் குறித்த ளுயுவுசுஊ செயற்குழு ....50
படம் 06: ஐவுரு பிராந்திய தரப்படுத்தல் மன்றம் ....50
படம் 07: யீவு-யீஜேஊ- வுசுஊளுடு உள்நாட்டு பயிற்சி பாடநெறி ''ளுனுே அறிமுகம்'' ....51
படம் 08: ளுனுபு இல் யீவு-புளுஆயு-வுசுஊளுடு உள்நாட்டு பயிற்சி பாடநெறி ....51
படம் 09: தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப கழிவு முகாமைத்துவ விழிப்புணர்வு திட்டம் ....63
படம் 10: மைஸ்பீட் (MySpeed) சோதனை அமைப்பு ....67
படம் 11: நிகர வேகம் (Net Speed) சோதனை முடிவுகள் (இடம் - ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) ....68
படம் 12: நிகர வேகம் (Net Speed) சோதனை முடிவுகள் (வெளி நிலையம்) ....68
படம் 13: கொழும்பு தாமரைக் கோபுரத்தின் சிவில் வேலைகள் ....73
படம் 14: கொழும்பு தாமரைக் கோபுரத்தின் இரும்பு கட்டமைப்பு ....73
படம் 15: கொழும்பு தாமரைக் கோபுரத்தின் கோபுர வீடு ....74
படம் 16: கொழும்பு தாமரைக் கோபுரத்தின் கோபுர தளம் ....74
படம் 17: கொழும்பு தாமரைக் கோபுரத்தின் பிரதான அண்டெணா ....75
படம் 18: கொழும்பு தாமரைக் கோபுரத்தின் திரைச் சுவர் ....75
படம் 19: கொழும்பு தாமரைக் கோபுரத்தின் உள்ளக அலங்காரம் ....75
படம் 20: கொழும்பு தாமரைக் கோபுரத்தின் சமயலறை ....75
படம் 21: கொழும்பு தாமரைக் கோபுரத்தின் எந்திரவியல், மின்னியல் மற்றும் குழாய் வேலைகள் ..76
படம் 22: அம்பாந்தோட்டை ஐரீ பார்க ....77
படம் 23: கொழும்பு தலைமை அலுவலக விரிவாக்க கட்டிடத்தின் நிர்மாணம் ....79
படம் 24: கதிரானா மறுவாழ்வு மற்றும் புதுப்பித்தல் திட்டம் ....81

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

தோற்றம், தொலைநோக்கு, நோக்கங்கள், பொறுப்புக்கள் மற்றும் பணிகள

அத்தியாயம்

# 01

**தோற்றம்**

தொலைத்தொடர்பு துறை முதலில் பொது முயற்சியொன்றாக இருந்ததுடன் 1980 இல் தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டதன் பின்னர் இத்துறை இலகுபடுத்தல் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் தொலைத்தொடர்பு திணைக்களம் தொலைத்தொடர்பு கூட்டுத்தாபனமொன்றாக மாற்றப்பட்டதுடன் 1991 இன் போது ஒழுங்குபடுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 1991 ஆம் ஆண்டின் போது பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இலங்கை தொலைத்தொடர்பு அதிகாரசபை (SLTA) ஸ்தாபிக்கப்பட்டதுடன் பின்னர் அது தற்போதைய நிலைமைக்கு ஆணைக்குழுவொன்றாக மாற்றப்பட்டது.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL), 1991 இன் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு சட்டம், என்ற பெயருடைய பிரதான சட்டத்தை திருத்தம் செய்வதற்காக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்த) சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச நியதிச்சட்ட அமைப்பொன்றாகும். இந்த அறிக்கையில் சட்டம் என்பது 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்த) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1991 இன் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டம் என அறிமுகப்படுத்தப்படுவதுடன் ஆணைக்குழு என்பது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1996 இன் 27 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1991 இன் 25 ஆம் இலக்க சட்டத்திற்கு இணங்க இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL) இந்நாட்டின் அனைத்து தொலைத்தொடர்பு விடயங்களையும் செயற்படுத்தும் அரச அதிகாரசபையொன்றாகும். சட்டரீதியான அதிகாரத்துடன் சட்டரீதியான அதிகாரசபையாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL) இந்நாட்டின் அனைத்து தொலைத்தொடர்பு விடயங்கள் தொடர்பாக பொறுப்புக்கூறும் அரசின் அதிகாரம் பெற்ற நிறுவனமொன்றாகும். இதன் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு பாவனையாளர்களினதும் தொலைத்தொடர்பு செயற்பாட்டு கம்பனிகளினதும் நன்மைகளுக்காக இந்நாட்டின் தொலைத்தொடர்பு சேவைகளை மேம்படுத்துவதற்கு சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

**ஆணைக்குழு மற்றும் ஆணைக்குழு கூட்டங்கள**

ஆணைக்குழு ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருப்பதுடன் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் உத்தியோகபூர்வமாக ஆணைக்குழுவின் தலைவராவார். அவ்வாறே பணிப்பாளர் நாயகம் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இருப்பதுடன் ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவராகவும் உள்ளார். நியமிக்கப்பட்ட ஏனைய மூன்று உறுப்பினர்களும் முறையே சட்டம், முகாமைத்துவம் மற்றும் நிதித்துறைகளின் நிபுணத்துவத்தைக் கொண்ட அங்கத்தவர்களாவர்.

2019 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழு ஒழுங்குபடுத்தும் விடயங்கள், நிர்வாக விடயங்கள், ஆணைக்குழுவின் வருடாந்த பாதீடு, இலங்கையில் சர்வதேச ஒழுங்குபடுத்தும் மாநாட்டினை நடாத்துதல், விசேட செயற்திட்டங்கள் போன்ற விரிவான விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் மற்றும் அங்கீகாரம் வழங்குதல் போன்றவற்றிற்காக ஆணைக்குழு பதினைந்து கூட்டங்களை நடாத்தியுள்ளது.

**தொலைநோக்கு**

> *“விஞ்ஞானம் மற்றும் ஒழுங்குமுறை சிறப்பு மூலம் உலகின் தொடர்பு துறையில் ஒரு முன்னணி தகவல் ஒழுங்குபடுத்தும் நிறுவனமொன்றாக ஏற்றுக்கொள்ளலுக்கு உட்படல் வேண்டும்”*

**செயற்பணி**

> *“ஒரு திறமையான மற்றும் நெறிமுறை பணியிடத்தின் மூலம் போட்டியிடும் சந்தையில் நியாயம் மற்றும் நீதியை மேம்படுத்துவதன் மூலம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரம் மற்றும் செலவிடக்கூடிய விலையிலான சேவையொன்றை தீவு முழுவதற்கும் கால நேரத்தில் வழங்குவதை உறுதிப்படுத்துதல்”*

**செயற்பணி கூற்றின் விளக்கம்**

இலங்கையின் நீண்டகால தொடர்புத் தேவைகளின் நிறைவேற்றத்தை உறுதிப்படுத்தும் வகையில் நியாயமான, போட்டித்தன்மையான மற்றும் முதலீடுகளை ஊக்குவிக்கும் ஒழுங்குபடுத்தல் சூழலொன்றை ஏற்படுத்துதல் போன்றவற்றை நோக்கிய அனைத்து பங்குதாரர்களுடனும் சுயாதீனமான, திறந்த மற்றும் வெளிப்பாடையான முறையில் செயற்படுவதன் மூலம் அனைத்து பயனர்களுக்கும் நியாயமான, செலவு செய்யக் விலையில் மேம்படுத்தப்பட்ட மற்றும் தரமான உயர் தொழில்நுட்ப சேவைகளை வழங்கக் கூடிய வகையை உறுதிப்படுத்துதல்.

**நோக்கம**

தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் பிரகாரம் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட வேண்டிய பொதுவான நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- தேசிய வலுவூட்டலுக்கு காரணங்களான அவசர சேவைகள், பொது அழைப்பு தொலைபேசிகூட சேவைகள், தொலைபேசி விபரக்கொத்து தகவல் சேவைகள், கடல்வழி மற்றும் கிராமிய சேவைகளை நிறைவேற்றி இலங்கையில் தேசிய மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு சேவைகளை நியாயமான நம்பகமான மற்றும் திறமையான சேவைகளை வழங்குதலை உறுதிப்படுத்துதல். (அதன் ஏற்பாடு சாத்தியமற்றதாகும் வரை சேமிக்கவும்)

- ஒவ்வொரு இயக்குனரும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக அதன் ஒவ்வொரு செயற்பாட்டாளருக்கும் தேவையான தொழில்நுட்ப, நிதியியல் மற்றும் முகாமைத்துவ வளங்களை கொண்டிருப்பதையும் அவர்களால் அவை பயன்படுத்தப்படுவதாக உறுதிப்படுத்திக் கொள்ளல்.

- அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மற்றும் வழங்கப்படும் தொலைத்தொடர்பு சேவைகள் சேவைகள் உட்பட தொலைத்தொடர்பு உபகரணங்களின் நிலைமை மற்றும் பல்வகைப்படுத்தல் தொடர்பாக நுகர்வோர்களினதும் வாங்குபவர்களினதும் ஏனைய பயன்படுத்தனர்களினதும் இணைப்புக்கள் மற்றும் பொது மக்கள் நலன்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

- தொலைத்தொடர்பு சேவையுடன் தொடர்புபட்ட வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்ட நபர்களிடையே போட்டிகளை பராமரித்து பொருளாதார மேம்படுத்துதல் உட்பட அத்தகைய நபர்களை செயற்திறனாகவும் சிக்கனமாகவும் மேம்படுத்துதல்.

- உள்ளக மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு வசதிகள் தொடர்பாக விரைவான மற்றும் நிலைபேறான அபிவிருத்தியொன்றை மேம்படுத்துதல்

- தேவையற்ற தாமதங்கள் அல்லது தடைகள் அல்லது தடைகளில்லாத நம்பிக்கையான மற்றும் செயற்திறனான சேவையொன்றை வழங்கி தமது பொறுப்பை நிறைவேற்றுவதற்கு செயற்பாட்டாளர்களுக்கு இயலுமை காணப்படுவதை உறுதிப்படுத்துதல்.

- தொலைத்தொடர்பு மற்றும் தொடர்புடைய துறைகளில் புதிய நுட்பங்களை மேம்படுத்துதலும் அம்முறைகளை உருவாக்கும் ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல்.

- இலங்கைக்கு வெளியே தமது வியாபார நிலையங்கள் உள்ள தொலைத்தொடர்பு சேவை அதிகளவில் பயன்படுத்தும் பயனர்களை இலங்கைக்கு உள்ளே வியாபார நிலையங்களை நிறுவுதல் மற்றும் சர்வதேச சேவைகளுக்காக இலங்கையை ஈடுபடுத்துவதை மேம்படுத்தும் பொருட்டு ஊக்குவித்தல்.

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (TRCSL) பொறுப்புக்கள**

ஒரு முன்னணி அரசாங்க நிறுவனம் என்ற வகையில், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL) இலங்கையில் தொலைத் தொடர்பு துறை தொடர்பாக தேசிய ஒழுங்குபடுத்தல் முகவராண்மையாக இருப்பதுடன் அதிகரித்து வரும் போட்டிச்சந்தையில் எழும் சவால்களுக்கு பொறுப்பேற்கும் வகையில் பொதுமக்கள் நலன்களை பாதுகாத்து ஒழங்குபடுத்தும் செயற்பாடுகளை சிறப்பாக பலப்படுத்தி தொலைத்தொடர்பு கைத்தொழிலை சிறந்த நிலைபேறான

அபிவிருத்தி மேம்படுத்துதல், பொதுமக்கள் நலன்களைப் பாதுகாத்தல் ஆணைக்குழுவின் அதன் முக்கிய பொறுப்புக்களாகும்.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு TRCSL தொலைத்தொடர்பு சேவைகள் வழங்குவதில்லை. ஆனால் செயற்திறனான மற்றும் முறையான தொடர்பாடல் சேவைகளை வழங்கும் தொலைதொடர்பு செயற்பாட்டுக் கம்பனிகளை ஊக்குவிப்பதாகும். அவ்வாறே இலங்கை தொலைத்தொடர்பு வலையமைப்புக்களை செயற்திறனான மட்டத்தில் மேமப்படுத்தும் பொருட்டு அனைத்து தொடர்பாடல் சேவை செயற்பாட்டுக் கம்பனிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குதல்.

அதன் முக்கியமான பொறுப்புக்கள் பின்வருமாறு:

❖ சட்ட ஏற்பாடுகளை அமுலாக்குதல், அனுமதிப்பத்திரமுடைய செயற்பாட்டாளர்களின் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை முறையே பின்பற்றுதல

❖ அனுமதிப்பத்திரமுடைய செயற்பாட்டாளர்களுக்கு இடையே சுதந்திரமான மற்றும் நியாயமான போட்டியொன்றை பேணிச்செல்வதற்கு ஊக்குவித்தல்

  ○ செயற்பாட்டாளர்கள் பொதுமக்கள் நலன்களை மேற்கொள்கின்றனரா என கண்காணித்தல் மற்றும் பக்கசார்பற்ற வகையில் சாதகமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக போட்டித்தன்மையை ஏற்படுத்துதல்.
  ○ வலையமைப்பு மற்றும் சேவைகளுக்கு இடையே இடைத்தொடர்பினை ஏற்படுத்துவதற்கு உறுதிப்படுத்துதல்
  ○ திறந்த நுழைவு, தடைகளை நீக்குதல் மற்றும் வெளிப்படையான செயற்பாடொன்றை ஏற்படுத்துவதற்கு இயலுமான வகையில் பொது சட்ட விதிகளைத் தயாரித்தல்.

❖ விலை

தொலைத்தொடர்பு சேவைகளின் விலைகள் தாங்கிக் கொள்ளக் கூடியதாக இருப்பதை கருத்திற்கொண்டு நியாயமான விலையை உறுதிப்படுத்துதல

❖ நுகர்வோர் பாதுகாப்பு

பொதுமக்கள் மற்றும் பாவனையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக புலனாய்வுகளை மேற்கொள்ளும் போது கேட்பதற்குரிய விருப்பம், தொடர்பாடல் பொதுமக்கள் பங்கேற்பினை ஊக்குவித்தல் பொதுமக்கள் பாதுகாப்பினை ஏற்படுத்துதல்.

❖ சமூக ஒழுங்குமுறைகள

  ○ உலகலாவிய அணுகல்/சேவைகள
  ○ உலகலாவிய அணுகல் உறுதி/கிராமிய சமூகம், முதியோர் மற்றும் விசேடதேவைகளை உடையவர்களுக்கான ஏற்பாடுகளை உறுதிப்படுத்துதல
  ○ அவசர தேவைகளுக்கான முன்னேற்பாடுகள.
  ○ வெவ்வேறு தேவைப்பாடுகளுடன் கூடிய நபர்களின் தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்துதல்.

❖ குறைந்த வசதிகள் மற்றும் வரையறுக்கப்பட்ட வளங்களை ஒழுங்குபடுத்துதல
  ○ அலைக்கற்றை முகாமைத்துவம்
  ○ எண்ணிடல
  ○ வழி உரிமைகள
  ○ விண்வெளிப் பிரிவு
  ○ பரஸ்பரத் தொடர்பு
  ○ சர்வதேச இணைப்பு நிலையங்களுக்கு நுழைதல
  ○ பிரதான வலையமைப்புகளுக்கு நுழைதல

❖ உயர்தர தொலைத்தொடர்பு சேவைகள்

தொலைத்தொடர்பு சேவைகள் நியாயமான, மலிவுடன் கூடிய, உயர்தரத்தை உறுதிசெய்வதற்கும், நுகர்வோர் தேவையை திருப்திப்படுவதையும் இது உறுதிசெய்யும்.

- நல்லாளுகையை ஊக்குவித்தல்

  பொதுமக்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில் தேவையற்ற தாமதங்களைத் தவிர்த்தல், வெளிப்படையாக முடிவெடுக்கும் செயன்முறையை உறுதிப்படுத்துதல், பொதுமக்கள் பங்கேற்பு வழங்குவதை ஊக்குவித்தல

- தீர்மானங்கள் நியாயமானவை மற்றும் பாரபட்சம் அற்றவை என்பதை உறுதி செய்தல

- இந்த நவீன தகவல் மற்றும் தொடர்பாடல் உலகில் ஒரு சிறந்த சிவில் சமூகத்தை உருவாக்க உதவுதல்.

- சர்வதேச தொலைத்தொடர்புகள் கூட்டமைப்பு (ITU) மற்றும் சர்வதேச நிறுவனங்களால் வழங்கப்பட்ட தேவைகள் தொழில்நுட்ப தரநிலை ஆகியவற்றின் அடிப்படையில் அனைத்து இயக்குனர்களும் இணங்குவதை உறுதி செய்யவும்.

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிகள்**

அதன் நோக்கங்களை அடைவதற்காக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் பின்வரும் ஒழுங்குமுறை செயற்பாடுகளை செய்கின்றது.

- விண்ணப்ப செயன்முறையும் அனுமதிப்பத்திரம் வழங்குதலும

  - 1.8.1.1 சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் இலங்கையில் தொலைத்தொடர்பு முறைகளை இயக்குவதற்கான அனுமதிப்பத்திரம்.

    சட்டத்தின் 17 ஆம் பிரிவின் படி இலங்கையில் எந்தவொரு நபரும் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் அமைச்சரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் தவிர இலங்கையில் ஒரு தொலைத்தொடர்பு அமைப்பை இயக்க முடியாது. எவ்வாறெனினும் சட்டத்தின் 20 ஆம் பிரிவில் அனுமதிப்பத்திரம் போன்றவற்றை விடுவிப்பது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

  - சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் வானொலி அதிர்வெண் மற்றும் வானொலி அதிர்வெண் பயன்பாடு ஆகியவற்றிற்கான அனுமதிப்பத்திரம்.

    தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 22(1)ன் படி இலங்கையின் எந்தவொரு நபரினால் எந்தவொரு செயற்பாடொன்றிற்காகவும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று தவிர வானொலி அதிர்வெண் அல்லது எந்தவொரு வானொலி அதிர்வெண் உமிழ்வு இயந்திரம் இலங்கையிலோ அல்லது இலங்கை தேசிய பிராந்திய நீர் பரப்பில் இலங்கையில் பதிவுசெய்துள்ள கப்பலில் அல்லது விமானத்தின் பயன்படுத்தக்கூடாது.

  - சட்டம் 21 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அனுமதிப்பத்திரஙக்ள

    சட்டத்தின் 21(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர மொன்றின் கீழ் தவிர நபரொருவரினால் ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணமொன்று விற்பனைக்காக உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்வது தொடர்பாக சமர்ப்பித்தல், அது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் கையளித்தல், வாடகைக்கு வழங்குதல், குத்தகைக்கு வழங்குதல் செயற்படுத்திக் காட்டுதல், பராமரித்தல் அல்லது திருத்தங்களோ செய்ய முடியாது.

- கட்டண அறவீட்டு ஒழுங்குபடுத்தல

  - சட்டத்தின் பிரிவு 5(கே) இன் நியதிகளின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குள்ள அதிகாரங்களின் பிரகாரம் அமைச்சரிடம் கேட்டு அரசின் கொள்கை மற்றும் செயற்பாட்டாளர்களால் வழங்கப்படும் தொலைத்தொடர்பு சேவைகள் தொடர்பாக செயற்பாட்டாளர்களின் தேவைகள் கருத்திற்கொள்ளப்பட்டு இறுப்பனவு அல்லது அறுப்பனவு தீர்மான முறைகளை நிச்சயித்தல்.

- ○ சட்டத்தின் 5(1) இன் பிரகாரம் இணையத்தள கட்டணங்களை அங்கீரித்தல்/நிர்ணயித்தல்

- ❖ தொலைத்தொடர்புகள் சட்டம் (அதன் கீழான சட்ட விதிகள் உட்பட) மற்றும் அனுமதிப்பத்திரமுடைய செயற்பட்டாளர்களின் இணக்கப்பாடு மற்றும் உறுதிப்படுத்துதல் கண்காணிப்பு மற்றும் சட்டத்துடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல்

- ❖ இலங்கையின் வானொலி அதிர்வெண் வலைக்கற்றை முறையாக பயன்படுத்துவதை கண்காணித்தல் மற்றும் அதிர்வெண் வலைக்கற்றை முறையாக முகாமை செய்தலை உறுதிப்படுத்தல்

- ❖ நுகர்வோர் முறைப்பாடுகளுக்கு பதில் அளித்தல் மற்றும் விசாரணைகளை மேற்கொள்ளுதல்/ ஆய்வுகளை நடாத்துதல்.

  சட்டத்தின் 9(1) பிரிவின் பிரகாரம் செயற்பாட்டாளர் ஒருவரால் வழங்கப்படும் தொலைத்தொடர்புச் சேவைகள் தொடர்பாக தொலைத்தொடர்புகள் சேவை பயனர் அல்லது பொதுமக்களுக்கு இடையே எவரேனும் ஒருவரால் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடொன்றை செய்தால் தேவையானவை கருதி புலனாய்வொன்று ஆணைக்குவிற்கு நடாத்த முடியுமாக இருப்பதுடன் காரணத்திற்குரிய சந்தர்ப்பத்திற்குரிய விடயங்களின் பிரகாரம் அதற்குரிய பொறுப்பேற்றலை மேற்கொள்ள வேண்டும். சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம் புலனாய்வொன்று மேற்கொள்ளப்படும் போது சட்டத்தின் 9(1) இன் பிரகாரம் ஆணைக்குழுவினால் அம்முறைப்பாட்டிற்கு காரணங்கள் தொடர்பில் அல்லது காரணத்தை சரிப்படுத்துவதற்காக தேவையெனத் தோன்றும் வகையில் அவ்வாறான நடைமுறைகளை எடுக்குமாறு அத்தொலைபேசி இயக்குனர்களுக்கு கட்டளையிட முடியுமாக இருப்பதுடன் தேவைப்பாடு உருவாகும் வகையில் நிதிசார் நட்டத்தை செலுத்துமாறும் தீர்மானிக்கலாம்.

- ❖ தொலைதொடர்பு சேவைகளின் தரம் மற்றும் வகை தொடர்பாக பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதலும் பொதுமக்கள் செயற்பாடு அல்லது பகிரங்க பரீட்சைகள் நடாத்தப்படும் போது அவர்களின் பங்குபற்றலை ஊக்குவித்தல

- ❖ தொலைத்தொடர்பு துறை தொடர்பான சர்வதேச மாநாட்டில்/சர்வதேச மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகளில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தல்

- ❖ ஆணைக்குழுவினால் கட்டளைகள், ஆலோசனை வழிகாட்டுதல்கள் வழங்குதல்

  இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கட்டளை, ஆலோசனைகள் மற்றும் தீர்மானங்களை வழங்குதல் தொடர்பாக வெளிப்படையான கொள்கையொன்று பின்பற்றப்பட்டுள்ளது. பகிரங்க பரீட்சைகள் மற்றும் ஏனைய மாநாடுகளில் சமூகமளிக்கும் போது அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் தொலைத்தொடர்பு துறையின் செயற்பாட்டாளர்களுக்கு அதனுடன் தொடர்பான ஏனைய அக்கறை செலுத்தும் தரப்பினருக்கும் கூடிய சந்தர்ப்பமொன்று வழங்கப்படுகின்றது.

- ❖ தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் வகை ஒப்புதலுக்கான தொழில்நுட்ப தரங்களை குறிப்பிடல்.

**உள்ளக பிரிவுகளின் ஒத்துழைப்பு**

TRCSL செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பல பிரிவுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவிற்குரிய பிரிவுகளில் பிரதான செயற்பாடுகள் மற்றும் அந்தந்த பிரிவுகளின் செயலாற்றல் அடுத்த அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சில நடவடிக்கைகள் ஒரு குறிப்பிட்ட பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள போதிலும், அத்தகைய நடவடிக்கைகளானது குறிப்பிட்ட பிரிவினரிடமும் மற்ற பிரிவுகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டதென விசேடமாக குறிப்பிடப்பட வேண்டியுள்ளது.

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழங்குபடுத்தும் ஆணைக்குழ இன் கலவை

## அத்தியாயம் 02

## இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணையத்தின் கலவை

**ஆணைக்குழு**

| | |
|---|---|
| திரு. உதய ஆர் செனவிரத்ன | - தலைவர் (2019 மார்ச வரை) |
| திரு. ஹேமசிறி பெர்னான்டோ | - தலைவர் (2019 ஏப்ரல் வரை) |
| ஜெனரல். எஸ்.எச்.எஸ். கோட்டேகொட | - தலைவர் (2019 நவம்பர் வரை) |
| மேஜர் ஜெனரல். கமல் குணரத்ன | - தலைவர் (2019 நவம்பர் 19 முதல்) |
| திரு. பி.ஆர்.எஸ்.பி. ஜயதிலக்க | - உறுப்பினர் (2019 நவம்பர் 18 வரை) |
| திரு. ஒசத சேனாநாயக்க | - உறுப்பினர் (2019 நவம்பர் 20 முதல்) |
| திரு. ஜீ.பீ.கே. பெரேரா | - உறுப்பினர் (2019 திசெம்பர் 03 வரை) |
| திரு. அனில் மீரகஹகே | - உறுப்பினர் (2019 திசெம்பர் 18 முதல்) |
| திரு. என்.எல்.எஸ். றுவன்த குரே | - உறுப்பினர் (2019 திசெம்பர் 18 முதல்) |
| திரு. சமின்த குமாரசிறி | - உறுப்பினர் (2019 திசெம்பர் 18 முதல்) |

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிறைவேற்று உத்தியோகத்தர்கள

**பணிப்பாளர் நாயகம் அலுவலகம்**
திரு. ஒசத சேனாநாயக்க
பணிப்பாளர் நாயகம்

**ஆணைக்குழு செயலகம்**
திருமதி. ருவணி குணரத்ன
ஆணைக்குழுவின் பதில் செயலாளர்

**அனுமதிப்பத்திர முகாமைத்துவ பிரிவு**
திரு. ஆர்.ஜீ.எச்.கே.ரணதுங்க
பணிப்பாளர்

**வலையமைப்பு பிரிவு**
திரு. எச்.பீ. கருணாரத்ன
பணிப்பாளர்

திருமதி.கே.எஸ்.எம். விஷாகா
பிரதி பணிப்பாளர்

திருமதி.எஸ்.ஏ.ஆர். கமலநயனா
பிரதி பணிப்பாளர்

திரு.ஐ.எம். ஜவ்சி
உதவி பணிப்பாளர்

திரு.எஸ்.டபிள்யூ.எம்.ஆர்.எல்.பீ.சேனாதீர
உதவி பணிப்பாளர்

**எண்ணியல் வண்ணப்பட்டி முகாமைத்துவப் பிரிவு**
திரு.ஈ.என்.பீ.கே. ரத்னபால
பதில் பணிப்பாளர்

திரு.எம்.சீ.எம்.பாரூக்
பிரதி பணிப்பாளர்

திரு.எல்.கணேசமூர்த்தி
பிரதி பணிப்பாளர்

திரு.எம்.பி.குணசிங்க
பிரதி பணிப்பாளர்

திரு. சாந்த குணாநந்த
பிரதி பணிப்பாளர்

திரு. எஸ்.ஈ.வகிஸ்டா
பிரதி பணிப்பாளர்

திரு. டபிள்யூ.ஏ.டீ.ரீ.மதுசங்க
உதவி பணிப்பாளர்

திருமதி. ஜீ.எச்.பீ.இமாலி பிரசாந்திகா
உதவி பணிப்பாளர

**கொள்கை, சர்வதேச தொடர்பு பிரிவு**
திரு.எம்.கே. ஜயசேகர
பணிப்பாளர்

திரு. ஜே.கே.பி. ரத்நாயக்க பிரதி
பணிப்பாளர

**சட்டப் பிரிவு**
திருமதி.ஜி.மொரகொட
பிரதி பணிப்பாளர

திருமதி.றுவாணி குணரத்ன
பிரதி பணிப்பாளர்

திருமதி.எஸ்.ரொற்றிகொ
உதவி பணிப்பாளர்

திரு.ஐ.என்.மாதெவ
உதவி பணிப்பாளர

**போட்டிப் பிரிவு**
திரு.எச்.டபிள்யூ.கே.இன்திரஜித
பிரதி பணிப்பாளர்

திருமதி.சிரியானி மாவல்லகே
பிரதி பணிப்பாளர்

திரு.நிசாந்த பலிஹவதென
பிரதி பணிப்பாளர

**புலனாய்வு மற்றும் விசாரணைப் பிரிவு**
திருமதி.கே.எஜ்.எம்.விசாகா
பதில் பணிப்பாளர்

**உள்ளக கணக்காய்வு பிரிவு**
திரு.சமன் கித்சிறி
உள்ளக கணக்காய்வாளர்

**நிதிப் பிரிவு**
திரு.எம்.கே.ஜயந்த
பணிப்பாளர்

திரு.அருண ஹப்புஆரச்சி
பிரதி பணிப்பாளர்

திருமதி.எல்.டீ. ஜயவிக்ரம
உதவி பணிப்பாளர

**முறைப்பாட்டுப் பிரிவு**
திருமதி.தரலிக லிவேரா
பதில் பணிப்பாளர

திருமதி.மேனகா பதிரண
பிரதி பணிப்பாளர

திரு.டீ.என்.விஜேசிங்ஹ
உதவி பணிப்பாளர

**விசேட செயற்திட்டப் பிரிவு**
திரு. சாந்த குணாநந்த
பதில் பணிப்பாளர்

திரு.என்.டீ.கீகஹனகே
உதவி பணிப்பாளர

**நிர்வாக மற்றும் மனித வளங்கள் இணை விவகாரங்களுக்கான பிரிவு**
திரு.வீ.அருண என். பிரேமரத்ன
பிரதி பணிப்பாளர்

திரு.ஜே.கே.பீ. ரத்னாயக்க
பதில் பிரதி பணிப்பாளர்

**தகவல் தொழில்நுட்பப் பிரிவு**
திரு. டபிள்யூ.ஏ.டீ.ரீ.மதுசங்க
பிரிவின் தலைவர்




குறிப்பு: கேடர்இ நிளக்கப்படம் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தை மறுஆய்வு செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது

அத்தியாயம்

# 03

# டெலிகொம் இன்போ கிராபிக்ஸ்

# டெலிகொம் இன்போ கிராபிக்ஸ

***விளக்கப்படம் 01: முறைமை உரிமங்களின் எண்ணிக்கை***




* தற்காலிக தரவு (2019 செப்டெம்பர்)

***அட்டவணை 01: தொலைத்தொடர்பு துறையின் புள்ளிவிபர கண்ணோட்டம்***

| | |
|---|---|
| முறைமை உரிமங்களின் எண்ணிக்கை | 29 |
| நிலையான அணுகல் தொலைபேசி சந்தாக்களின் எண்ணிக்கை | 2,299,767 |
| 100 சந்தாக்களில் நிலையான அணுகல் தொலைபேசி சந்தாக்கள் | 10.5 |
| செல்லுலார் கையடக்க தொலைபேசி சந்தாக்களின் எண்ணிக்கை | 32,884,099* |
| 100 சந்தாக்களில் செல்லுலார் கையடக்க சந்தாக்கள் | 150.8 |
| நிலையான குறுகலான சந்தாக்கள | 63* |
| நிலையான புரோட்பேண்ட் சந்தாக்கள் | 1,654,174* |
| கைடக்க புரோட்பேண்ட் சந்தாக்கள் (3G, 4G) | 11,754,166* |
| பொது கட்டண தொலைபேசி சாவடிகளின் எண்ணிக்கை | 476* |

* தற்காலிக தரவு (2019 திசெம்பர்)

குறிப்பு - எஸ்.எல்.ரீ (பி.எல்.சி), லங்கா பெல் மற்றும் டயலொக் புரோட்பேண்ட் ஆகியவை தங்கள் உரிமங்களில் கட்டண தொலைபேசி மற்றும் தரவு சேவைகளை வழங்க உரிமை உண்டு.
2019 நடு ஆண்டு சன்தொகை = 21.803 மில்லியன்

***விளக்கப்படம் 02: ஒட்டுமொத்த நிலையான மற்றும் கையடக்க சந்தாதாரர்களின் வளர்ச்சி***




*தற்காலிக தரவு (2019 திசெம்பர்)

***விளக்கப்படம் 03: நிலையான புரோட்பேண்ட், நரோபேண்ட் மற்றும் கையடக்க புரோட்பேண்ட் சந்தாக்கள்***




*தற்காலிக தரவு (2019 திசெம்பர்)

***விளக்கப்படம் 04: தொலைநோக்கு***




***விளக்கப்படம் 05: கைடக்க மற்றும் நிலையான அனுகல் சந்தா வளர்ச்சி***




* தற்காலிக

2010-2019 காலகட்டத்தில் கையடக்க மற்றும் நிலையான சேவை வழங்குநர்களால் செய்யப்பட்ட புதிய முதலீடுகளை ஆண்டு அடிப்படையில் அட்டவணை மற்றும் விளக்கப்படக் காட்சிகள். (முதலீடுகளில் சொத்து பொறிகள், உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்கள் மற்றும் பணிகளின் செயல்முன்னேற்றம் ஆகியவை அடங்கும்)

***விளக்கப்படம் 06: தொலைத்தொடர்பு துறையில் முதலீடுகள்***




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 34033 | 56054 | 50118 | 68561 | 45084 | 48948 | 86084 | 78263 | 66946 | 88808 |
| கையடக்க | 24387 | 41999 | 29508 | 49509 | 23444 | 22703 | 27121 | 36151 | 38504 | 39358 |
| நிலையான | 9646 | 14055 | 20610 | 19052 | 21640 | 26245 | 58963 | 42112 | 28442 | 49450 |

***விளக்கப்படம் 07: கையடக்க மற்றும் நிலையான அனுகல் செற்படுத்துனரினால் ஒரு பயனருக்கான சராசரி வருமானம்***




*தற்காலிக தரவு (2019 திசெம்பர் - மதிப்பிடப்பட்டது)

***விளக்கப்படம் 08: தொலைத்தொடர்பு வரியின் வளர்ச்சி***




*தற்காலிக தரவு 2019

*விளக்கப்படம் 09: செஸ்*




*தற்காலிக தரவு 2019

ரீ.ஆர்.சீ.எஸ்.எல் துறை தனது வருமானத்தை நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக பொது திறைசேரியின் திரண்ட நிதிக்கு அனுப்புகிறது.

வருடாந்த அடிப்படையில் தொழில்துறை வருமானம் திரண்ட நிதியில் சேரும் காட்சிகள் பின்வருமாறு.

*விளக்கப்படம் 10: திரண்ட நிதிக்கு பணம் அனுப்புதல*




*தற்காலிக

# அத்தியாயம்

# 04

## 2019 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் நாயகத்தின் செயல்முன்னேற்ற ஆய்வு

## 2019 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் நாயகத்தின் செயல்முன்னேற்ற ஆய்வு

இலங்கை மிகவும் துடிப்பான மற்றும் ஆற்றல்மிக்க தொலைத்தொடர்புத் துறையைக் கொண்டுள்ளதுடன் இது சமீபத்திய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் முதலீடுகள், வேலைவாய்ப்பு மற்றும் புதுமைகளால் பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமாக பங்களிக்கிறது.

நாட்டின் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துனராக, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) முக்கியமாக ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவம், நெட்வேர்க் இயங்குதன்மை, உரிமம், போட்டி, இணக்கம், சேவையின் தரம், நுகர்வோர் உறவுகள், கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் போன்றவற்றிற்கு பொறுப்பாகவுள்ளது.

நவீன தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு என்பது நாட்டின் விரைவான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு ஒரு முக்கிய தேவையாகும். தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் தங்கள் நெட்வேர்க் உட்கட்டமைப்பு மற்றும் புதிய சேவைகளை விரிவுபடுத்துவதற்கு உகந்த சூழலை உருவாக்குவதில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) முக்கிய பங்கு வகிக்கிறது. நாட்டின் ஸ்மார்ட் மற்றும் நிலைபேறான வளர்ச்சியை மாற்றுவதில் ஐ.சி.ரீ முன்னேற்றங்களைத் தழுவுவதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்ட இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்), நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (எஸ்.டி.ஜி) அடைவதற்கு ஐ.சி.ரீ.களின் பங்கை வலுப்படுத்த முன்முயற்சிகளை எடுத்துள்ளது.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) செயற்பாடுகளைச் செய்ய பல பிரிவுகள் / அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. சில நடவடிக்கைகள் மற்ற பிரிவுகள் / அலகுகளின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். 2019 இல் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெக்ட்ரம் உரிமங்களை திறனாகவும் பயனுள்ள முறையிலும் புதுப்பிக்கவும், ஸ்பெக்ட்ரம் உரிமக் கட்டணம் / கட்டணங்களை சரியான நேரத்தில் சேகரிக்கவும் ஒரு புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. உரிமக் கட்டணம் நீண்ட காலமாக திருத்தப்படவில்லை. எனவே, அனைத்து உரிமக் கட்டணங்களும் திருத்தப்பட்டு, திருத்தம் இந்த ஆண்டு ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. தானியங்கி ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ அமைப்பு தொடர்பாக மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஸ்பெக்ட்ரம் உரிமக் கட்டணத்தை அதிகரிப்பதற்காக ஒரு வர்த்தமானி வெளியிடப்படும்.

குறுக்கீடு மற்றும் அதிர்வெண் சட்டவிரோத பயன்பாட்டைத் கட்டுப்படுத்துவதற்கான ஒரு தீவு முழுவதற்குமான கண்காணிப்பு வலையமைப்பை நிறுவுவதுடன் அச்செயற்திட்டம் தற்போது செயற்பாட்டில் உள்ளது. இது நாடு முழுவதும் ஸ்பெக்ட்ரம் கண்காணிப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும். மேலும், இலத்திரனியல் (ஈ) - உரிமம் மற்றும் தானியங்கு வேலையாய்வு அடிப்படையிலான ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ செயற்பாடுகளை இணைக்க மற்றொரு உப திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

மேலும், தரவு சுத்திகரிப்பு நடவடிக்கைகளுடன் முதன்மை அதிர்வெண் பதிவேட்டின்

துல்லியத்தை தயாரிக்கவும் மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தேசிய அதிர்வெண் ஒதுக்கீட்டு அட்டவணையைத் தயாரிப்பதில் திட்டமிடப்பட்ட முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ தரவுத்தளத்தை சுத்தப்படுத்துவதும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. IMEI சரிபாரத்தல் அமைப்பு பணிகளின் மேம்படுத்தல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒரு புதிய கட்டிடம் நிர்மாணிக்கும் வரை ஒரு ஆய்வகத்தை நிறுவுவது தாமதமாகின்றது. இருப்பினும், பெறுகை நடைமுறைகளை ஆரம்பிக்க TEC நியமிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெக்ட்ரம் கண்காணிப்பு நடவடிக்கைகள் பிராந்திய கண்காணிப்பு நிலையங்களின் உதவியுடன் நவீன ஸ்பெக்ட்ரம் கண்காணிப்பு வாகனத்தைப் பயன்படுத்துவதன் மூலம் சட்டவிரோத அதிர்வெண்களைக் கண்டறிவதோடு ஸ்பெக்ட்ரம் குறுக்கீட்டை விசாரணை செய்வதுடன் கட்டுப்படுத்தும் திறனையும் கொண்டவையாகவுள்ளது.

அதிர்வெண்களின் சட்டவிரோத பயன்பாட்டைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தணிக்கும் நோக்கத்துடன் வாகனம் பொருத்தப்பட்ட கடத்தும் கருவிகளை ஏற்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. புதிய சட்டத்தை அமுல்படுத்துவதற்கு உட்பட்டு இந்த நடவடிக்கையை உரிய நேரத்தில் செயல்படுத்த ஆணைக்குழு ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்த ஆண்டு இணக்க நடவடிக்கைகளின் கீழ் உரிமம் பெற்ற தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களால் குரல் மற்றும் தரவு / புரோட்பேண்ட் சேவைகளின் தரத்தை (QOS) கண்காணிக்க விதிகள் / ஒழுங்குமுறைகளை வழங்க திட்டமிடப்பட்டது. தற்போதுள்ள QOS அளவுருக்கள் பற்றிய பகுப்பாய்வு மற்றும் திருத்தங்கள் குறித்து செயற்படுத்துனர்களுடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் வெவ்வேறு இடங்களில் அளவிடப்பட்ட இணைய வேகத்தை ஆராய்ந்த பின்னர் இருக்கும் புரோட்பேண்ட் அளவுருக்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

“குரல் மற்றும் தரவு / புரோட்பேண்ட் சேவைகளுக்காக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) அமைத்த சேவை தரங்களை செயற்படுத்துனர்கள் பின்பற்றுவதை உறுதி செய்தல்” பணிகளில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. இற்றைவரை நடமாடும் செயற்படுத்துனர்கள் - 480, நிலையான செயற்படுத்துனர்கள் - 396 பின்பற்றப்பட்ட QOS அளவுருக்கள் இல்லை.

செயற்படுத்துனர்கள் வழங்கும் சேவைகளின் தரம் அடிப்படையில் காலாண்டு அடிப்படையில் நெட்வேர்க் கணக்காய்வுகள் நடாத்தப்பட்டதுடன் நிலையான செயற்படுத்துனர்கள் மற்றும் நடமாடும் செயற்படுத்துனர்கள் மீது முப்பத்திரண்டு நெட்வேர்க் கணக்காய்வுகள் நடத்தப்பட்டன.

சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமங்களின் நிபந்தனைகளை கடைப்பிடிப்பதை கண்காணிக்க தேவையான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மொத்தம் நாற்பத்தெட்டு எண்ணிக்கையிலான களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமங்களின் நிபந்தனைகளின்படி, உரிம நிபந்தனைகளை கடைப்பிடிப்பதை கண்காணிக்க ஆய்வுகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் நிபந்தனைகளை பின்பற்றாதது குறித்து தேவையான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமங்களின் நிபந்தனைகள் பின்பற்றப்படுவதை கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தொலைத்தொடர்பு சேவைகள் தொடர்பான சட்டத்தின் விதிகளின் கீழ் உரிமங்களைப் பெறுவதற்கான தேவை குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

உரிமம் பெற்ற செயற்படுத்துனர்கள் அறிமுகப்படுத்திய கட்டண தொகுப்புகள் மீளாய்வு செய்யப்பட்டு சந்தையில் காணப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்டண தொகுப்புகள் கண்காணிக்கப்பட்டன. தவிர, இது தொடர்பாக தேவையான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

விற்பனையாளர்களால் அங்கீகரிக்கப்படாத தொலைத்தொடர்பு சாதனங்களை விற்பனை செய்தல், விற்பனையாளர்களால் அங்கீகரிக்கப்படாத தொலைத்தொடர்பு உபகரணங்களை விற்பனை செய்தல் மற்றும் பொது மக்களுக்கு சட்டவிரோத தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குதல் (சரியான உரிமம் இல்லாமல் சேவை வழங்குனர்களால் வழங்கப்படுவது) குறித்து பொருத்தமான ஒழுங்குபடுத்தல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

நுகர்வோர் முறைப்பாடுகளின் கீழ், விசாரணைகள், தீர்வு ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் மற்றும் உரிமம் பெற்ற செய்படுத்துனர்களின் உதவியுடன் பின்வரும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன;

- தொல்லை அழைப்புகள், தேவையற்ற எஸ்எம்எஸ், முகநூல், வட்ஸ்அப் / வைபர் / இமோ போன்றவை.
- ஏடீஎஸ்எல் (ADSL) மற்றும் பீஓ ரீவீ (Peo TV) சிக்கல்கள்
- எஸ்.எல்.ரீ, மொபிடெல் (தனியார்) லிமிடெட், டயலொக் (தனியார்) லிமிடெட், ஹட்ச்சன் எடிசலாட் (தனியார்) லிமிடெட், ஏயார்டெல் (தனியார்) லிமிடெட், லங்கா பெல் மற்றும் டயலாக் போர்ட் பேண்ட் என்பவற்றின் தொலைத்தொடர்பு சிக்கல்கள்.
- தொலைத்தொடர்பு கம்பங்கள், கையடக்கத் தொலைபேசிகளின் விற்பனை, சிம்களை சட்டவிரோதமாக வழங்குவது தொடர்பான தொலைபேசி சிக்கல்கள்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (ஆர்ரீஐ) கீழ் ஏனைய நிறுவனங்கள் கோரிய தகவல்கள் சட்ட ஆலோசகர்களின் உதவியுடன் சமர்ப்பிக்கப்பட்டன.

மாணவர்கள், அதிபர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேலும், நியாயமான தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் சூழலை உறுதி செய்வதற்காக இலத்திரனியல் ஊடகங்கள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஸ்டிக்கர்கள் மூலம் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களின் உதவியுடன், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) பொலிஸ் நிலையங்களுடன் ஒருங்கிணைந்து கையடக்கத் தொலைபேசிகளைக் கண்டுபிடிப்பதற்கும், 2018 முதல் பிரதேச செயலகங்களால் இறந்ததாக அறிவிக்கப்பட்ட / உறுதிப்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சிம்களை செயலிழக்கச் செய்வதற்கும் ஒருங்கிணைந்து செயற்பட்டது.

குற்றவியல் மற்றும் சிவில் விசாரணைகளுக்காக செயற்படுத்துனர்கள் சமர்ப்பித்த அழைப்பு பதிவுகள் மற்றும் உரிமை விபரங்களை பகுப்பாய்வு செய்ய இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) பொலிஸ்

நிலையங்களுக்கு தேவையான தகவல்களை வழங்கியது.

நுகர்வோர் முறைப்பாடுகள், தகராறுகளைத் தீர்ப்பதற்காக தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினர்களுடன் கூட்டங்களும் கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டன.

அனைத்து செயற்படுத்துனர்களும் தொழில்துறையில் ஆரோக்கியமான போட்டியை பராமரிக்கும் நோக்கத்துடன் ஒன்றோடொன்று தொடர்பான தீர்மானங்களை மீளாய்வு செய்வது குறித்து தங்கள் கருத்துக்களை சமர்ப்பித்துள்ளனர். இந்த காலகட்டத்தில் ஒன்றோடொன்று தொடர்பு மோதல்கள் இடம்பெறாததுடன் சிறப்பம்சமாக வரையப்பட்ட அனைத்து போட்டி சிக்கல்களும் கால எல்லைக்குள் கையாளப்பட்டன.

தொலைத்தொடர்புத் துறையில் வெளிநாட்டு வல்லுனர்கள் மற்றும் தொழிலாளர்கள் தொடர்பான அனைத்து விசா பரிந்துரைகளும் இந்த காலகட்டத்தில் செயல்படுத்தப்பட்டன.

உரிமம் பெற்ற செயற்படுத்துனர்களின் நிதி மற்றும் செயற்பாட்டு செயற்திறன் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் மேலும் தொழிற்துறை புள்ளிவிபர அறிக்கைகள் செயற்படுத்துனர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டன. அறிக்கைகள் மத்திய வங்கி மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் என்பவற்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தொலைத்தொடர்பு வரி (ரீ.எல்) மற்றும் செஸ் கட்டணங்களின் கீழ் சேகரிக்கப்பட்ட தொகை முறையே ரூபா 16,486 மில்லியன் மற்றும் ரூபா 4,498 மில்லியன் ஆகும். செல்லூலர் கோபுர வரியின் மொத்த சேகரிப்பு ரூபா 1,384 மில்லியனாகவும் மொத்த எஸ்எம்எஸ் வரி சேகரிப்பு ரூபா 419 மில்லியனாவும் இருந்தன.

17 ஆம் பிரிவில் உரிமம் பெற்ற செயற்படுத்துனர்கள் சமர்ப்பித்த கட்டண திட்டங்களை ஆராய்ந்த பின்னர், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) 03 நிரந்தர கட்டணங்கள், 12 விளம்பர கட்டணங்கள் மற்றும் 09 பருவகால விளம்பர சலுகைகளுக்கு அங்கீகாரம் அளித்தது. தொழில்துறை தேவைகளின் ஆலோசனையுடன் கட்டண வழிகாட்டுதல்களில் திருத்தம் தொடங்கப்பட்டது. டிஜிட்டல் நிதி சேவைகளுக்கான எஸ்எம்எஸ் கட்டணங்கள் மற்றும் "இ-கிராம நிலதாரி" திட்டத்தின் கீழ் தாவுகைகளுக்கான சிறப்பு கட்டண தொகுப்பு தொடர்பான தீர்மானங்களை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்புத் துறையின் ஈடுபாடுகளில் விலைகளைக் குறைப்பதானது சனத்தொகையில் மிகக் குறைந்த வருமானத்தையே அடையமுடியும். மறுபுறம், விலைகள் மிகக் குறைவாக இருந்தால், அது தொழில்துறையின் நீண்டகால நிலைபேறான தன்மையை அச்சுறுத்தும். இந்த இரண்டு காரணிகளுக்கும் இடையில் சமநிலைப்படுத்துவதில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு பொறுப்பாகவுள்ளது. கடந்த ஆண்டில் வட்டி வீதத்தை நீக்கிய பின்னர், இந்த ஆண்டு நிகர குரல் தொகுப்புகளில் வரையறையற்ற வகையில் ஆணைக்குழு அங்கீகாரம் அளித்தது. இது ஒரு நல்ல நடவடிக்கையாக இருந்ததுடன் இது தொழில்துறையின் நிலைபேறான தன்மைக்கு உதவியது. இந்த ஆண்டு தரவுக் கட்டணங்களும் சந்தையில் ஒரு ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்துவதில் ஓரளவு நீங்கியிருந்தன.

நாட்டில் பாதுகாக்கப்படாத மற்றும் வசதி குறைந்த பகுதிகளை அடையாளம் காண "கமட்ட சன்னிவேதனய" ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. இந்த திட்டத்தின் முதல் கட்டம் பொலன்னறுவை, களுத்துறை, குருநாகல் மாவட்டங்களில் நடத்தப்பட்டது. பீஎஸ்ரீஎன் செயற்படுத்துனர்களுடன்

கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன, மேலும் அவர்கள் தொலைத்தொடர்பு நெட்வேர்க் கவரேஜை மேம்படுத்த தங்கள் பங்களிப்பை வழங்க சம்மதித்தனர்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலக அலுவலகங்களிலும், இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள 16 பிரதேச செயலக அலுவலகங்களிலும் தொலைத்தொடர்பு / தகவல் தொழில்நுட்ப (ICT) கழிவுப்பொருட்களை முறையாக அகற்றுவது அல்லது மாற்றுப்பயன்பாடு செய்வது குறித்து விழிப்புணர்வு பிரசாரங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

உரிமம் பெற்ற செயற்படுத்துனர்களின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் சேகரிப்பு நிறைவடைந்துள்ளது. சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர் வரி பெறப்பட்டதுடன் வெளிச்செல்லும் சர்வதேச தொலைபேசி அழைப்பு வரியான ரூபா 3.00 தொகை நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2019.05.14 ஆந் திகதிய 2123/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் 2019 யூன் 01 முதல் நீக்கப்பட்டது. டயலொக் புரேட்பேண்ட் நெட்வேர்க்குகள் (தனியார்) லிமிடெட் நிறுவனத்திற்கான இணைய சேவை வழங்குநர் உரிமங்களை வழங்குதல் (வசதி இல்லாத அடிப்படையில்) செயற்படுத்தப்பட்டு வருவதுடன் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பொறுப்பான அமைச்சருக்கு பரிந்துரைக்கப்படுவதற்கு முன்பு பொது அறிவிப்பு வெளியிட தயாராக உள்ளது.

செப்பு அல்லது ஒளியியல் பைபர் நெட்வேர்க்குகள், கடலுக்கடியில் கேபிள் தரையிறங்கும் நிலையங்கள் மற்றும் தொலைத்தொடர்பு அண்டெனா கோபுரங்கள் போன்ற தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புகளை நிறுவுதல் என்பன உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் கீழ் கண்காணிக்கப்படுகிறது. மேலே குறிப்பிடப்பட்ட பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி புதிய சேவைகளை அறிமுகப்படுத்தவும், தற்போதுள்ள நெட்வேர்க்குகளின் விரிவாக்கத்திற்கான அனுமதியைப் பெறவும் தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு தொடர்பான அங்கீகாரங்களை ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் வெளியிடுகிறது. தவிர, தொலைத்தொடர்பு துறையின் நிலைபேறான வளர்ச்சியைப் பேணிச்செல்கையில் சுற்றுச்சூழல் பாதிப்புகள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள், தேசிய பாதுகாப்பு மற்றும் பொது நலன்கள் தொடர்பான விடயங்களும் இந்த அங்கீகார செயற்பாட்டில் பரிசீலிக்கப்படுகின்றன. நிர்மாணிக்கப்பட்ட தொலைத்தொடர்பு கோபுரங்களின் மொத்த எண்ணிக்கை 7160 ஆக உயர்வடைந்துள்ளது. இதில் 275 புதிய கோபுரங்கள் உள்ளன.

புரோட்பேண்ட் இயலளவு மேம்படுத்தப்பட வேண்டிய குறிப்பிட்ட பகுதிகளை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, நெட்வேர்க் இயலளவு தொடர்பான விபரங்களை தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் சமர்ப்பித்தனர்.

தொலைத்தொடர்பு துருவத்திற்கான வழிகாட்டுதல்களைத் தயாரிப்பதற்கும், செப்பு மற்றும் இழை கேபிள்களை இடுவதற்கும் நெட்வேர்க் பிரிவு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து பார்வைகள், அவதானிப்புகள் மற்றும் கருத்துகளைப் பெறுவதன் மூலம் வரைவு வழிகாட்டுதல் தயாரிக்கப்பட்டு வருவதுடன் இந்த செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

ஐபீவி6 வீதி வரைபடத்தைத் (Road Map) தயாரிப்பது தொடர்பான வினாக்கொத்து ஐபீவி6 செயற்படுத்தலில் சர்வதேச சிறந்த நடைமுறைகளில் ஈடுபட்டுள்ள செயற்படுத்துனர்கள் மத்தியில் தரவுகளை சேகரிக்க அனுப்பப்பட்டது. சர்வதேச நிபுணர்களின் ஆலோசனையுடன் இந்த பணியைத் தொடர்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

என்ஜீஎன் ஐ அமுல்படுத்த ஒரு திட்டத்தை வகுக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. அமுல்படுத்தும் திட்டம் தொடர்பான நடவடிக்கைகளை கண்காணிக்க தொடர்புடைய பிரிவுகளில் இருந்து ஒரு குழு நியமிக்கப்படும்.

தொலைத்தொடர்பு எண் ஒரு பற்றாக்குறை வளமாகக் கருதப்படுவதுடன் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) இலங்கையின் தேசிய எண் திட்டத்தை நிர்வகிக்கிறது. பொதுமக்கள் அல்லது வாடிக்கையாளர்களால் விரைவான அணுகல் தேவைப்படும் நிறுவனங்களுக்கு குறுகிய குறியீடுகள் ஒதுக்கப்படுகின்றன. இந்த ஆண்டு 11 அரசாங்க நிறுவனங்கள் மற்றும் 07 தனியார் துறை அமைப்புகளுக்கு குறுகிய குறியீடுகள் ஒதுக்கப்பட்டன. தொலைத்தொடர்பு சட்டத் திருத்தம் பூர்த்தி செய்யப்படும் வரை செயற்படுத்துனர்களுக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிடல் தொகுதிகளுக்கு கட்டணமிடும் முறையைத் தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. தற்போதுள்ள எண்ணிடல் திட்டத்தை மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை முன்மொழிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய 3 - இலக்க குறுகிய குறியீட்டு எல்லை மற்றும் அவசர அழைப்பு எண்களுக்கு ஆணைக்குழு அங்கீகாரம் பெறப்பட்டது.

கேபிள் டிவி நெட்வேர்க் அமைப்புகளிலிருந்து புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவற்றின் செயல்பாடுகளை கண்காணிக்கத் தொடங்கின.

விற்பனையாளர் உரிமத்தை வழங்குவதற்கான விண்ணப்பத்தை மாற்ற ஆணைக்குழு அங்கீகாரம் பெறப்பட்டது. விற்பனையாளர் உரிமங்களை வழங்குவதற்கான நடைமுறையை மறுசீரமைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உரிமம் வழங்கும் நடைமுறைக்கு தற்போதுள்ள உரிமம் வழங்கும் வழிகாட்டுநெறிகளை திருத்துவதற்கும், பிரிவு 17 இலுள்ள உரிமங்களை புதுப்பிப்பதற்கும் மாற்றியமைப்பதற்கும் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தப் பணிகளும் நடந்து வருகின்றன.

தற்போதுள்ள வரைவு உரிம கட்டமைப்பு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. வரைவு உரிம கட்டமைப்பின் பொதுமக்கள் ஆலோசனையை செயற்படுத்த முடியாது. ஏனெனில் இதற்காக சட்டத்தில் திருத்தங்கள் செய்யவேண்டிய தேவை உள்ளது. தற்போதைய உரிம ஆட்சியில் உள்ள முக்கிய நடைமுறை சிக்கல்களைத் தீர்க்கவும், தற்போதுள்ள சட்ட கட்டமைப்பிற்குள் ஒருங்கிணைந்த உரிம ஆட்சியை அமுல்படுத்தவும் ஐரீயூ ஆலோசகரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முன்மொழியப்பட்டது. தற்போதுள்ள உரிம கட்டமைப்பின் திருத்தம் பொதுமக்கள் ஆலோசனையை நடத்திய பின்னர் செய்யப்படும். ஒரு ஐரீயூ ஆலோசகரின் சேவைகளின் தேவை ஐரீயூ இற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அது செயற்படுத்தப்படுகின்றது.

இந்த ஆண்டு ஸ்பெக்ட்ரம், நெட்வேர்க்குகள், இணக்கம், போட்டி, உரிம முகாமைத்துவம், நிர்வாகமும் கொள்கையும் மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவுகளால் குறிப்பிடப்பட்ட விடயங்களில் சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டன. ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் மற்றும்

முன்முயற்சிகளுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்கியது. ஆறு நீதிமன்ற வழக்குகள் முடிவுக்கு வந்துள்ளன.

பல உடன்படிக்கைகளுக்கு வரைவு மற்றும் சட்ட அனுமதி வழங்கப்பட்டது. வரைவு கடிதங்கள், உடன்படிக்கைகள், கேள்வி ஆவணங்கள் போன்றவற்றை மீளாய்வு செய்தல் போன்றன. ஊழியர்களின் கடன் சான்றிதழ்கள், நீதிமன்ற உத்தரவுகளை செயற்படுத்துதல், தகவல் அறியும் கோரிக்கைகள் ஆகியவை மீளாய்வு செய்யப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.

சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ஐ.ரீ.யூ), ஆசிய பசுபிக் தொலைத்தொடர்பு (ஏ.பீ.ரீ), தெற்காசிய தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் கவுன்சில் (எஸ்.ஏ.ரீ.ஆர்.சீ), பொதுநலவாய தொலைத்தொடர்பு அமைப்பு (சீ.ரீ.ஓ) மற்றும் உட்கட்டமைப்பு ஒழுங்குபடுத்தலுக்கான தெற்காசிய கூட்டமைப்பு (எஸ்ஏஎப்ஐஆர்) போன்ற சர்வதேச அமைப்புகளில் இலங்கை உறுப்பினராக உள்ளது. இந்த சர்வதேச நிறுவனங்களின் உறுப்புரிமையைத் தொடர வருடாந்த அடிப்படையில் அங்கத்துவப் பணம் செலுத்தப்படுன்றது. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) தொலைத்தொடர்பு / தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் துறையில் திறனை வளர்ப்பதற்கான தொழில்நுட்ப உதவி, நிபுணர் உதவி, செயற்திட்ட திட்டங்கள் மற்றும் கூட்டுறவு வாய்ப்புகளை இந்த சர்வதேச அமைப்புகளிடமிருந்து பெற்றுள்ளது.

“உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சங்க தினம்” (WTISD) ஒவ்வொரு ஆண்டும் மே 17 ஆந் திகதி வருகின்றது. 2019 ஆம் ஆண்டிற்கான WTISD நோக்கம் “தரநிலைப்படுத்தல் இடைவெளியைக் கட்டுப்படுத்துதல்” ஆகும். ஐரீயூ தனது 154 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவும், இலங்கை சமூகத்தினரிடையே WTISD இன் கருப்பொருள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த நாளில் உறுப்பு நாடுகளை அழைத்தது. மேற்கூறிய கருப்பொருள் தொடர்பாக அச்சு ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பொது விழிப்புணர்வை ஏற்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. WTISD சிறப்பு செய்திகள் அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதமர், கௌரவ தொலைத்தொடர்பு மற்றும் ஐ.சி.ரீ அமைச்சர், ஐ.ரீ.யூ பொதுச் செயலாளர், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் எங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டனர்.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) இலங்கையின் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் உதவியுடன் தொலைத்தொடர்பு துறையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை நடத்துகிறது. றுஹுணு பல்கலைக்கழகம் 2018/2019 காலகட்டத்தில் “இலங்கையில் ஈஓ / ஐஆர் அடிப்படையிலான கடல்சார் கண்காணிப்பு” குறித்து ஒரு ஆய்வு நடத்தியதுடன் இரண்டு முன்னேற்ற கண்காட்சிகள் நடத்தப்பட்டன. பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் 2019/2020 காலத்திற்கான ஆராய்ச்சி திட்டங்களை சமர்ப்பிக்க அழைக்கப்பட்டன. ஏழு ஆராய்ச்சி திட்டங்களில், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) ஆராய்ச்சி குழு இரண்டு திட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்ததுடன் அவற்றின் ஆரம்ப கண்காட்சிகள் நடத்தப்பட்டன.

ஐ.ரீ.யூ இன் வழிகாட்டுதலுடன், ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இந்த ஆண்டு உள்ளூர்

ஐ.சீ.ரீ தொண்டர் திட்டத்தை ஒரு முதன்மைத் திட்டமாக சர்வதேச ஐ.சீ.ரீ தொண்டர் திட்டத்தை மறுசீரமைப்பதன் மூலம் ஏற்பாடு செய்தது. கல்வி அமைச்சு, தொழிற்பயிற்சி அதிகாரசபை (வீ.ரீ.ஏ), நைட்டா, பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களின் உதவியுடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த திட்டத்தின் நோக்கம் குறிப்பாக புறக்கணிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் தொலைதூரத்தில் வசதிகளற்ற பகுதிகளில் உள்ள மாணவர்கள் மத்தியில் ஐ.சீ.ரீ கல்வியறிவை மேம்படுத்துவதாகும். ரீ.ஆர்.சீ.எஸ்.எல், வீ.ரீ.ஏ மற்றும் நைட்டா அமைப்புகளின் வேண்டுகோளின் பேரில், இந்த திட்டத்திற்காக என்.வி.கிவ்யூ நிலை 4 மற்றும் 5 (ஐ.சீ.ரீ. இன் தேசிய சான்றிதழ்) தேர்ச்சி பெற்று சித்தியடைந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களை பரிந்துரைத்தது. ஒரு நேர்முகப்பரீட்சையின் மூலம் பதினாறு மாணவர்கள் ஐ.சீ.ரீ தொண்டர்களாக தேர்வு செய்யப்பட்டனர். இந்த தொண்டர்களுக்கு பூட்கேம்ப் மூலம் ஒரு மாதம் பயிற்சி அளிக்கப்பட்டது. அதன்பிறகு, அவர்கள் அனுராதபுரம், பொலன்னறுவை, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உள்ள பதினாறு பாடசாலைகளுக்கு (ஒரு பாடசாலைக்கு ஒரு தொண்டர்) இரண்டு மாத காலத்திற்கு அனுப்பப்பட்டனர். உள்ளூர் ஐ.சீ.ரீ தொண்டர் திட்டத்தின் பயனாளிகளில் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் ஒரு சில ஆசிரியர்களும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளூர் ஐ.சீ.ரீ தொண்டர் திட்டம் ஒரு முதன்மைத் திட்டமாக நடத்தப்பட்டது, இதன் விளைவாக ரீ.ஆர்.சீ.எஸ்.எல் அடுத்த ஆண்டுகளில் பயிற்சியாளருக்கு பயிற்சியளிப்பதன் மூலம் ஐ.சீ.ரீ திறன்களை வளர்ப்பதற்கான ஒரு பெரிய திட்டத்தைத் தொடங்க முடியும்.

வெளிநாட்டு பயிற்சி / ஆய்வு வருகைகளுக்கு, முன் பயிற்சி குழுவின் பரிந்துரைகள் மற்றும் பயிற்சி தேர்வுக் குழுவின் அங்கீகாரத்துடன் 54 அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டனர். இந்த காலகட்டத்தில் 11 உயர்மட்ட பயிற்சி குழு கூட்டங்கள் (ஏரீசீ) மற்றும் 10 பயிற்சி தெரிவுக் குழு (ரீஎஸ்சீ) கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான எஸ்.ஏ.ரீ.ஆர்.சி செயற்குழுவின் கூட்டத்தை 2019 யூலை 25 முதல் 26 வரை இலங்கையில் கொழும்பில் நடாத்தியது. இந்த கூட்டத்தில் எஸ்.ஏ.ரீ.ஆர்.சி உறுப்பினர்கள் மற்றும் இணை உறுப்பினர்கள் கலந்து கொண்டு கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் பிரச்சினைகள், அதன் உறுப்பினர்களுக்கு பொதுவான கவலைகளின் சவால்கள், எடுக்கப்படும் தீர்வுகள் மற்றும் உறுப்பு நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்க்க தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இந்த கூட்டத்திற்கு 19 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஐ.ரீ.யூ இன் வேண்டுகோளின் பேரில், ஐ.ரீ.யூ தொலைத்தொடர்பு / 2019 இன் ஐ.சீ.ரீ ஒழுங்குபடுத்தல் ஆய்வு, ஐ.ரீ.யூ ஐ.சீ.ரீ குறிகாட்டிகள் வினாக்கொத்து மற்றும் உலகளாவிய சைபர் பாதுகாப்பு அட்டவணை (ஜீ.சீ.ஐ) வினாக்கொத்து ரீ.ஆர்.சீ.எஸ்.எல் மற்றும் பங்குதாரர்களின் ஏனைய பிரிவுகளின் ஆதரவுடன் நடத்தப்பட்டன. வழங்கப்பட்ட தரவு உலக தொலைத்தொடர்பு / ஐ.சீ.ரீ குறிகாட்டிகள் தரவுத்தளம், ஐ.ரீ.யூ இன் புள்ளிவிபர வெளியீடுகள் மற்றும் உலக வங்கி வெளியீடுகள் போன்றவற்றை நாளதுவரையாக்கப் பயன்படுத்தப்பட்டது.

2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் திகதி திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை

தொலைத்தொடர்புகள் சட்டத்தின் படி முறைமை, அதிர்வெண், விற்பனையாளர், அமெச்சூர் வானொலி, கப்பல் நிலையம், விமான உரிமக் கட்டணம், செஸ், அதிர்வெண் முற்பணம், குறியீடு இல்லாத தொலைபேசி விநியோக கட்டணங்கள், பரீட்சை, விண்ணப்ப செயற்பாடுகள், குறுகிய குறியீட்டுக் கட்டணம் என ரூபா 16,175 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டதுடன் அதே காலகட்டத்தில் தொடர்புடைய சட்டங்களின்படி வரிகளாகவும் ரூபா 22,400 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது.

தொலைத்தொடர்பு சட்டம், தொலைத்தொடர்பு வரி சட்டம் மற்றும் நிதிச் சட்டத்தின் படி சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூ. 38,575 மில்லியன் ஆகும். அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், கணனிகள் மற்றும் ஏனைய அலுவலக தேவைகளுக்கு ரூபா 62.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டதுடன் மக்கள் வங்கியில் நாளாந்த பண சந்தை பரிவர்த்தனைகளிலிருந்து ரூபா 310.4 மில்லியன் தொகை வட்டியாக உழைக்கப்பட்டிருந்தது.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) 27.6 பில்லியன் தொகையை திரண்ட நிதிக்கு மாற்றியிருந்தது. ஆணைக்குழு அதன் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளின் மூலம் அடுத்த ஆண்டுகளில் ஈட்டப்படுகின்ற வருமானம் நாட்டின் அரசாங்க திரண்ட நிதிக்கு கணிசமான வருமான மூலமாக உள்ளது.

இந்த காலகட்டத்தில், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) கணக்காய்வு ஐயவினாக்களை கலந்துரையாடுவதற்கு நான்கு கணக்காய்வு குழு கூட்டங்களை நடாத்தியதுடன் அதன்படி தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

ஆணைக்குழு சட்டம், ஒழுங்குபடுத்தல், தொழில்நுட்ப மற்றும் நிர்வாக அம்சங்கள் தொடர்பான விடயங்களைத் தீர்க்க பதினொரு சபைக் கூட்டங்களை நடத்தியது.

ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் 2019 ஆம் ஆண்டின் வருடாந்த பாதீடு, 2019 இன் நிதி அதிகாரப் பகிர்வு அறிக்கை, 2018 இன் வருடாந்த நிதிநிலைமை அறிக்கை என்பன பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன.

காலாண்டு நிதிநிலைமை அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு நிதி அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சு மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகம் என்பற்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

2019/20 வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான சுய மதிப்பீட்டு அடிப்படையில் காலாண்டு வருமான வரி பூர்த்தி செய்யப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பின்வருமாறு பணம் செலுத்தப்பட்டது; 1 ஆம் காலாண்டில் ரூபா 940.6 மில்லியன், 2 ஆம் காலாண்டில் ரூபா 934.7 மில்லியன், 3 ஆம் காலாண்டில் ரூபா 926.2 மில்லியன் மற்றும் 4 ஆம் காலாண்டிற்கான கட்டணம் 2020 பெப்ரவரி மாதம் செலுத்தப்பட உள்ளது.

2018/2019 வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரியின் இறுதி கொடுப்பனவுகளின் கணிப்பீடுகள் 2019 செப்தெம்பரில் செய்யப்பட்டதுடன் அந்த தொகை ரூபா 1,524 மில்லியன் ஆகும்.

2006 ஆம் ஆண்டின் பழைய உள்நாட்டு இறைவரிச் சட்டம் 10 இன் படி, இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) வட்டி வருமானத்திற்கு மட்டுமே வருமான வரிக்கு பொறுப்பாகும். முக்கிய வருமான மூலம் வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, அந்தச் சட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ரூபா 627

மில்லியன் வருமான வரி குறைவடைந்துள்ளது.

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்படி, இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) தற்போது 2018/04/01 முதல் நடைமுறைக்கு வரும் மொத்த வருமானம் மீதான வருமான வரிக்கு பொறுப்பாகும். முன்னர் அனுபவித்த அனைத்து விலக்குகளும் புதிய சட்டத்தால் இரத்து செய்யப்பட்டன. எனவே, ஆண்டுக்கு புதிய வருமான வரி தொகை அண்ணளவாக ரூபா 3,600 மில்லியனாக இருக்கும்.

தொலைத்தொடர்பு வரி சட்டம் மற்றும் நிதிச் சட்டத்தின் கீழ் மாதாந்த சட்டரீதியான சேகரிப்பு சேகரிக்கப்பட்டு பொதுத் திறைசேரிக்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பின்வருமாறு அனுப்பப்பட்டது; 1 ஆம் காலாண்டு - ரூபா 4,890 மில்லியன், 2 ஆம் காலாண்டு - ரூபா 5,170 மில்லியன், 3 ஆம் காலாண்டு - ரூபா 4,900 மில்லியன் மற்றும் 4 ஆம் காலாண்டு - ரூபா 4,708 மில்லியன்.

இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) தற்போதைய தேவை மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் இலங்கையில் உள்ள தொலைத்தொடர்பு துறைக்கு நாளதுவரையான சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, நிறுவன பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தை (எஸ்.ஓ.ஆர்) அமுல்படுத்தவும் மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக மீளாய்வு செய்து பரிந்துரைகளை வழங்கவதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று ஊழியர்களின் வெற்றிடங்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் நடைமுறையில் உள்ள தேவைகளுக்கு ஏற்ப நிரப்பப்பட வேண்டும். உதவி பணிப்பாளர் - நிதி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ய திறந்த போட்டிப் பரீட்சை நடைபெற்றதுடன் அப்பரீட்சையில் சித்தியடைந்த 14 விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். பதவிகளுக்கு தகுதிவாய்ந்த இரண்டு விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர், ஒருவர் 2019.08.01 அன்று கடமையை ஏற்றுக்கொண்டார், மற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் உரிய நேரத்தில் கடமைகளை ஏற்றுக்கொள்வார். இந்த ஆண்டில், 29 ஊழியர்கள் நிரந்தர அடிப்படையிலும் 17 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் ஏனைய வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர்.

தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் (தரம் II), அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (தரம் I), முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்ப - தரம் I மற்றும் II), முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்பமற்ற - தரம் I மற்றும் II), அலுவலக உதவியாளர்கள் (தரம் I) மற்றும் உள்ளக கணக்காய்வாளர் ஆகியோருக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளை நடத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், தனிப்பட்ட உதவியாளர்களை தலைவர், செயலாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோாரின் செயலாளர் பதவிகளுக்கு பதவி உயர்த்துவதற்காக உள்ளக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, நிறுவனத்தின் வெற்றிடமாக உள்ள பதவிகளை நிரப்ப எழுத்து மூல போட்டிப் பரீட்சை / நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டன. தவிர, நான்கு அலுவலக உதவி ஊழியர்களும் முகாமைத்துவ உதவியாளர் (தரம் II) பதவிக்கு உயர்த்தப்பட்டனர். மேலும் இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள் தங்கள் சேவைத் தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னர்

II ஆம் தரம் முதல் I ஆம் தரம் வரை பதவி உயர்த்தப்பட்டனர். நுகர்வோர் உறவுகள் உத்தியோகத்தர் பதவிக்கு இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) தகைமையுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் இன்னும் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படவில்லை. உள்ளக கணக்காய்வாளர் (தொழில்நுட்ப - பணி அடிப்படையில்) பதவிக்கு விண்ணப்பங்களை கோருவதற்கு ஒரு பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டது. தேவையான பிரிவுகளுக்கு திறமையான சேவையை வழங்க உள்ளக இடமாற்றங்கள் மற்றும் கடமை மேவுகை பதிலீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஓய்வூதிய பணிக்கொடைகள் கணக்கிடப்பட்டு ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டன.

2018 இன் பதவியணியினர் பரிசோதனை குறித்த கணக்காய்வு ஐயவினாக்கள், இரண்டாம் நிலை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வு ஆகியவற்றிற்கு பதிலளிக்கப்பட்டன.

இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) ஆண்டுதோறும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளின் செயற்திறனை மேம்படுத்துவதற்காக காலாண்டு செயல்முன்னேற்ற மீயாய்வுக் கூட்டங்களை நடாத்தியது. செயல்நடவடிக்கைத் திட்டம், காலரீதியான கூட்டிணைந்த திட்டம், செயல்முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் 2018 இன் வருடாந்த அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அரசாங்க உத்தரவுகளின்படி, நிறுவனத்தின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் வெளிநாட்டு திட்டங்கள் குறித்த சுற்றறிக்கைகள் வழங்கப்பட்டன.

இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) 55 உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சி திட்டங்களுக்கு ஊழியர்களின் அறிவு, அணுகுமுறை, திறன்கள் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதற்காக நிறுவனத்தின் நலனுக்காக உதவியது. கூடுதலாக, இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) சிரேஸ்ட ஊழியர்கள் பல உயர்மட்ட சர்வதேச ஆய்வுக் குழு கூட்டங்கள், மாநாடுகள் மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் விவகாரங்கள் தொடர்பான மாநாடுகளில் கலந்து கொண்டனர்.

ஆணைக்குழு 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பெறுகைத் திட்டத்திற்கு அங்கீகாரம் அளித்தது. இந்த காலகட்டத்தில், சிறிய பெறுகை குழுவின் 14 கூட்டங்களும், சிரேஸ்ட பெறுகை குழுவின் 18 கூட்டங்களும் நடத்தப்பட்டன.

2019 இன் கூட்டிணைந்த பெறுகைத் திட்டம் படி, அலுவலக உபகரணங்கள், கணனி பாகங்கள், கணனி அமைப்பு மென்பொருள், தொழில்நுட்ப உபகரணங்கள், அலுவலக தளபாடங்கள், வேலைகள் மற்றும் சேவைகள் தொடர்பான பெறுகைகள் நிறைவடைந்துள்ளது.

உற்பத்தித்திறன் எண்ணக்கரு விழிப்புணர்வு திட்டம் இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) ஊழியர்களுக்கு உற்பத்தி செயலகத்தின் உதவியுடன் அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) பொருள் மெய்மையாய்வை பூர்த்திசெய்து சமர்ப்பித்துள்ளது.

இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) நெட்வேர்க் சூழலில் அங்கீகரிக்கப்படாத அணுகல், சாதன பாதிப்புகள் மற்றும் வைரஸ் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) ஒரு உயர்நிலை பாதுகாப்பு அமைப்பை நிறுவியுள்ளது. முன்கூட்டியே பாதுகாப்புக் கொள்கைகள் மூலம் நெட்வேர்க்கை விரைவுபடுத்துவதற்கும் இணைய அணுகலை வடிகட்டுவதற்கும் இந்த அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

365 மைக்ரோசொ.ஃப்ட் ஒபிஸ் பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு ஊழியர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்காக செய்து பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

ஈஆர்பீ (நிறுவன வள திட்டமிடல்) முறையை அமுல்படுத்துவது தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு, நிர்வாக மற்றும் நிதி பிரிவுகளில் பூர்வாங்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

20 அணுகல் புள்ளிகளின் நிறுவல் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் வை-பை இயலளவை மேம்படுத்த 10 அணுகல் புள்ளிகளை இறக்குமதி செய்ய எதிர்பார்த்திருக்கின்றது. நிர்வகிக்கக்கூடிய உயர்நிலை ஆழிகளுக்காக ஒரு புதிய கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) பிணை பாதுகாப்பை மேம்படுத்த விபரக்குறிப்பின் வரைவு பதிப்பு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) லானின் பாதிப்பு மதிப்பீட்டை ஆரம்பித்ததுடன் கோரிக்கை எம்.ஓ.டீ இன் சி.ஆர்.டி அலகுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதனை நுழைவாயிலில் வாடிக்கையாளர் பதிவு முறையை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக விபரக்குறிப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஈஆர்பீ திட்டத்தை பூர்த்திசெய்த பின்னர் இது தொடரப்படும்.

தரைமட்ட கேட்போர்கூடத்தை ஸ்மார்ட் கேட்போர்கூடமாக மாற்றுவதற்கும், பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் ஒரு ஸ்மார்ட் மாநாட்டு மண்டபத்தை அமைப்பதற்கும் வரைவு திட்டங்கள் நிர்வாக பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஸ்மார்ட் மாநாடு மற்றும் ஸ்மார்ட் கேட்போர்கூடத்தின் இறுதி விபரக்குறிப்புகள் ஏற்கனவே விசேட திட்டங்கள் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) புதிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் நோக்கில் இந்த திட்டத்தை அவர்கள் உள்ளடக்கியிருப்பதை விசேட திட்ட பிரிவு உறுதிப்படுத்தியது.

இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) வலைத்தளத்தின் மறு வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி என்பன செயற்பாட்டில் உள்ளது. இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) புதுப்பித்தல் உரிமத்தை 365 அலுவலகங்களுக்கு பூர்த்திசெய்துள்ளது.

கொழும்பு தாமரை கோபுரத்தை 2019.09.16 ஆந் திகதி அதி மேதகு சனாதிபதி திறந்து வைத்தார். தாமரை கோபுரத்தின் திறப்பு விழாவில் இலங்கைக்கான சீனத் தூதர், பாராளுமன்ற சபாநாயகர், இராணுவம் மற்றும் கடற்படைத் தளபதிகள் மற்றும் ஏனைய

உள்ளூர் மற்றும் சர்வதேச பிரமுகர்கள் கலந்து கொண்டனர். திட்ட வணிகமயமாக்கல் பூர்த்திசெய்யப்பட்டதும் கொழும்பு தாமரை கோபுர நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதுடன் அது செயற்பாட்டில் உள்ளது.

தாமரை கோபுர தொகுதி 02 இன் கலப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வாகன நிறுத்துமிட வசதிகளுடன் 3 ஏக்கர் நிலத்தை ஒரு பல்நோக்கு பொழுதுபோக்கு வளாகமாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நில ஒதுக்கீட்டிற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) நடவடிக்கை எடுக்கின்றது. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) அருகிலுள்ள நிலத்தை நிர்மாணித்து செயற்படுத்துதல் மற்றும் மாற்றுதல் (பீஓரீ) அடிப்படையில் உருவாக்க முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக ரீ.ஆர்.சீ.எஸ்.எல் அங்கீகரித்தல் பணியை ஆரம்பித்துள்ளது.

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழு அளித்த உத்தரவுப்படி, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு ஐரீ பார்க் அம்பாந்தோட்டடை கட்டிட நிர்மாணத்தை தற்காலிகமாக நிறுத்த முடிவு செய்தது. பொது தனியார் கூட்டு உடன்படிக்கைக்கு பொருத்தமான முதலீட்டாளர்களை அடையாளம் கண்ட பின்னர் நிர்மாண பணிகள் தொடங்கப்படும். ஒப்பந்தக்காரரின் உரிமைகோரலுக்கான பிரச்சினை தற்போது பிணக்குள் தீர்க்கும் நடுவர் நிலையில் உள்ளது.

இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) தலைமை அலுவலக விரிவாக்க கட்டிடத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருவதுடன் 2020 ஆம் ஆண்டில் அதை முடிக்க திட்டமிடப்பட்டது. இந்த ஐந்து மாடி இரும்பினால் கட்டமைக்கப்பட்ட புதிய கட்டிடத் திட்டம் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் (பீ.சீ.யூ) திட்ட ஆலோசனை பிரிவின் மேற்பார்வையில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்திற்கு இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) நிதியைப் பயன்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. அபிவிருத்தி அனுமதி பெறப்பட்டதுடன் விரிவான வடிவமைப்புகள் மற்றும் திட்டத்தின் கேள்விநடைமுறை ஆகியவை பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

மொரட்டுவ பல்கலைக்கழகம் கதிரான அதிர்வெண் கண்காணிப்பு வளாகத்தின் புதுப்பித்தல், புதுப்பித்தல் மற்றும் மீளமைப்புக்கான கிரயத் திட்ட கட்டிடத் திட்டங்கள், கேள்வி ஆவணம் மற்றும் பொறியியலாளரின் மதிப்பீடு என்பற்றை தயாரித்து சமர்ப்பித்தது. அபிவிருத்திக்கான அனுமதி பெறப்பட்டது. விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்வி நடைமுறை என்பன பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான ரீ.ஆர்.சீ.எஸ்.எல் முயற்சிகளின் செயற்திறன் - 2019

செழிப்பு, பொருளாதார வாய்ப்பு, சுற்றுச்சூழலைப் பாதுகாத்தலுடன் உலகளாவிய வளர்ச்சியானது தற்போது நிலைபேறான வளர்ச்சியை நோக்கி நகர்கிறது. இது கூடுதலாக சமூக நல்வாழ்வை ஊக்குவிக்கிறது. இந்த சூழலில், தொலைத்தொடர்பு / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் (ஐ.சீ.ரீ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (எஸ்.டி.ஜீ) அடைவதற்கு முக்கிய உதவியாளர்களாக கருதப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உலகளாவிய ஒன்றோடொன்று தொடர்புடைய ஐ.சீ.ரீ.களின் பெருக்கம் மனித முன்னேற்றத்தை துரிதப்படுத்துவதற்கும் டிஜிட்டல் பிளவுகளைத் தடுப்பதற்கும் பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறது.

தொலைத்தொடர்பு / ஐ.சீ.ரீ துறையில் எஸ்.டி.ஜீ களின் சாதனைகளை விரைவுபடுத்துவதற்காக எஸ்.டி.ஜீ முன்முயற்சிகளை 2019 ஆம் ஆண்டிற்கான எங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இணைத்துள்ளோம்.

| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் செயற்பாடுகள் | அடைவுகள் | எஸ்.டி.ஜீ இன் இலக்குகள் / நோக்கங்கள் |
|---|---|---|
| உரிமம் பெற்ற தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களால் குரல் மற்றும் தரவு / புரோட்பேண்ட் சேவைகளின் சேவைகளின் தரத்தை கண்காணிக்க விதிகள் / விதிமுறைகளை வழங்குதல். | • தற்போதுள்ள சேவை அளவுருக்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டது.<br>• செய்யவேண்டிய திருத்தங்கள் குறித்து செயற்படுத்துனர்களுடன் கலந்துரையாடப்பட்டது.<br>• தற்போதுள்ள புரோட்பேண்ட் அளவுருக்களில் திருத்தங்களைச் செய்ய செயற்படுத்துனர்களுடனான கலந்துரையாடலுக்கு முன்னர் நாட்டின் வெவ்வேறு இடங்களில் இணைய வேகம் அளவிடப்படுகிறது.<br>• திருத்தப்பட்ட அளவுருக்களை அமுல்படுத்திய பின்னர் 2020 ஆம் ஆண்டில் புதிய விதிகள் / விதிமுறைகள் வழங்கப்படும். | எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல்.<br>எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு. நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல். |
| குரல் மற்றும் தரவு / புரோட்பேண்ட் சேவைகளுக்காக ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இல் அமைத்துள்ள சேவை தரங்களின் அளவுருவை செயற்படுத்துனர்கள் பின்பற்றுவதை உறுதிசெய்தல். | • நிலையான செயற்படுத்துனர்களால் சேவை அளவுருக்கள் தரத்துடன் பின்பற்றப்படுகிறது.<br>• கையடக்க செயற்படுத்துனர்கள் சேவை அளவுருக்களை தரத்துடன் பின்பற்றுகின்றனர். | எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல்.<br>எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு. நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல். |

| | | | |
|---|---|---|---|
| பல்வேறு தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதற்காக சட்டத்தின் விதிகளின் கீழ் உரிமங்களைப் பெறுவதற்கான தேவை குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல். | • பிரிவு 17 மற்றும் 21 ஆய்வுகளுடன் இணைந்து விழிப்புணர்வு திட்டங்கள் நடாத்தப்பட்டன. | | எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல். |
| தொலைத் தொடர்புத் துறையின் விரைவான முன்னேற்றங்களைச் சந்திக்க தற்போதைய இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தில் புதிய திருத்தங்களை உருவாக்குதல். | • பிரிவுகளிலிருந்து உள்ளீடுகளைப் பெற்ற பின்னர் சட்டத் திருத்தங்கள் சட்ட வரைவுத் துறைக்கு பரிந்துரைக்கப்பட்டன.<br>• சட்ட வரைவுத் துறையுடன் ஆலோசனை நடைபெற்றது.<br>• அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற சட்ட வரைவுத் துறை அறிவுறுத்தியது. | | எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல். |
| ஸ்பெக்ட்ரம் உரிமம் வழங்கும் பொறிமுறையின் முன்னேற்றம். | • புதிய உரிமம் புதுப்பித்தல்முறை செயன்முறையில் உள்ளது. | | எஸ்.டி.ஜீ 7 - மலிவு மற்றும் வலுவான சக்தி. அனைவருக்கும் மலிவு, நம்பகமான, நிலைபேறான மற்றும் நவீன ஆற்றலுக்கான அணுகலை உறுதிசெய்தல்.<br>எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல்.<br>எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு. நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல். |
| செயற்படுத்துனர்கள் சமர்ப்பித்த கட்டண திட்டங்களை செயன்முறைப்படுத்துதல். | • செயன்முறைப்படுத்தப்பட்ட விளம்பர / பருவகால சலுகைகள், விளம்பர கட்டணங்கள் மற்றும் நிரந்தர கட்டண திட்டங்களின் முன்மொழிவுகள். | | எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல். |

| | | | |
|---|---|---|---|
| “கமனட்ட சன்னிவேதனய” நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல் | • மாத்தறை மாவட்டத்தில் விசாரணைகள் பூர்த்திசெய்யப்பட்டது.<br>• இரத்தினபுரி மாவட்டத்தில் தொழில்நுட்ப விசாரணை நடாத்தப்பட உள்ளது.<br>• அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவு செயன்முறைப்படுத்தப்படுகிறது. | | எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல்.<br>எஸ்.டி.ஜீ 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள். நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்.<br>எஸ்.டி.ஜீ 11 - நிலைபேறான நகரங்கள் மற்றும் சமூகங்கள். நகரங்களை உள்ளடக்கிய, பாதுகாப்பான, நெகிழ வைக்கும் மற்றும் நிலைபேறானதாக மாற்றுதல். |
| தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப கழிவு முகாமைத்துவ திட்ட திட்டத்தை நடாத்துதல். | • இரத்தினபுரி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலக அலுவலகங்களில் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது ஊழியர்களுக்கான விழிப்புணர்வு பிரசாரங்கள் நடாத்தப்பட்டன. | | எஸ்.டி.ஜீ 3 - நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு. ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிசெய்து, எல்லா வயதினருக்கும் மற்றும் அனைவருக்கும் நல்வாழ்வை ஊக்குவித்தல்.<br>எஸ்.டி.ஜீ 11 - நிலைபேறான நகரங்கள் மற்றும் சமூகங்கள். நகரங்களை உள்ளடக்கிய, பாதுகாப்பான, நெகிழ வைக்கும் மற்றும் நிலையானதாக மாற்றுதல்.<br>எஸ்.டி.ஜீ 12 - பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி. நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல். |
| விழிப்புணர்வு மூலம் நியாயமான ஒழுங்குபடுத்தும் சூழலை உறுதி செய்தல் | • சமூக விழிப்புணர்வு திட்டங்கள், பாடசாலை விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் பைலட் நடமாடும் சேவை திட்டம் ஆகியன நடாத்தப்பட்டன. | | எஸ்.டி.ஜீ 7 - மலிவு மற்றும் வலுவான சக்தி. அனைவருக்கும் மலிவு, நம்பகமான, நிலையான மற்றும் நவீன ஆற்றலுக்கான அணுகலை உறுதிசெய்தல்.<br>எஸ்.டி.ஜீ 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள். நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல். |

| | | | |
|---|---|---|---|
| தொலைத்தொடர்பு சூழலில் வாடிக்கையாளர் பாதுகாப்பை உறுதி செய்தல் | • உரிமம் பெற்ற செயற்படுத்துனர்களுடன் சந்திப்புகள் நடாத்தப்பட்டுள்ளது.<br>• இருந்த பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | | எஸ்.டி.ஜீ 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள். நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல். |
| வாடிக்கையாளர்கள் மற்றும் செயற்படுத்துனர்களுக்கு நியாயமான மற்றும் நியாயமான தீர்வுகளை உறுதி செய்தல். | • நுகர்வோர் முறைப்பாடுகளின் செயன்முறைப்படுத்தப்பட்ட கடித தொடர்பு தொல்லை அழைப்புகள், எஸ்எம்எஸ், சமூக ஊடகங்கள், நிலையான இணைப்புகள், கோபுர பிழைகள் மற்றும் சிம், PEO TV மற்றும் இணையம், பட்டியலிடல், சிடிஎம்ஏ.<br>• தவறான கையடக்க தொலைபேசிகளில் கோரிக்கைகளை கையாள்தல் மற்றும் தொலைந்த கையடக்கத் தொலைபேசிகளை கண்டறிய புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட முறைமையை ஒரே நேரத்தில் பயன்படுத்துதல். | | எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல்.<br>எஸ்.டி.ஜீ 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள். நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்.<br>எஸ்.டி.ஜீ 16 – அமைதியான, நீதியான மற்றும் வலுவான நிறுவனங்கள். நியாயமான, அமைதியான மற்றும் உள்ளடக்கிய சமூகங்களை ஊக்குவித்தல். |
| புரோட்பேண்ட் திறன் மேம்படுத்தப்பட வேண்டிய குறிப்பிட்ட பகுதிகளை அடையாளம் காணுதல். | • உரிமம் பெற்ற செயற்படுத்துனர்களிடமிருந்து உட்கட்டமைப்பு திட்டம் பெறப்பட்டுள்ளது.<br>• கண்காணிக்கப்பட்ட செயற்படுத்துனர்களின் சாதனைகள் திட்டத்தின் படி இலக்குகளுடன் உள்ளது. | | எஸ்.டி.ஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு. நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்ப்பது.<br>எஸ்.டி.ஜீ 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள். நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல். |
| தொலைத்தொடர்புக்கான வழிகாட்டுதல்களைத் தயாரித்தல் மற்றும் செப்பு மற்றும் பைபர் கேபிள்களை இடுதல். | • துருவங்கள் மற்றும் பைபர் கேபிள்களுக்கான வழிகாட்டுதலை உருவாக்கியுள்ளது. | | எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு. நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல். |
| இலங்கைக்கு ஐபிவி 6 வீதி வரைபடம் (ரோட்மெப்) தயாரித்தல் | • செயற்படுத்துனர்களிடமிருந்து ஐபிவி 6 வீதி வரைபடம் (ரோட்மெப்) தயாரிப்பதற்கான தகவல்கள் பெறப்பட்டுள்ளது. | | எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு. நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான |

| | | | |
|---|---|---|---|
| | • APT (APNIC) இலிருந்து நிபுணர் உதவியைப் பெற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | | தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல். |
| WTISD நோக்கத் திட்டம் 2019. | • WTISD 2019 ”தரநிலைப்படுத்தல் இடைவெளியைக் கட்டுப்படுத்துதல்” எனும் கருப்பொருளில் விழிப்புணர்வு திட்டம் நடாத்தப்பட்டது. | | எஸ்.டி.ஜீ 4 - தரமான கல்வி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதிசெய்து வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்தல் |
| கேபிள் ரீவி சேவை வழங்குநர்களின் செயற்பாடுகளை கண்காணித்தல். | • கேபிள் டிவி நெட்வேர்க் அமைப்புகளின் விபரங்களை சேகரித்து புதுப்பித்தல். | | எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு. நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல். |
| 2019 ஆம் ஆண்டிற்கான பயிற்சி நடவடிக்கைகள் குறித்து சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைத்தல். | • மேம்பட்ட பயிற்சி குழு (ஏரீசீ) மற்றும் பயிற்சி தேர்வுக் குழு (ரீஎஸ்சீ) மற்றும் அமைச்சின் அங்கீகாரம் ஆகியவற்றைப் பெற்ற பின்னர் வெளிநாட்டு பயிற்சி / ஆய்வு வருகைகளில் பங்கேற்க உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுப்பது.<br>• பயிற்சி திட்டங்கள் / ஆய்வு வருகைகளுக்குப் பிறகு அறிவு பகிர்வு திட்டங்கள் நடாத்தப்பட்டன.<br>• சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களுடன் இணைந்து நடத்தப்பட்ட மாநாடுகள் மற்றும் பயிற்சித் திட்டங்களுக்கு உரிம இயக்குநர்கள் அழைக்கப்பட்டனர். | | எஸ்.டி.ஜீ 4 - தரமான கல்வி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதிசெய்து வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்தல்<br>எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு. நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல். |
| இலங்கையில் எஸ்.டி.ஜீ முன்னேற்றங்களுக்காக ஐ.சீ.ரீ யில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சர்வதேச சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல். உள்ளூர் பல்கலைக்கழகங்கள், செயற்படுத்துனர்கள், தொழிற்பயிற்சி ஆணையம் மற்றும் NAITA ஆகியவற்றின் உதவியுடன் உள்ளூர் ஐ.சீ.ரீ தொண்டர் திட்டத்தை ஏற்பாடு செய்தல். | • குறிப்பாக ஓரங்கட்டப்பட்ட சமூகங்கள் மற்றும் தொலைதூர பகுதிகளில் உள்ள மாணவர்கள் மத்தியில் ஐ.சீ.ரீ கல்வியறிவை வளர்ப்பதற்காக பைலட் திட்டம் கல்வி அமைச்சின் ஐ.சீ.ரீ கிளையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. ஐ.சீ.ரீ தொண்டர்களாக பணியாற்றுவதற்காக தொண்டர்கள் கம்பஹா, அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் களுத்துறை ஆகிய இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அனுப்பப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருவரும் இந்த திட்டத்தின் மூலம் பயனடைந்தனர். | | எஸ்.டி.ஜீ 4 - தரமான கல்வி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதிசெய்து வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்தல்<br>எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு. நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல்.<br>எஸ்டிஜீ 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள். நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல். |

| | | | |
|---|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான ஐ.சி.ரீ.க்களை அடைவதற்கான ஐ.ரீ.யூ / ரீ.ஆர்.சி உதவித் திட்டங்கள். | • APT மற்றும் GSMA உடன் "SDG களை அடைவதில் மொபைலின் பங்கு மற்றும் SDG களுக்கு மொபைல் தொழில்நுட்பத்தை இயக்குதல்" என்ற தலைப்பில் ஒரு பயிற்சித் திட்டத்தை ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்ச்சியை APNIC நிபுணர்கள் நடாத்தினர். | | எஸ்.டி.ஜீ 17 - இலக்குகளுக்கான கூட்டாண்மை. நிலைபேறான வளர்ச்சிக்கான உலகளாவிய கூட்டாண்மைக்கு புத்துயிர் அளித்தல். |
| ரீ.ஆர்.சீ ஊழியர்களுக்கான ஐ.சீ.ரீ திறன் இயலளவு. | • ஐரீ இடர் மதிப்பீடு, ஐரீ ஊழியர்களுக்கான தரவுத்தள பாதுகாப்பு, அலுவலகம் 365 பயிற்சி, ஐரீ ஊழியர்களுக்கான / தீ பரவல் பயிற்சி மற்றும் வீதி வரைபட உள்ளடக்கம் குறித்த செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. | | எஸ்.டி.ஜீ 4 - தரமான கல்வி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதிசெய்து வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்தல் |
| ITU, APT போன்றவற்றுடன் இணைந்து சர்வதேச மாநாடுகள், பட்டறைகள், கருத்தரங்குகள், ஆய்வுக் குழு கூட்டங்கள் / ஒன்லைன் ஆலோசனை / உள்ளூர் பயிற்சி திட்டங்களை ஏற்பாடு செய்தல். | • ஒருங்கிணைந்த RSF & ITU T ஆய்வுக் குழு கூட்டம் மற்றும் APT GSMA & APT APNIC உள்ளூர் பயிற்சித் திட்டங்கள். | | எஸ்.டி.ஜீ 4 - தரமான கல்வி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதிசெய்து வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்தல்<br>எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு. நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல்.<br>எஸ்.டி.ஜீ 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள். நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்.<br>எஸ்.டி.ஜீ 17 - இலக்குகளுக்கான கூட்டாண்மை. நிலைபேறான வளர்ச்சிக்கான உலகளாவிய கூட்டாண்மைக்கு புத்துயிர் அளித்தல். |
| தற்போதுள்ள இலக்கத் திட்டத்தை மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை முன்மொழிதல். | • விமர்சனங்கள் நடத்தப்பட்டுள்ளன.<br>• IOT, M2M மற்றும் உள் தகவல்தொடர்புகளுக்கான 3 இலக்க குறியீட்டின் இலக்கத் திட்டத்தை அடையாளம் கண்டுள்ளது. | | எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல்.<br>எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு. நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல். |

அத்தியாயம்

# 05

# பிரிவுகளின் செயல்திறன்

# உரிம முகாமைத்துவ பிரிவு

**கண்ணோட்டம்**

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தொலைத்தொடர்புச் சட்டத்தின் 17 ஆவது பிரிவின் படி, எந்தவொரு நபரும் இலங்கையில் ஒரு முறைமை உரிமத்தின் அதிகாரத்தின் கீழ் தவிர பொது தொலைத் தொடர்பு முறைமையை செயற்படுத்த முடியாது. முறைமை உரிமங்கள் பொதுமக்கள் ஆலோசனை மற்றும் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு உட்படுத்தப்பட்டு அமைச்சரால் முறையாக வழங்கப்படுகின்றது.
தற்போதுள்ள தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளின் அடிப்படையில் உரிமங்களின் வகையை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**வசதிகளின் அடிப்படையிலான சேவை உரிமங்கள்**

இந்த வகை உரிமமானது, அதிர்வெண் ஸ்பெக்ட்ராம் மற்றும் / அல்லது சரியான வழி, தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதில் பொது தொலைத்தொடர்பு வலையமைப்பை தாபிப்பதற்கும் செயற்படுவதற்கும் தேவைப்படும் அருமையான வளங்களான இலக்கங்களை பயன்படுத்தி அதன் சொந்த உட்கட்டமைப்பை அமைப்பதற்கு அங்கீகாரம் அளிக்கிறது.

**வசதியில்லாத சேவை உரிமங்கள்**

அதன் சொந்த உட்கட்டமைப்பை அமைப்பதற்கு அங்கீகாரம் இல்லாத செயற்படுத்துனர்கள் மற்றும் தொலைத்தொடர்பு நெட்வேர்க் கூறுகளை (பெக்போன், பெக்ஹோல் மற்றும் அணுகல்) எந்தவொரு வசதி அடிப்படையிலான செயற்படுத்துனர்களிடமிருந்தும் குத்தகைக்கு எடுக்க வேண்டும்.

**வசதியுள்ள உரிமங்கள்**

ஏனைய அங்கீகரிக்கப்பட்ட தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களின் பயன்பாட்டிற்கான உட்கட்டமைப்பை உருவாக்குவது அங்கீகாரம் பெற்ற செயற்படுத்துனர்கள் ஆகும். அவர்களுக்கு பொதுமக்களுக்கு எந்த சேவையையும் வழங்க அதிகாரம் இல்லை.

**உரிம வகைகள்**

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவால் பிரிவு 17 இல் வழங்கிய உரிமங்கள் பின்வரும் சேவை வகைகளின் கீழ் உள்ளன.

- நிலையான செயற்படுத்துனர்கள்
- நடமாடும் செயற்படுத்துனர்கள்
- சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் (வெளிப்புற நுழைவாயில் செயற்படுத்துனர்கள்)
- தரவு தொடர்பாடல் செயற்படுத்துனர்கள்
- இணைய சேவை வழங்குநர்கள் (வசதியில்லாதவை)
- கேபிள் விநியோக நெட்வேர்க் செயற்படுத்துனர்கள் (கேபிள் டிவி)
- நேரடியாக வீட்டு செயற்கைக்கோள் ஒலிபரப்பு செயற்படுத்துனர்கள் (டி.ரீ.எச்)
- ட்ரங்க் வானொலி செயற்படுத்துனர்கள்
- செயற்கைக்கோள் சேவைகள்

செயற்படுத்துனர்கள் சர்வதேச தொழில்நுட்ப போக்குகளின்படி தங்களது செயற்பாடுகளுக்கு மிகவும் பொருத்தமான தொழில்நுட்பத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு சுதந்திரமாக உள்ளனர், இயற்கை மற்றும் வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்துவதற்கான செயற்திறனை மேம்படுத்துவதோடு, சமூக மற்றும் பொருளாதார விழுமியங்களை நாட்டிற்கு கொண்டு வருவதற்கு அத்தகைய தொழில்நுட்பத்தின் நன்மைகளைப் பயன்படுத்துகின்றனர். ரீ.ஆர்.சீ.எஸ்.எல் அத்தகைய தொழில்நுட்பத்தின் நன்மைகளை மதிப்பிடும் மற்றும் குறைந்த தாக்கத்துடன் மென்மையான இடம்பெயர்வுக்கு செயற்படுத்துனர்களுக்கு உதவும். உரிமம் வழங்கப்பட்டதும், உரிமம் பெற்றவர்கள் தங்கள் நெட்வேர்க்குகள் மற்றும் சேவை வழங்கல்களில் ஏதேனும் மாற்றங்களுக்கு ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

தொலைத்தொடர்பு நெட்வேர்க்கை நிறுவுவதற்கு தேவையான பற்றாக்குறை வளங்களை அந்தந்த செயற்படுத்துனர்களுக்கு நியாயமான, பாகுபாடற்ற மற்றும் வெளிப்படையான முறையில் ஒதுக்கப்படும்.

வசதி அடிப்படையிலான உரிமங்கள் பத்து ஆண்டுகள் மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கப்படுகின்றன, ஆனால் வசதி இல்லாத உரிமத்தின் செல்லுபடியாகும் தன்மை ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுமே வரையறுக்கப்படடுள்ளது. அதன் உண்மையான கால அளவைத் தாண்டாத காலத்திற்கு, செயலாற்றலைப் பொறுத்து, அதேவகையில் அல்லது / மற்றும் வெவ்வேறு நிலைமைகளின் கீழ் உரிமங்களை புதுப்பிக்க முடியும்.

வழங்கப்படும் சேவையின் வகையைப் பொறுத்து அவ்வப்போது ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இனால் உரிம கட்டணம் நிர்ணயிக்கப்படும். மேலதிகமாக உரிமதாரர்கள் செஸ் மற்றும் தொலைத்தொடர்பு வரியை செலுத்த வேண்டும்.

**ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இல் உரிமம் வழங்கும் நடைமுறை**

உரிமங்களுக்கான விண்ணப்பங்களை செயற்படுத்துதல் இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 17 இல் உள்ள விதிகள் மற்றும் 2006.03.10 ஆந் திகதிய 1435/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் வெளியிட்டுள்ள உரிம வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப இருக்க வேண்டும். உரிமங்களை வழங்குவதில், ரீ.ஆர்.சீ.எஸ்.எல் திறந்த நியாயமான மற்றும் வெளிப்படையான செயல்முறையை பின்பற்றுகிறது. ரீ.ஆர்.சீ.எஸ்.எல் தற்போது வழங்கப்பட வேண்டிய உரிமங்களின் எண்ணிக்கையை முன்கூட்டியே தீர்மானிக்கவில்லை. இருப்பினும், பொது நலன் காரணமாக ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் இயற்கை மற்றும் / அல்லது வரையறுக்கப்பட்ட வளக் கட்டுப்பாடுகள் காரணமாக சில சேவைகளின் கீழ் உரிமங்களின் எண்ணிக்கையை குறைக்கலாம்.

- இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் உரிமத்திற்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ள தரப்பினர்கள் 2006.03.10 ஆந் திகதிய 1435/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இனால் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டிக்கு ஏற்ப விண்ணப்பிக்க வேண்டும்.
- மேற்கூறிய வழிகாட்டிகளின்படி விண்ணப்பதாரரின் தகுதியை தீர்மானிக்க உரிமத்திற்கான விண்ணப்பத்தை ரீ.ஆர்.சீ.எஸ்.எல் மதிப்பீடு செய்யும்.
- விண்ணப்பம் வெற்றிகரமாக இருந்தால், வரைவு உரிமத்திற்காக ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கும்.
- வரைவு உரிமம் பொதுமக்களுக்கு பிரதிநிதித்துவங்கள் / ஆட்சேபனைகளை வழங்குவதற்காக வழங்கப்படும்.
- ரீ.ஆர்.சீ.எஸ்.எல் பொதுமக்களிடமிருந்து ஏதேனும் பிரதிநிதித்துவங்கள் / ஆட்சேபனைகளை விசாரிப்பதுடன் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தேவையான திருத்தங்கள் செய்யப்படும்.
- ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் தொலைத்தொடர்புக்கு பொறுப்பான அமைச்சரால் உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

**உரிமக் கட்டமைப்பு**

தற்போதைய உரிம விதிமுறை தொடர்பான கொள்கைகளை புடம்போட்டுக் காட்டுவது

- போட்டியை ஊக்குவித்தல்
- சேவையின் மேம்படுத்தப்பட்ட தரம்
- புதிய தொழில்நுட்பத்தின் செயற்திறன் மற்றும் வரிசைப்படுத்தல்
- தாங்கும் திறன்
- பல்வேறு வகையான தொலைத்தொடர்பு சேவைகள்
- வாடிக்கையாளர் பாதுகாப்பு

**புதிய உரிமம் வழங்குதல்**

இலங்கையில் டி.ரீ.எச் சேவையை வழங்குவதற்காக தற்போது ஒரு புதிய விண்ணப்பம் பரிசீலனையில் உள்ளது.

**உரிமங்களை புதுப்பித்தல்**

சிட்டி கேபிள் லிங்க்ஸ் (தனியார்) லிமிடெட் - இணையம் மற்றும் கேபிள் ரீவி சேவைகள் உட்பட தரவு தொடர்பு சேவைகளை வழங்குவதற்காக கேபிள் விநியோக நெட்வேர்க் செயற்படுத்துனர் உரிமம்.

**நடைமுறை வேலை**

தற்போதைய உரிம கட்டமைப்பானது தடைசெய்யப்பட்ட சேவை தளத்துடன் உட்கட்டமைப்பு முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. இருப்பினும், தொழில்நுட்ப ஒருங்கிணைப்பின் வருகையுடன் ஒரு ஒற்றை உட்கட்டமைப்புடன் பரந்த அளவிலான சேவைகளைப் பெற முடியும். சேவைகளின் எல்லை எப்போதும் வளர்ந்து வரும் தொலைத் தொடர்புத் துறையில் தடைகளை விதிக்கலாம். எனவே, பயன்பாட்டு சேவை வழங்கலை இலகுவாக்குவதற்காக புதிய உரிம கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவம் வெளிப்பட்டுள்ளது.

எனவே தற்போது, தற்போதுள்ள உரிம கட்டமைப்பானது மீளாய்வில் உள்ளதுடன் தொழில்நுட்ப வளர்ச்சியிலிருந்து எழும் தொலைத்தொடர்பு துறையில் எதிர்பாராத ஒழுங்குபடுத்தும் தடைகளை அகற்றுவதற்காக புதிய உரிம சட்ட கட்டமைப்பை அறிமுகப்படுத்துகிறது. இந்த நடவடிக்கைக்கு சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ஐ.ரீ.யூ) உதவி வழங்கும்.

இதேபோல், பிரிவு 17 உரிமத்தின் அதீத தேவை கொண்ட பிணைய அங்கீகாரம் கடந்த காலங்களில் உரிமத்துடன் சரியாக இணைக்கப்படவில்லை. எனவே, செற்படுத்துனர் நெட்வேர்க் / சேவை கணக்கெடுப்பின் அடிப்படையில் இதை அமுல்படுத்த ஒரு செயற்பாடு இடம்பெற்று வருகிறது.

அணுகல் நெட்வேர்க்குகள் வட்டாரங்களில் பயன்படுத்தப்படுவதற்கு வழி உரிமைகளைப் பயன்படுத்துவது ஒரு தடையாக உள்ளதால் 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தொலைத்தொடர்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள விதிகளின்படி வினைத்திறனாக பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதலை உருவாக்குவது நோக்கமாகும்.

## நெட்வேர்க் பிரிவு

கண்ணோட்டம்

இலங்கையில் இயங்கும் பொது மற்றும் தனியார் தொலைத்தொடர்பு நெட்வேர்க்குகள் தொடர்பான பிரச்சினைகளை ஒழுங்குபடுத்துவதற்கு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நெட்வேர்க் பிரிவு பொறுப்பாகும்.

நெட்வேர்க் பிரிவின் கீழ் வரும் பகுதிகள் பொது தொலைத்தொடர்பு நெட்வேர்க்குகளுக்கான தேசிய இலக்க திட்டத்தை நிர்வகித்தல், சமிக்ஞை குறியீடுகளை ஒதுக்குதல், நடமாடும் நெட்வேர்க் குறியீடுகளை ஒதுக்குதல், பொருள் அடையாளங்காட்டிகளை ஒதுக்குதல், உட்கட்டமைப்பு வரிசைப்படுத்தல், தொலைத்தொடர்பு உபகரண விற்பனையாளர்களுக்கு உரிமம் வழங்குதல், வகை அங்கீகார சான்றிதழ்கள் மற்றும் சுங்க அனுமதிகள் நெட்வேர்க் சாதனங்களுக்காக, இலங்கையில் உள்ள தொலைத்தொடர்பு நெட்வேர்க்குகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த உதவுகிறது.

### செயற்பாடுகள்

தொலைத்தொடர்பு சட்டத்தின்படி 2019 ஆம் ஆண்டில் பல்வேறு பகுதிகளின் கீழ் நெட்வேர்க் பிரிவு மேற்கொண்ட முக்கிய செயல்பாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### இலக்கமிடல்

இலங்கையின் தொலைத் தொடர்புத் துறையின் தேசிய இலக்கத் திட்டத்தை ரீ.ஆர்.சீ.எஸ்.எல் நிர்வகிப்பதால் தொலைத்தொடர்பு நெட்வேர்க்குகளுக்குத் தேவையான இலக்கங்களிலான வளங்கள் ஒரு பற்றாக்குறையாக உள்ளதுடன் நாட்டிலுள்ள தொலைத்தொடர்பு நெட்வேர்க்குகளுக்கு கிடைக்கக்கூடிய இலக்க வளத்தைப் பயன்படுத்துவதற்கான கட்டமைப்பையும் வழிகாட்டுதல்களையும் இலக்கத் திட்டம் வகுக்கிறது. இலக்கமிடல் ஒரு பற்றாக்குறை வளமாக இருப்பதால், அது சரியான திட்டமிடலுடன் நிர்வகிக்கப்படுகிறது. எனவே இலக்கமிடல் திட்டம் அவ்வப்போது தொழில்துறையின் தேவைக்கேற்ப மாற்றப்படுகிறது. இது புதிய முன்னேற்றங்கள் மற்றும் தொழில்துறையின் தற்போதைய போக்குகளைப் பொறுத்து அமைகிறது. இந்த செயல்பாடு தொடர்பான செயற்பாடுகளின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

- தேசிய இலக்க வளத்தை நிர்வகித்தல்
- அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கான குறுகிய குறியீடுகளை ஒதுக்குதல்
- குறுகிய குறியீடுகள் தொடர்பான விடயங்களில் தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களுடன் ஒருங்கிணைத்தல்
- சர்வதேச மற்றும் தேசிய சமிக்ஞ புள்ளி குறியீடுகள், நெட்வேர்க் குறியீடுகளை தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களுக்கு ஒதுக்குதல்
- விடய அடையாளங்காட்டிகளை ஒதுக்குதல் (OID)

### உள்கட்டமைபு வரிசைப்படுத்தல்

செப்பு அல்லது பார்வை பைபர் நெட்வேர்க்குகள், கடலுக்கடியில் உள்ள கேபிள் தரையிறங்கும் நிலையங்கள் மற்றும் தொலைத்தொடர்பு அண்டெனா கோபுரங்கள் போன்ற தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பைப் பயன்படுத்துவதற்கான வசதி நெட்வேர்க் பிரிவால் மேற்கொள்ளப்படும் மற்றொரு முக்கிய செயற்பாடாகும். தற்போதுள்ள நெட்வேர்க்குகளின் விரிவாக்கத்திற்கான அனுமதியைப் பெற அல்லது மேலே குறிப்பிட்ட பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி புதிய சேவைகளை அறிமுகப்படுத்த தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். நெட்வேர்க் பிரிவு பல தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் பொருத்தமான அங்கீகாரங்களை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவுகிறது.

சூழல் பாதிப்புகள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள், தேசிய பாதுகாப்பு மற்றும் பொது நலன்களுக்கும் தொலைத்தொடர்புத் துறையின் நிலைபேறான வளர்ச்சியைப் பேணுகிறது. இவை தொடர்பாக பிரிவு மேற்கொண்ட கடமைகள் பின்வருமாறு சுருக்கித் தரப்பட்டுள்ளன.

- தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு வரிசைப்படுத்தல் தொடர்பான விடயங்களில் பாதுகாப்பு அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை போன்ற பல்வேறு அரசு அமைப்புகளுடன் ஒருங்கிணைத்தல்.

- புதிதாக வாங்கப்பட்ட அண்டெனா கட்டமைப்பு முகாமைத்துவ அமைப்பு (ASMS) மென்பொருள் மூலம் அண்டெனா கட்டமைப்புகளை நிறுவுவதற்கான விண்ணப்பத்தை செயற்படுத்துதல். 2019 ஆம் ஆண்டின் இறுதியில், 90% அண்டெனா கட்டமைப்பு தரவு ASMS இல் நுழைந்ததுடன் கணனியில் கிடைக்கும் தரவின் சரிபார்ப்பு அந்தந்த செயற்படுத்துனர்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- உட்கட்டமைப்பு வரிசைப்படுத்தல் திட்டங்களை செயற்படுத்துவதில் உரிமம் பெற்ற தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களுக்கு உதவுதல்.
- தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு வரிசைப்படுத்தல் குறித்த பொது விழிப்புணர்வு திட்டங்களை நடத்துதல்.
- கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவின் ஒருங்கிணைப்புடன், இலங்கையில் செயற்படுத்துனருக்கான ஐபிவி 4 / ஐபிவி 6 பிஜிபி ரூட்டிங் குறித்த உள்நாட்டு பயிற்சி வகுப்பை APT & APNIC உதவியுடன் நடத்துதல்.
- தொலைத்தொடர்பு கோபுரங்கள் தொடர்பான பொதுமக்கள் முறைப்பாடுகளைக் கையாளுதல்.
- தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு வரிசைப்படுத்தல் தொடர்பாக தனிநபர்கள் / நிறுவனங்கள் சமர்ப்பித்த திட்ட முன்மொழிவுகளை ஆராய்ந்து பரிந்துரைகளைச் செய்து அறிக்கைகள் சமர்ப்பித்தல்.
- அண்டெனா கட்டமைப்புகள் குறித்த வழிகாட்டுதலின் திருத்தத்தை பூர்த்தி செய்ததுடன் அங்கீகார செயற்பாட்டில் உள்ள நடைமுறை சிக்கல்களை நிவர்த்தி செய்தல் மற்றும் பொது சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பிற கவலைகள் குறித்து உரிய கவனம் செலுத்தி தொலைத்தொடர்பு துறையின் தடையற்ற வளர்ச்சிக்கு உதவுகிறது.
- உயரமான கட்டிடங்களில் தொடர்பு சேவைகளை வழங்குவதற்கான தொழில்நுட்ப தரநிலை வழிகாட்டியைத் தயாரித்தல்.

**கேபிள் ரீவி சேவைகளின் சட்டவிரோத செயற்பாட்டின் கட்டுப்பாடு**

சட்டத்தின் பிரிவு 22(அ)(1) இன் படி, அந்த நோக்கத்திற்காக ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட உரிமத்தின் அதிகாரத்தின் கீழ் தவிர எந்தவொரு நபரும் எந்தவொரு வளாகத்திலும் கேபிள் பணிகளை செய்யக்கூடாது. குற்றவியல் புலனாய்வுத் துறையின் உதவியுடன் தீவு முழுவதும் சட்டவிரோத கேபிள் ரீவி சேவைகளை வழங்குவதை கட்டுப்படுத்துவதில் நெட்வேர்க்குகள் பிரிவு ஈடுபட்டுள்ளது.

**வகை அங்கீகாரம் மற்றும் உபகரண அனுமதி**

தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 5(கு) இன் விதிகளின் அடிப்படையில் ஒரு தொலைத்தொடர்பு அமைப்புடன் இணைக்கப்படக்கூடிய தொலைத்தொடர்பு எந்திரங்களை அங்கீகரிக்க ரீ.ஆர்.சீ.எஸ்.எல். பிரிவு 5(கு) இல் ஒப்படைக்கப்பட்ட கடமைகளைச் செய்வதில், ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வகை தொலைத்தொடர்பு எந்திரத்தை இணைக்க, சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் வழங்கப்பட்ட முறைமை உரிமத்தின் அட்டவணை 2 இல் உள்ள அனைத்து செயற்படுத்துனர்களையும் ரீ.ஆர்.சி கட்டாயப்படுத்தியுள்ளது.

அதன்படி, தொலைபேசி கருவிகள், தொலைநகல் இயந்திரங்கள், PABX (தனியார் தானியங்கி கிளை பரிமாற்றம்), மோடம்கள், கம்பியில்லா தொலைபேசிகள் மற்றும் உரிமம் பெற்ற நெட்வேர்க்குகளுடன் இணைக்கப்பட வேண்டிய வேறு எந்தவொரு வாடிக்கையாளர் வளாக உபகரண செயற்படுத்துனர்கள், விற்பனையாளர்கள் அல்லது தனிநபர்களால் உள்நாட்டில் தயாரிக்கப்படுபவை அல்லது இறக்குமதி செய்யப்படுகின்றவை என்பவைகளுக்கு வகை அங்கீகாரம் தேவைப்படுகிறது.

டெர்மினல் நெட்வேர்க் கருவிகளுக்கான வகை அங்கீகார நடைமுறைகளை மேற்கொள்வதற்கும், நெட்வேர்க் தொடர்பான அனைத்து உபகரணங்களையும் இறக்குமதி செய்வதற்கான சுங்க / பிஓஐ / இறக்குமதி கட்டுப்பாட்டாளருக்கு அங்கீகாரக் கடிதங்களை வழங்குவதற்கும் நெட்வேர்க் பிரிவு பொறுப்பாகும். இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பின்வருமாறு சுருக்கி தரப்பட்டுள்ளன.

- தொலைத்தொடர்பு முனையம் மற்றும் நெட்வேர்க் கருவிகளின் வகை அங்கீகார நடைமுறைகளை மேற்கொள்வது.
- அங்கீகார கடிதங்கள் மூலம் அனுமதி நோக்கங்களுக்காக சுங்க / பிஓஐ / இறக்குமதி கட்டுப்பாட்டுக்கு பரிந்துரைகளை வழங்குதல்.

- ஐ.ரீ.யூ வின் பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி இலங்கையில் தொலைத்தொடர்பு துறையில் நெட்வேர்க் கருவிகளின் தொழில்நுட்ப தரங்களை பின்பற்றுவதை உறுதி செய்தல்.
- சட்டவிரோத சர்வதேச அழைப்பு நிறுத்தங்களைத் தடுப்பதற்காக வாய்ஸ் ஓவர் இன்டர்நெட் புரோட்டோகால் (விஓஐபி) துறைமுகங்கள், நெறிமுறைகள் மற்றும் பயன்பாடுகளைத் தடுக்க தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களுக்கு அங்கீகாரங்ளை வழங்குதல்.
- தொலைத்தொடர்புத் துறை தொடர்பான விடயங்களில் பொது பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு தொடர்பான பொலிஸ் / குற்றவியல் புலனாய்வுத் துறை (சிஐடி) விசாரணைகளுக்கு உதவுதல.
- அரச நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்களின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் (ரீ.ஈ..சி) பங்கேற்பதுடன் தொலைத்தொடர்பு தொடர்பான தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குதல்.

**விற்பனையாளர்கள் உரிமம்**

தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 21 இன் படி, ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட உரிமத்தின் அதிகாரத்தின் கீழ் எந்தவொரு நபரும் இலங்கையில் எந்தவொரு தொலைத்தொடர்பு உபகரணங்கள் அல்லது வானொலி தகவல்தொடர்பு சாதனங்களையும் வர்த்தகம் தவிர்த்து உற்பத்தி செய்யவோ, இறக்குமதி செய்யவோ, விற்பனை செய்யவோ, ஒப்பந்தம் செய்யவோ, வாடகைக்கு விடவோ, குத்தகைக்கு விடவோ, நிரூபிக்கவோ, பராமரிக்கவோ அல்லது சரிசெய்யவோ கூடாது. விற்பனையாளர்கள் உரிமம் என்பது தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவால் மேற்கூறிய செயல்களைச் செய்வதற்கான அங்கீகாரமாகும். விற்பனையாளர்கள் உரிமங்களை வழங்குவது தொடர்பான செயற்பாடுகள் பின்வருமாறு;

- விற்பனையாளர் உரிமங்களுக்கான விண்ணப்பங்களை செயன்முறைக்கு உட்படுத்தி மற்றும் தேவையான நிபந்தனைகள் விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்த பின்பு உரிமங்களை வழங்குதல்.
- விற்பனையாளர் உரிம ஆட்சிப் பிரதேசத்தை நிர்வகித்தல்.
- விற்பனையாளர்கள் உரிமம் தொடர்பான விடயங்களில் பொது பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு தொடர்பான பொலிஸ் / குற்றவியல் புலனாய்வுத் துறை (சிஐடி) விசாரணைகளுக்கு உதவுதல்.

**சட்டவிரோத விற்பனையாளர்களின் புலனாய்வு**

கையடக்க தொலைபேசிகள் உட்பட தொலைத்தொடர்பு சாதனங்களின் சட்டபூர்வமான விற்பனை புள்ளிகளை அமைப்பதை கட்டாயப்படுத்த / ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கை பொலிஸின் உதவியுடன் நெட்வேர்க்குகள் பிரிவு பொது விழிப்புணர்வு பிரசாரங்களையும் சட்டவிரோத விற்பனையாளர்களின் புலனாய்வையும் தொடர்ந்து செய்கிறது.

**செயலாற்றல்**

**2018 – 2019 இற்கான நெட்வேர்க் பிரிவு தொடர்பான புள்ளிவிபரங்கள்**

நெட்வேர்க்குகள் பிரிவால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பான புள்ளிவிபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

*அட்டவணை 02: நெட்வேர்க் பிரிவின் புள்ளிவிபரம்*

| விபரம் | 2018 | 2019 |
|---|---|---|
| வழங்கப்பட்ட விற்பனையாளர் உரிமங்களின் மொத்த எண்ணிக்கை | 821 | 845 |
| நிர்மாணிக்கப்பட்ட கோபுரங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை | 6885 | 7160 |
| பெறப்பட்ட மொத்த கோபுர முறைப்பாடுகள் | 196 | 168 |
| கையாளப்பட்ட மொத்த விசாரணைகளின் எண்ணிக்கை (கோபுரம் தொடர்பானது) | 29 | 80 |
| கோபுரங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 0 | 0 |
| நடைபெற்ற பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் மொத்த எண்ணிக்கை | 09 | 03 |
| வழங்கப்பட்ட புதிய வகை அங்கீகாரங்களின் மொத்த எண்ணிக்கை | 21 | 14 |
| இறக்குமதி அனுமதிகளை வழங்குவதற்கான மொத்த எண்ணிக்கை | 4098 | 3797 |
| தனிப்பட்ட அனுமதிகளின் மொத்த எண்ணிக்கை | 29 | 15 |
| வழங்கப்பட்ட புதிய குறுகிய குறியீடுகளின் ஒட்டுமொத்த எண்ணிக்கை | 77 | 78 |

**இலக்கமிடல்**

**குறுகிய குறியீடுகளின் ஒதுக்கீடு**

பொது மக்கள் அல்லது வாடிக்கையாளர்களால் விரைவான அணுகல் தேவைப்படும் சூழ்நிலைகளில் நிறுவனங்களுக்கு குறுகிய குறியீடுகள் ஒதுக்கப்படுகின்றன. அமைப்பின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு இரண்டு வெவ்வேறு குறுகிய குறியீட்டு வீச்சுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன, அதாவது அரச நிறுவனங்களுக்கு ஒரு வீச்சு, மற்றொன்று தனியார் துறை நிறுவனங்களுக்கு. அரசாங்க நிறுவனங்களுக்கான நான்கு இலக்க குறுகிய குறியீடுகளை ஒதுக்க குறுகிய குறியீடு வரம்பு 19XX ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோல், தனியார் துறை நிறுவனங்களுக்கான நான்கு இலக்க குறுகிய குறியீடுகளை ஒதுக்க குறுகிய குறியீடு வீச்சு 13XX ஒதுக்கப்பட்டுள்ளது.

**அரசாங்க நிறுவனங்கள்**

2019 ஆம் ஆண்டில், 19xx வீச்சில் பதினொரு (11) குறுகிய குறியீடுகள் அரசாங்க நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டன. நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் அந்தந்த குறுகிய குறியீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

*அட்டவணை 03: அரசாங்க நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட குறுகிய குறியீடுகள்*

| நிறுவனம் | குறுகிய குறியீடு |
|---|---|
| மின் மற்றும் எரிசக்தி அமைச்சு | 1910 |
| சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 1995 |
| குற்றம் மற்றும் சாட்சிகளால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை | 1985 |
| தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் | 1928 |
| இலங்கை மதுவரித் திணைக்களம் | 1913 |
| மெகாபோலிஸ் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சு | 1916 |
| இலங்கை தேயிலைச் சபை | 1978 |
| கமநல மற்றும் விவசாய காப்புறுதிச் சபை | 1918 |
| புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் | 1921 |
| இலங்கை புகையிரதத் திணைக்களம் | 1963 |
| நகர திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு | 1914 |

### தனியார் துறை நிறுவனங்கள்

2019 ஆம் ஆண்டில், 13xx வீச்சில் ஆறு (06) குறுகிய குறியீடுகள் தனியார் துறை நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டன. நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் அந்தந்த குறுகிய குறியீடுகள் பட்டியலிடப்பட்டுள்ள n அட்டவணை இல. 1.2.2 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஆதரவுடன் நிர்வாக ஊழியர்கள் மற்றும் நிதி பிரிவு ஊழியர்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவு ஊழியர்களுக்காக புதிய கணக்காய்வு சட்டம் குறித்த விழிப்புணர்வு திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஈ-என்.ஐ.சி திட்டத்தின் கீழ், ரீ.ஆர்.சீ.எஸ்.எல் ஊழியர்களுக்கு புதிய தேசிய அடையாள அட்டையை (ஈ.என்.ஐ.சி) பெறுவதற்கு அதன் நடமாடும் சேவையை ஏற்பாடுசெய்ய ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்துடன் ஒரு திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ஆண்டு கணக்கெடுப்பு**

2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணக்கெடுப்பு 2019 சனவரியில் மேற்கொள்ளப்பட்டது. கணக்கெடுப்பை மேற்கொள்ள ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது. அப்புறப்படுத்த வேண்டிய பொருட்கள் அடையாளம் காணப்பட்டதுடன் ஒரு நியம நடைமுறைக்கு ஏற்ப இந்த பொருட்களை அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**பொருத்தமான ஏற்பாட்டு உதவி**

கூட்டங்கள், பட்டறைகள், கருத்தரங்குகள், ஆய்வு வருகைகள், திட்டங்களை செயல்படுத்துதல் போன்றவற்றை நடத்துவதற்கு ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் ஏனைய பிரிவுகளின் நடவடிக்கைகளுக்கு நிர்வாக பிரிவினால் பொருத்தமான ஏற்பாட்டு உதவிகள் வழங்கப்பட்டன.

**கொடுப்பனவுகளின் பரிந்துரை / அங்கீகாரம்**

நிர்வாகப் பிரிவின் ஒரு முக்கியமான செயல்பாடு, அதிகரிப்புகள், மேலதிக நேரம், நிலுவைத் தொகை, பயணம் மற்றும் இணைந்த படிகள், ஒழுங்காற்று விசாரணைக் கட்டணம், வாகன பழுதுபார்ப்பு, அழிந்துபோகக்கூடிய பொருட்களை வாங்குவது, உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள், புத்தகங்கள் மற்றும் பருவகால வெளியீடுகள் மற்றும் சேவைகள் வழங்கல் தொடர்பான பல்வேறு கொடுப்பனவுகளுக்கு அங்கீகாரம் அளிப்பதாகும். (பாதுகாப்பு, சுத்தம், நீர், தொலைபேசி, மின்சாரம்). பிரிவு உறுதிச்சீட்டுக்களை கவனமாக ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குதல் அல்லது கட்டணத்தின் தன்மை மற்றும் நிதி அதிகார எல்லையைப் பொறுத்து அங்கீகாரம் வழங்கியது. தாமதமின்றி பணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**நலன்புரி நடவடிக்கைகள்**

ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் நலன்புரி சங்கத்தின் ஒருங்கிணைப்புடன் பின்வரும் நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:

- ரீ.ஆர்.சீ.எஸ்.எல் நலன்புரி சங்கத்தின் உதவிக்காக ‘‘ஸ்வரா வசந்தய’’ என்ற மெல்லிசை இசை நிகழ்ச்சி 2019 மார்ச் 29 அன்று தாமரைத் தடாக அரங்கில் நடைபெற்றது.
- ஒரு நோய் காரணமாக துண்டிக்கப்பட்ட ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் ஊழியருக்கு ஒரு செயற்கை கால் நன்கொடையாக வழங்கப்பட்டது.
- ரியூ அஹுங்கல்ல ஹோட்டலில் (2019 ஒக்தோபர் 12 முதல் 13 வரை) பணியாளர்கள் பின்னூட்டல் திட்டம் நடைபெற்றது. இந்த திட்டத்தின் நோக்கம் குழு கட்டமைத்தல் மற்றும் பிணைப்பை உருவாக்குதல், ஊழியர்களை ஊக்குவித்தல், ஊழியர்களின் மன உறுதியை உயர்த்துதல், புதிய சிந்தனைகளை உருவாக்குதல் மற்றும் உற்சாகத்தை புதுப்பித்தல்.
- தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த பெற்ற ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் நலபுரிச் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளை ஊக்குவிப்பதற்காக பரிசுகளை வழங்குதல்.
- வெசக் திருவிழாவை நினைவுகூரும் வகையில் நிறுவனத்தின் நலபுரிச் சங்கத்தால் தன்சல திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

**விளையாட்டுப் போட்டி**

தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (ரீ.ஆர்.சீ.எஸ்.எல்) வருடாந்த விளையாட்டுப் போட்டி ஒத்திவைக்கப்பட்டு, 2020 பெப்ரவரியில் நிகழ்ச்சியை நடத்த முடிவு செய்யப்பட்டது.

இந்த நிறுவனத்தின் ஊழியர்கள் தேசியவாதிகள் சேவை சாம்பியன்ஷிப் போன்ற பல்வேறு தேசிய போட்டிகளில் பங்கேற்று உயரம் பாய்தலுக்கு 1 வெண்கலப் பதக்கம், ஜாவெலின் வீசுதலுக்கு 1 வெள்ளிப் பதக்கம், பரிதி வீசுவதற்கான 1 வெள்ளிப் பதக்கம் மற்றும் கரமுக்கு ஒரு ரன்னர்-அப் பதக்கம் ஆகியவற்றை வென்றுள்ளனர்.

**நூலகம்**

தொலைத்தொடர்புத் துறையில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள் மற்றும் பிற ஆர்வமுள்ள தரப்பினருக்கு அவர்களின் அறிவைப் புதுப்பிக்க உதவும் நோக்கில் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் நூலகம் நிறுவப்பட்டுள்ளது. ரீ.ஆர்.சீ.எஸ்.எல் நூலகத்தில் தொலைத்தொடர்பு தொடர்பான பாடப்புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளின் பெரிய தொகுப்பு உள்ளதுடன் பயனாளிகளின் தேவையை பூர்த்தி செய்வதற்காக இது தொடர்ந்து பலப்படுத்தப்பட்டு வருகிறது. ரீ.ஆர்.சீ.எஸ்.எல் ஊழியர்களுக்கு மட்டுமல்லாமல், ஆராய்ச்சியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை குழந்தைகள் போன்ற வெளித்தரப்பினர்களுக்கும் இந்த நூலகம் குறிப்பு வசதிகளை வழங்குகிறது. பின்வரும் நடவடிக்கைகள் 2019 இல் மேற்கொள்ளப்பட்டன.

**நூலகத்தின் பராமரிப்பு மற்றும் பலப்படுத்துதல்**

- 2019 ஆம் ஆண்டிற்கான புதுப்பிக்கப்பட்ட கால சந்தா மற்றும் புதிய சஞ்சீகைகளுக்கான கட்டண சந்தா.
- எதிர்கால குறிப்புகளுக்காக விசேட பாடங்களால் செய்தித்தாள்களில் கட்டுரைகள் (அசல்) தொகுப்பை உருவாக்குதல்.
- ரீ.ஆர்.சீ.எஸ்.எல் ஆவணங்களைப் பயன்படுத்தி ஆவணப்படுத்தல் சேவைகள் மற்றும் சுருக்க சேவைகள்.
- ரீ.ஆர்.சீ.எஸ்.எல் தொடர்பான ஆவணங்களை சேகரித்து எளிதான குறிப்புக்காக தனித்தனியாக ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது.
- அமெச்சூர் வானொலி பாடத்திட்டங்கள், பரீட்சை ஆவணங்கள், செய்தித்தாள் கட்டுரை சேகரிப்பு மற்றும் வானொலி சமூகத்தால் வெளியிடப்பட்ட வெளியீடுகள் மற்றும் பரீட்சைத் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி உள்ளிட்ட அமெச்சூர் வானொலி தகவல் சேகரிப்பைத் தயாரிக்கப்பட்டுள்ளது.
- தொலைத்தொடர்பு துறையில் விடய தலைப்புகளைப் பயன்படுத்தி தொலைத்தொடர்பு பற்றிய ஆய்வறிக்கையை தயாரிக்கத் தொடங்கப்பட்டது.
- இன்ட்ராநெட் வழியாக கூடுதலான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு சாதாரண வர்த்தமானிகள் மற்றும் சட்டங்களின் தரவுகளை ஸ்கேன் செய்து தரவுத்தளத்தில் உள்ளிட்டுள்ளது.
- பூர்ண (PURNA) நூலக தரவுத்தள பராமரிப்பு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.
- பூர்ண நூலக தரவுத்தள பராமரிப்பு அமைப்பை பூர்ணவிற்கு மாற்றுதல்: வலை அடிப்படையிலான ஒருங்கிணைந்த நூலக அமைப்பு.
- இணையம் மற்றும் இன்ட்ராநெட் வழியாக பயனாளிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல்களை பரப்புவதை (எஸ்.டி.ஐ) வழங்குவதற்காக செய்தி ஆவணங்களின் குறிப்பிட்ட மூலக் கட்டுரைகளுக்கு தரவு செயலாக்கம் செய்யப்பட்டுள்ளது. பூர்ண தரவுத்தளத்தைப் பயன்படுத்தி இலத்திரனியல் முறையில் நூலக கடன் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

**ஏனைய நூலகங்களின் வசதிகளைப் பெற உறுப்புரிமையை புதுப்பித்தல**

- பிரிட்டிஷ் கவுன்சில் உறுப்புரிமை புதுப்பிக்கப்பட்டு, பொது நடமாடும் நூலக உறுப்புரிமையை பெற எங்கள் ஊழியர்களுக்கு உதவி வழங்கப்பட்டது.

**முக்கியமான தகவல்களை சேகரித்தல் மற்றும் குறியீடுகளை தயாரித்தல**

- யூரெஸை எளிதில் குறிப்பிடுவதற்கு பின்வரும் பகுதிகளின் தயாரிக்கப்பட்ட குறியீடுகள்.
- நுகர்வோர் விவகாரங்களின் செய்தித்தாள் கட்டுரை தொகுப்பு.
- தாமரை கோபுரத்தின் செய்தித்தாள் கட்டுரை தொகுப்பு
- ரீ.ஆர்.சீ.எஸ்.எல் விளம்பரங்களின் அட்டவணை.

- குறுகிய குறியீட்டின் அட்டவணை
- பேஸ்புக்கின் செய்தித்தாள் கட்டுரை தொகுப்பு.
- சட்டத்தின் அட்டவணை.
- மேலதிக சாதாரண வர்த்தமானிகளின் குறியீடு
- வெற்றிட அறிவிப்புகளின் குறியீடு

**வசதியான நிகழ்ச்சித் திட்டங்கள்**

- ஊழியர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த ‘‘புற்றுநோய் தடுப்பு’’ என்ற சொற்பொழிவை ஏற்பாடு செய்ததிருந்தது.
- தேசிய நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘‘வாசிப்பின் நன்மை’’ குறித்த தேசிய வாசிப்பு மாத திட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துதல்
- தகவல் தேவைப்படும் ஆராய்ச்சியாளர்களுக்கும் நபர்களுக்கும் தகவல்கள் வழங்கப்பட்டது.

**ஊடகம் தொடர்பான நடவடிக்கைகள்**

2019 ஆம் ஆண்டில், ரீ.ஆர்.சீ.எஸ்.எல் ஏற்பாடு செய்த உள்நாட்டு மற்றும் சர்வதேச மாநாடுகள் உள்ளிட்ட முக்கியமான நிகழ்வுகளையும், திறப்பு விழாக்களுக்கான ஊடகக் கவரேஜை ஊடக பிரிவு வழங்கியது. இதுதொடர்பாக, ஊடக பிரிவு இடங்களை பார்வையிட்டது, புகைப்படங்களை கைப்பற்றியது, வீடியோக்களை பதிவு செய்தது, அவற்றைத் திருத்தியது மற்றும் சமீபத்திய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி காப்பக சேகரிப்பில் சேமித்தது. இது குறுந்தகடுகள் / யூ.எஸ்.பி பிளாஷ் டிரைவ்களில் கைப்பற்றப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை சேமித்து நிகழ்வுகளில் பங்கேற்பாளர்களிடையே பரப்பியது. வருடாந்த அறிக்கையின் சிங்கள மொழி ஆதார வாசிப்பு, வருடாந்த அறிக்கையின் அட்டைப் பக்கம் / சிடி அட்டைகளை வடிவமைத்தல் மற்றும் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டிய குறுந்தகடுகளில் பதித்தல் ஆகியவற்றுக்கும் இந்த பிரிவு உதவியது.

மேலும், விளம்பரப் பொருட்கள் மற்றும் ஆவண வீடியோக்களை (ஐ.சி.ரீ நாள் மற்றும் மின் கழிவு முகாமைத்துவ திட்டத்தில் பெண்கள்), சமூக ஊடகங்கள் (ட்விட்டர், யூடியூப் மற்றும் பேஸ்புக்) மற்றும் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் வலைத்தளம் மூலம் பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் இந்த பிரிவு உதவி வழங்கியது. நிர்வாகத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற பிறகு, புகைப்படங்கள் மற்றும் திருத்தப்பட்ட வீடியோ காட்சிகள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டன.

தாமரை கோபுர திட்டத்தின் குறிப்பிட்ட வளர்ச்சி நிலைகளை படமாக்குதல், மேவுகைசெய்தல் மற்றும் சேமித்தல் மற்றும் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் புதிய அலுவலக கட்டிடம் நிர்மாணித்தல் ஆகியவற்றுடன் ஊடகப் பிரிவுக்கு பணிகள் வழங்கப்பட்டன.

## நிதிப் பிரிவு

**கண்ணோட்டம்**

நிதிப் பிரிவின் முக்கிய செயற்பாடு நிதி முகாமைத்துவம் என்பது ஆணைக்குழுவின் அனைத்து கண்காணிப்பு செயற்பாடுகளையும் உள்ளடக்கியது. வருமானத்தைச் சேகரிப்பது மற்றும் முறையான முதலீட்டின் மூலம் அத்தகைய நிதிகளின் உகந்த பயன்பாடு ஆகியவை முக்கிய சிறப்பம்சங்களாகும். கட்டுப்படுத்துதல் மற்றும் இரண்டாவதாக செலவு இல்லை என்பது மட்டுமல்ல, குறிப்பாக நிதி விதிமுறைகளின் தொடர்புடைய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், தொடர்புடைய சுற்றறிக்கைகள் மற்றும் ஆணைக்குழுவின் முடிவுகள் போன்ற சட்டரீதியான தேவைகளுக்குள்ளும் செயற்படுதல்.

மேலும், துல்லியமான நிதி பதிவுகளை பராமரிப்பது நிதிப் பிரிவின் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாகும், ஏனெனில் ஆணைக்குழு முக்கிய முடிவை எடுக்க வேண்டியுள்ளது. பரிவர்த்தனைகளின் துல்லியம் மற்றும் முழுமையை தீர்மானிக்க நிதி அறிக்கைகள் அனைத்து நிதிக் கொள்கைகளும் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள் மற்றும் கணக்கியல் நியமங்களுக்கு இணங்குவதை உறுதிசெய்யவும் அனைத்து அரச நிறுவனங்களும் சட்டத்திற்கு கட்டுப்பட்டவை என்பதை உறுதிசெய்யவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. இலங்கையின் கணக்காளர்கள் மற்றும் நிதி நடைமுறைகள் அரசாங்கத்தின் நிதி விதிமுறைகளுக்கு இணங்குகின்றன. மீளாய்வாண்டில் எங்கள் நிதிநிலைமை அறிக்கைகளை கண்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்துள்ளோம். நிதிப் பிரிவின் செயற்பாடுகள் நிதி அறிக்கைகளில் வரலாற்றுத் தரவைப் பதிவு செய்வது மட்டுமல்லாமல் நிதி நிர்வாகம், செலவுக் கட்டுப்பாடு, திட்ட மதிப்பீடு, அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் மூலோபாய தீர்மானமெடுப்பதில் செயற்திறன் மற்றும் வினைத்திறனாக பங்கேற்பது ஆகியவை பிரிவின் முக்கியமான செயற்பாடுகளாகும்.

**செயற்பாடுகள்**

- நிதி விளைவுகளைப் வெளியிடுதல், பாதீடு / எதிர்வுகூறலுடன் வேறுபாடு மற்றும் அதற்கான காரணங்கள்
- ஆண்டு பாதீடு / எதிர்வுகூறல் தயாரித்தல்.
- உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.
- அனைத்து நிலையான சொத்துகளின் பதிவுகளையும் பராமரித்தல் மற்றும் பாதுகாப்பு மற்றும் பொருத்தமான உச்ச பயன்பாட்டை உறுதி செய்தல்.
- மூலதன மற்றும் வருமானம் செலவு திட்டங்களை செயற்படுத்துவதில் உயர் முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் உதவுதல்.
- வரி திட்டமிடல் மற்றும் தொடர்புடைய சட்டரீதியான அதிகாரத்தரப்புடன் இணங்குதல்.
- கணக்காய்வாளரின் அறிக்கை மற்றும் கணக்காய்வு குழு அறிக்கைகள் போன்ற குறிப்பிட்ட கால செயற்பாடு மற்றும் நிதி அறிக்கையை மீளாய்வு செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் மற்றும் விலகல்கள் ஏதேனும் இருந்தால் அவற்றை சரிசெய்ய சரியான / பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.
- அரசாங்கம் மற்றும் பாராளுமன்றச் சட்டத்தால் விதிக்கப்பட்ட பல்வேறு வரிகளை உடனடியாக சேகரிப்பதை உறுதி செய்தல் மற்றும் பின்தொடர்தல்.
- ஆண்டுதோறும் நிதி அதிகார வழங்கலை தயாரித்தல் மற்றும் ஆணைக்கழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு தேவையான திருத்தங்களைச் செய்தல்.
- நிதிச் சட்டம் மற்றும் தொலைத்தொடர்பு வரிச் சட்டத்தின் கீழ், அரசாங்க திறைசேரிக்கு சேகரிக்கப்பட்ட நிதியை உடனடியாக அனுப்புவதை உறுதி செய்தல்.
- மிகையான நிதிகளின் உச்ச பயன்பாட்டை உறுதி செய்தல், குறைந்த ஆபத்து, அதிக வருமானம் இருந்தால் முதலீடு செய்தல்.
- ஆணைக்குழுவின் காலாண்டு மற்றும் ஆண்டு நிதிநிலைமை அறிக்கைகளைத் தயாரித்தல்.

- வருமானம், செலவு, மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றின் புள்ளிவிபர பதிவுகளை பராமரித்தல் மற்றும் உயர் முகாமைத்துவத்திற்கு அவர்கள் கோரும் போது தகவல்களை வழங்குதல்.

**செயலாற்றல்**

**1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்பு சட்டத்தின் கீழ் வருமானம்**

ஆணைக்குழுவின் வருமானத்தைப் பெறுவதற்கும் சேகரிப்பதற்கும் சட்டரீதியான அதிகாரம் 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்புச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆணைக்குழு வருமானத்தை "வானொலி உரிம கட்டணம், செஸ் கட்டணம், முறைமை செயற்படுத்துனர் உரிம கட்டணம், விற்பனையாளர் உரிமம்" மூலம் பெறுகிறது / சேகரிக்கிறது. பொது சுவிட்ச் தொலைபேசி நெட்வேர்க் (பிஎஸ்டிஎன்) செயற்படுத்துனர் மற்றும் வானொலி அதிர்வெண் பயனாளிகளிடமிருந்து கட்டணம் மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டணங்கள். மேலும், ஆணைக்குழுவின் வருமானம் ஆண்டுதோறும் அதிகரித்து வருவதுடன் இது கீழே குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

*அட்டவணை 30: 2017 - 2019 முதல் ஆணைக்குழுவின் வருமானம்*

| வருமான மூலம் | 2017 (ரூபா '000) | 2018 (ரூபா '000) | 2019 (ரூபா '000) |
|---|---|---|---|
| முறைமை செயற்படுத்துனர் உரிம கட்டணம் | 690,143 | 122,449 | 168,367 |
| செஸ் கட்டணம் | 4,211,920 | 4,550,706 | 4,319,458 |
| வானொலி அதிர்வெண் உரிம கட்டணம் | 6,861,209 | 10,789,520 | 2,224,433 |
| அதிர்வெண் முற்பண கட்டணம் | 4,509,184 | 1,071,429 | 2,807,653 |
| விற்பனையாளர்கள் உரிம கட்டணம் | 13,664 | 13,818 | 13,726 |
| அமெச்சூர் வானொலி உரிம கட்டணம் | 29 | 164 | 18 |
| கப்பல் நிலைய உரிம கட்டணம் | 440 | 450 | - |
| விமான உரிம கட்டணம் | 396 | 401 | - |
| கம்பியில்லா தொலைபேசி விநியோகத்தர் கட்டணம் | 109,217 | 114,619 | 116,388 |
| பரீட்சைக் கட்டணம் | 458 | 368 | 312 |
| விண்ணப்ப செயலாக்க கட்டணம் | 1,428 | 1,020 | 1,016 |
| குறுகிய குறியீடு கட்டணங்கள் | 27,704 | 26,531 | 31,888 |
| நானாவித வருமானம் (நிலையான வைப்பு, ஊழியர் கடன்கள் போன்றவற்றிலிருந்து வட்டி வருமானம்) | 2,272,462 | 1,108,519 | 349,554 |
| **மொத்தம்** | **18,698,254** | **17,799,994** | **10,032,813** |

**2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு வரிச் சட்டத்தின் கீழ் சேகரிப்பு**

தற்போதைய தொலைத்தொடர்பு வரி 2019 நவம்பர் 01 வரை 15% ஆக இருந்தது. 25% குறைப்பு அரசாங்கத்தால் குறைப்பு செய்யப்பட்டதுடன் புதிய தொலைத்தொடர்பு வரி விகிதம் 11.25% ஆகும். இது 2019 திசெம்பர் 01 முதல் அமுலுக்கு வருகின்றது. 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு வரிச் சட்டத்தின் ஏற்பாட்டின் படி தொலைத்தொடர்பு சேவைகள் சிறப்பாக வழங்கப்படுகிறது.

*விளக்கப்படம் 16: தொலைத்தொடர்பு வரி 2017-2019 (ரூபா மில்லியன்)*




**நிதிச் சட்டத்தின் கீழ் சேகரிப்பு**

**(i) சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் வரி**

மேற்குறிப்பிட்ட கண்ட வருமானத்தைத் தவிர, 2009 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நிதிச் சட்டத்தால் திருத்தப்பட்ட 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் படி, ஆணைக்குழு சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனரின் வரியை சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களிடமிருந்து சேகரித்தது.

எனவே, ஆணைக்குழு உள்வரும் உள்நாட்டு அணுகல் கட்டணமாக நிமிடத்திற்கு 0.06 அமெரிக்க டொலர்களை சேகரித்ததுடன் இதில் 50% திரண்ட நிதிக்கு அனுப்புவதுடன் 50% தொலைத்தொடர்பு என நிறுத்திவைக்கப்படுகிறது.

மேலும், ஆணைக்குழு வெளிச்செல்லும் உள்நாட்டு அணுகல் கட்டணங்கள் என வெளிச்செல்லும் சர்வதேச அழைப்புகளிலிருந்து நிமிடத்திற்கு ரூபா 3.00 இனை அறவிடுகின்றது. இது 2019 யூலை 01 முதல் நடைமுறைக்கு வந்தது.

**(ii) செல்லூலர் கோபுர வரி**

இந்த வரி 2019 சனவரி 01 முதல் புதிய வரியாக அறிமுகப்படுத்தப்பட்டதுடன் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இனால் காலாண்டு ரீதியாக சேகரிக்கப்பட்டு திரண்ட நிதிக்கு அனுப்பப்படும்.

**(iii) எஸ்எம்எஸ் (SMS) வரி**

இது மொத்த எஸ்எம்எஸ் என அறிமுகப்படுத்தப்படுவதுடன் எஸ்.எம்.எஸ் ஒன்றுக்கு ரூபா 0.25 வீதம் 2019 ஏப்ரல் 01 முதல் விதிக்கப்படுகிறது.

பின்வரும் விளக்கப்படம் கடந்த மூன்று ஆண்டு வருமான முறையை சித்தரிக்கிறது.

*விளக்கப்படம் 17: சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர் வரி 2017-2019 (ரூபா மில்)*




**இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் மொத்த சேகரிப்பு**

ஆணைக்குழுவின் மொத்த சேகரிப்பு கீழ் சேகரிக்கப்பட்ட வருமானத்தைக் கொண்டுள்ளது,

(i) 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தால் திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புச் சட்டம

(ii) 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு வரி சட்டம்

(iii) 2009 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நிதிச் சட்டத்தில் திருத்தப்பட்ட 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்.

*விளக்கப்படம் 18: ரீ.ஆர்.சீ.எஸ்.எல் 2017-2019 இன் மொத்த சேகரிப்பு (ரூபா மில்)*




**திரண்ட நிதிக்கு பணம் அனுப்புதல்**

அரசாங்க வருமானத்தை வலுப்படுத்த 2019 ஆம் ஆண்டில் ரீ.ஆர்.சி ஆல் ரூபா 27 பில்லியன் பொது திறைசேரிக்கு பின்வருமாறு மாற்றப்பட்டது.

*அட்டவணை 31: திரண்ட நிதிக்கு பணம் அனுப்புதல்*

| விளக்கம | 2017 ரூபா பில்லியன் | 2018 ரூபா பில்லியன் | 2019* ரூபா பில்லியன் |
|---|---|---|---|
| தொலைத்தொடர்பு சட்டம் / ரீ.ஆர்.சி நிதியம் | 22.80 | 21.85 | 8.95 |
| தொலைத்தொடர்பு வரி | 29.13 | 24.35 | 14.30 |
| தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணம் 50% | 3.11 | 2.79 | 2.27 |
| வெளிச்செல்லும் உள்நாட்டு அணுகல் கட்டணங்களுக்கு வரி | 0.73 | 0.54 | 0.19 |
| எஸ்எம்எஸ் வரி | - | - | 0.36 |
| கோபுர வரி | - | - | 1.05 |
| **மொத்தம்** | **55.77** | **49.53** | **27.12** |

### சொத்து, பொறிகள் மற்றும் உபகரணங்கள்

2019 ஆம் ஆண்டில் சொத்து, பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றில் சேர்க்கப்பட்ட ரூபா 61.2 மில்லியனில் வளிப் பதனாக்கிகள், ஏனைய அலுவலக உபகரணங்கள், கையடக்க தொலைபேசிகள், அலுவலக தளபாடங்கள், தொழில்நுட்ப உபகரணங்கள், கணனிகள், வீடியோ அலகு உபகரணங்கள் மற்றும் சேவையகங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்ய முறையே ரூபா 0.69 மில்லியன், ரூபா 11.11 மில்லியன், ரூபா 0.09 மில்லியன், ரூபா 1.56 மில்லியன், ரூபா 3.58 மில்லியன், ரூபா 12 மில்லியன், ரூபா 0.29 மில்லியன் மற்றும் ரூபா 31.88 மில்லியன் செலவிடப்பட்டது.

### முதலீடு

ஆணைக்குழு மக்கள் வங்கியுடன் பணச் சந்தை நாளாந்த பரிவர்த்தனைக் கணக்கைப் பேணிச்சென்று 2019 ஆம் ஆண்டில் இதுபோன்ற பணச் சந்தை பரிவர்த்தனைகள் மூலம் ரூபா 292 மில்லியன் வட்டி வருமானத்தை உழைத்திருந்தது.

* குறிப்பு: 2019 ஆம் ஆண்டிற்கான அனைத்து புள்ளிவிபரங்களும் தற்காலிகமானவை

## தகவல் தொடர்பு தொழில்நுட்ப பிரிவு

கண்ணோட்டம்

தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (ஐ.சி.ரீ) பிரிவு சமீபத்திய ஐ.சி.ரீ செயற்படுத்தப்பட்ட வேலைச்சூழலை அறிமுகப்படுத்தியதுடன் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இந்த செயன்முறையை எளிதாக்குவதற்கான தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகளை வழங்க தொடர்புடைய பங்குதாரர்களுடன் ஈடுபட்டுள்ளது. ரீ.ஆர்.சீ.எஸ்.எல் செயற்பாடுகளின் செயற்திறனையும் வினைத்திறனையும் உறுதிப்படுத்தவும் தகவல் தொழில்நுட்பத்தின் மூலோபாய பயன்பாட்டின் மூலம் செயற்பாடுகளை மேம்படுத்தவும் ஐ.சி.ரீ பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது.

### செயற்பாடுகள்

- ஊழியர்களின் தகவல் தொழில்நுட்ப (ICT) இயலளவு மேம்பாடு
- வீதி வரைபடத்துடன் ஐ.சி.ரீ சீரமைத்தல்
- கூட்டு பணிச்சூழலுக்கு பயனுள்ள தகவல்களை உருவாக்க தரவை செயற்திறனாக செயற்படுத்த கணனிமயமாக்கப்பட்ட தகவல் முறைமைகளை அறிமுகப்படுத்துவதுடன் பேணிச்செல்கின்றது.
- தரவு பாதுகாப்பு, இரகசியத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் கிடைக்கும் தன்மை ஆகியவற்றில் மிக உயர்ந்த மட்டத்தை வழங்குகிறது.
- முறைமைகளின் அதிக அளவு கிடைக்கும் தன்மை மற்றும் மீட்டெடுப்பை வழங்குகின்றது.
- பாதுகாப்பான மற்றும் நம்பகமான கணனி சூழலை உறுதி செய்கிறது.
- ரீ.ஆர்.சீ.எஸ்.எல் வலைத்தளம் மறு வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி.
- ரீ.ஆர்.சீ.எஸ்.எல் வலைத்தள உள்ளடக்கங்களை ஒழுங்குமுறையாக புதுப்பித்தல்.
- ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் ஐரீ சொத்து முகாமைத்துவ முறைமையை பராமரித்தல்.
- நிதி மற்றும் நிர்வாக பிரிவுகளுக்கான ஈஆர்பியை பெற்று அமுல்படுத்துதல்
- வைபை இயலளவு மற்றும் பிணைய பாதுகாப்பை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- சேவையக பராமரிப்பு ஒப்பந்தங்களில் ஈடுபடுதல்
- அலுவலகம் 365 உரிமம் புதுப்பித்தல்
- தகவல் தொழில்நுட்ப கொள்கை உருவாக்கம் மற்றும் திருத்தங்கள்.
- பொருத்தமான வன்பொருள், மென்பொருள், நெட்வேர்க்கிங் மற்றும் தகவல் தொடர்பு உட்கட்டமைப்பை வழங்குதல்
- ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் முறைமை தேவைகளை அடையாளம் கண்டு தீர்வுகளை வழங்குதல்.
- மென்பொருள் மற்றும் வன்பொருள் அமைப்புகளை குறைந்தபட்ச வேலையில்லா நேரத்துடன் பராமரித்தல்
- இ-அரச செயல்முறை மற்றும் இலங்கையின் இயங்குதளத்தை செயற்படுத்துவதற்கு இணையான சக நிறுவனங்களுடன் பயனுள்ள ஒத்துழைப்பு வழங்குதல்.
- தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப முறைகள் மற்றும் அளவுகோல்களை உருவாக்குவதில் அரச நிறுவனங்களுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.
- ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் அதிகாரப்பூர்வ சமூக ஊடக முன்னணியை நிர்வகித்தல்.
- சைபர் ஸ்பேஸில் சைபர் பாதுகாப்பு மற்றும் நெறிமுறை பயனாளிகள் நடத்தை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ரீ.ஆர்.சீ.எஸ்.எல், எஸ்.எல்.சி.இ.ஆர்.ரீ மற்றும் சி.ஆர்.டி இன் எம்ஓடீ உடன் இணைந்து பணியாற்றுதல்.

### ஊழியர்களின் ஐ.சி.ரீ இயலளவு மேம்பாடு

தொழில்நுட்ப வளர்ச்சியில், நிறுவன ஊழியர்களுக்கு ஐ.சி.ரீ பற்றிய அறிவு தேவையாகும். ரீ.ஆர்.சீ.எஸ்.எல் ஊழியர்களின் தொழில்நுட்ப விழிப்புணர்வை அதிகரிக்க, உள்ளக ஊழியர்களின் அறிவை மேம்படுத்த ஐ.சி.ரீ பிரிவு பல ஐ.சி.ரீ தொடர்பான தொழில்நுட்ப அமர்வுகளை ஏற்பாடு

செய்திருந்தது. முக்கியமாக, மைக்ரோசொ.ஃப்ட் அடிப்படையிலான அறிவு பெரும்பாலான ஊழியர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது, ஏனெனில் அவர்களில் பெரும்பாலோர் மைக்ரோசொ.ஃப்ட் தயாரிப்புகளைப் பயன்படுத்துகிறார்கள், மேலும் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் ஐ.ரீ ஊழியர்களுக்காக தரவுத்தள பாதுகாப்பு குறித்த ஒரு செயலமர்வு நடத்தியுள்ளோம். மேலும், ரீ.ஆர்.சீ.எஸ்.எல் மற்றும் செயற்படுத்துனர்களுக்கான ஐ.ரீ இடர் மதிப்பீடு குறித்த செயலமர்வு ஏற்பாடு செய்துள்ளோம். இந்த அமர்வை ஐரோப்பிய ஒன்றிய சைபர் பின்னடைவு 4 அபிவிருத்தி திட்டத்தின் சைபர் பாதுகாப்பு முக்கிய நிபுணர் திரு. கிளைட் மேகி நடத்தினார்.

**பிணைய பாதுகாப்பு மற்றும் வை.ஃபை திறனை மேம்படுத்துதல்**

ரீ.ஆர்.சீ.எஸ்.எல் நெட்வேர்க் சூழலை அங்கீகரிக்கப்படாத அணுகல், சாதன பாதிப்புகள் மற்றும் வைரஸ் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்கும், முறையற்ற செயல்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கும் ஒரு உயர்நிலை பாதுகாப்பு அமைப்பை ரீ.ஆர்.சீ.எஸ்.எல் நிறுவியுள்ளது. ரீ.ஆர்.சீ.எஸ்.எல் நெட்வேர்க் சூழலைப் பாதுகாக்க நெட்வேர்க்கில் போர்ட்டிகேட் 800 டி பாதுகாப்பு அமைப்பு (பயர்வோல்) நிறுவப்பட்டது. கடந்த சில ஆண்டுகளில், ரீ.ஆர்.சீ.எஸ்.எல் நெட்வேர்க் பயனர்கள் இணையத்திற்கான முழு திறந்த அணுகல் காரணமாக குறைந்த பிணைய வேகத்தை அனுபவிக்க வேண்டியிருந்தது. பயர்வோல் அமைப்பில் தேவையான பாதுகாப்பு பொருள்கள் மற்றும் கொள்கைகளைப் பயன்படுத்துவதன் மூலம் முன்கூட்டியே பாதுகாப்பு கொள்கைகள் மற்றும் இணைய அணுகலை வடிகட்டுதல் மூலம் ஐ.சி.ரீ பிரிவு வலையமைப்பை விரைவுபடுத்தக் கூடியதாக இருந்தது. நெட்வேர்க் செயற்பாட்டு நுண்ணறிவுகளைப் பெறுவதற்கும், பயர்வோல் பதிவுகளை கண்காணிப்பதற்கும், பாதுகாப்பு நிகழ்வுகளை கண்காணிப்பதற்கும் மற்றும் 24/7 அலைவரிசை பயன்பாட்டை பெறுவதற்கும் ஒரு பிணைய சூழலுக்கு ஒரு பதிவு பகுப்பாய்வு முகாமைத்துவ அமைப்பு மற்றும் பாதுகாப்பு தகவல் நிகழ்வு முகாமையாளர் (SIEM) ஆகியன அவசியமாகும். ரீ.ஆர்.சீ.எஸ்.எல் பாதுகாப்பு அமைப்பின் (பயர்வோல்) முழு நன்மையையும் பெற போர்ட்டிஅனலைசர் 400 இ மற்றும் போர்ட்டிஎஸ்ஐஎம் ஆகியவை பிணையத்தில் நிறுவப்பட்டன. வை.ஃபை திறனை அதிகரிப்பது சாதனங்களின் பயன்பாட்டிற்கான மற்றொரு முக்கிய காரணமாகும். சில கட்டுப்பாடுகளுடன் ஊழியர்களுக்குத் தேவைப்படும் போதெல்லாம் இணைய சேவையைப் பயன்படுத்த முழு அலுவலகப் பகுதியையும் உள்ளடக்கும் வகையில் புதிய வயர்லெஸ் அணுகல் புள்ளிகளை (போர்ட்டிகேட் ஏபி) ஐ.சி.ரீ பிரிவு நிறுவியுள்ளது.

**ஈஆர்பி தீர்வின் ஆரம்பம்**

நிறுவன வள திட்டமிடல் (ஈஆர்பி) அமைப்புகள் ஒரு மையப்படுத்தப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த அமைப்பினுள் தங்கள் வணிக செயல்பாடுகளை நிர்வகிக்க விரும்பும் நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகின்றன. ரீ.ஆர்.சீ.எஸ்.எல் காரணத்திற்காக ஈ.ஆர்.பி தீர்வை ஐ.சி.ரீ பிரிவு ஆரம்பிக்கின்றது, இது காகித கோப்பு செயல்முறையை குறைக்கவும், தற்போது ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இல் செயலாக்கப்படும் ஒவ்வொரு செயல்முறையையும் தானியக்கமாக்குகிறது. தீர்வைச் செயல்படுத்திய பிறகு, ஈஆர்பி உள்ளிட்ட அனைத்து தரவையும் ஒரே தரவுத்தளத்தில் சேமிப்பதுடன் சகல துறைகளும் ஒரே தகவலுடன் செயற்பட அனுமதிக்கிறது. மேலதிகமாக, இந்த எல்லா தரவையும் ஒழுங்கமைக்கலாம், பகுப்பாய்வு செய்யலாம் மற்றும் அறிக்கைகளாக மாற்றலாம். ஈஆர்பி அமைப்புகள் வாடிக்கையாளர் முகாமைத்துவம், மனித வளங்கள், வணிக நுண்ணறிவு, நிதி முகாமைத்துவம் மற்றும் இருப்புக்களை ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வருகின்றன. ஒரு ஆரம்பமாக நிதி மற்றும் நிர்வாக பிரிவுகளுக்கான ஈஆர்பியை வாங்கவும் அமுல்படுத்தவும் தொடங்கப்பட்டது.

**ரீ.ஆர்.சீ.எஸ்.எல் ஐ.சி.ரீ கொள்கை அமுல்படுத்தல்**

ஐ.சி.ரீ கொள்கை என்பது ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இற்கு ஐ.சி.ரீ சூழலை ஒன்றிணைப்பதன் மூலம் சரியான திசையில் அமைப்பதற்கான கட்டாய விடயமாகும். ஐ.சி.ரீ கொள்கையின் வரைவு தற்போது பூர்த்தி செய்யும் பணியில் உள்ளது. ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக இறுதிக் கொள்கை சமர்ப்பிக்கப்படும்.

# உள்ளக கணக்காய்வு பிரிவு

கண்ணோட்டம்

உள்ளக கணக்காய்வு என்பது உத்திகள், குறிக்கோள்கள் மற்றும் ஆபத்தை கருத்தில் கொள்ளும்போது நிறுவனத்திற்கும் அதன் பங்குதாரர்களுக்கும் மதிப்பு சேர்க்கும் நோக்கில் ஒரு சுதந்திரமான செயற்பாடாகும். ஆளுகை, இடர் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு செயல்முறையை மேம்படுத்துவதற்கான வழிகளை வழங்க முயற்சிப்பதுடன் வெளிநிலை ரீதியாக தொடர்புடைய உத்தரவாதத்தை வழங்குகிறது. தரவு மற்றும் வணிக செயல்முறைகளின் முறையான பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடுகளின் அடிப்படையில் அனுபவம் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் ஒரு நிறுவனத்தின் நிர்வாகம், செயற்திறன், இடர் முகாமைத்துவம் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதற்கான உந்துசக்தியாக இது உள்ளது. ஒருமைப்பாடு மற்றும் பொறுப்புக்கூறலுக்கான அர்ப்பணிப்புடன் ஒரு நிறுவனத்திற்குள் உள்ளக கணக்காய்விற்கான நோக்கம் பரந்த அளவில் உள்ளதுடன் செயற்பாடுகளின் செயற்திறன், நிதி அறிக்கையின் நம்பகத்தன்மை, மோசடிகளைத் தடுப்பது மற்றும் விசாரணை செய்தல், சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்குதல் போன்ற பகுதிகளை உள்ளடக்கியிருக்கியுள்ளது.

ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் உள்ளக கணக்காய்வு பிரிவின் (உள்ளக கணக்காய்வாளர்) தலைவர் நேரடியாக ஆணைக்குழுவிற்கு அறிக்கை அளித்து அறிக்கைகள் கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. நிர்வாக ரீதியாக, உள்ளக கணக்காய்வாளர், பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கிறார்.

**செயற்பாடுகள்**

- ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் தற்போதைய கணக்கியல் மற்றும் அறிக்கையிடல் அமைப்புகளை மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் நோக்கங்களை அடைய இயலாமைக்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் (ஏதேனும் இருந்தால்) பற்றிய விசாரணை.
- ரீ.ஆர்.சீ.எஸ்.எல் சொத்துக்கள் எந்த அளவிற்கு இழப்புகள் மற்றும் மோசடிகளிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன என்பதைக் கண்டறிதல்
- பரிவர்த்தனைகளின் தேவைகள், பரிவர்த்தனைகளின் நன்மைகள் மற்றும் கழிவுகள் மற்றும் களியாட்டங்களை அகற்றுவதன் மூலம் செலவுக் குறைப்பு பகுதிகளை ஆராய்வது குறித்து விசாரணை நடத்துதல்.
- மேற்கூறிய பணிகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல் மற்றும் கணக்காய்வுக் குழு கூட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- கணக்காய்வுக் குழுவின் தீர்மானங்களை பொருத்தமான நடவடிக்கை எடுக்க பிரிவுகளின் தலைவர்களுக்கு தயாரித்து அனுப்புதல்.
- அரை ஆண்டு அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.
- ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் / உறுப்பினர்கள் கோரியபோது விசேட விசாரணைகளை மேற்கொள்ளுதல்.
- அவ்வப்போது பணிப்பாளர் நாயகம் / ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட பல்வேறு குழுக்களுக்கு உதவுதல் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.

**செயலாற்றல்**

2019 ஆம் ஆண்டில், ஐந்து கணக்காய்வுக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் இந்த கூட்டங்களில் பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

விடயப் பகுதிகள் உள்ளடக்கி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. கணக்காய்வுக் குழு கூட்டம் 2019 மார்ச் 14 அன்று நடைபெற்றது

1.1 அறிக்கைகள் / விடயங்கள் விவாதிக்கப்பட்டன, தீர்மானங்கள் / நடவடிக்கைகள் பின்வருமாறு எடுக்கப்பட்டன:

| விடயப் பகுதி | நடவடிக்கை / எடுக்கப்பட்ட தீர்மானம் |
|---|---|
| கொழும்பு தாமரை கோபுரத்தின் பொறியியல் கணக்காய்வு | நிபுணத்துவ நபர்களை (தேவைப்பட்டால்) பணியமர்த்துவதன் மூலம் கொழும்பு தாமரை கோபுரத்தில் உள்ள அனைத்து ஆபத்து பகுதிகளையும் உள்ளடக்கிய பொறியியல் கணக்காய்வு / விசேட கணக்காய்வு செய்ய தேசிய கணக்காய்வு அலுவலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. |
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் மேற்கொண்ட அனைத்து விசேட செயற் திட்டங்களையும் கணக்காய்வு செய்வதற்காக பொறியியல் நிபுணத்துவத்துடன் ஒரு உள்ளக கணக்காய்வாளரை நியமித்தல் | ரீ.ஆர்.சீ.எஸ்.எல் மேற்கொண்ட அனைத்து சிறப்புத் திட்டங்களின் உள்ளக கணக்காய்வு செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் பொறியியல் நிபுணத்துவத்துடன் (முன்னுரிமை ஓய்வு பெற்ற பட்டய பொறியியலாளர்) உள்ளக கணக்காய்வாளரை நியமிப்பது குறித்த ஆணைக்குழு பத்திரத்தை சமர்ப்பித்தல். |
| ஐரீ பார்க் அம்பாந்தோட்டை பற்றிய அறிக்கை | விசாரணை அறிக்கையை ஆணைக்குழுவிற்கு தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டது. |
| கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம், பாதீடு மற்றும் பெறுகைத் திட்டம் | பின்தொடர்வதுடன் அனைத்து அறிக்கைகளையும் உரிய திகதிகளில் அல்லது அதற்கு முன்னதாக தயாரிக்கவும் அறிவுறுத்தப்பட்டது. |
| கதிரானவில் கோவை களஞ்சியப்படுத்தல் | புதிய நிர்மாணம் முடியும் வரை ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருத்தல். |
| வாகன கடன் சோதனை | கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட கணக்காய்வு பரிந்துரைகளின் செயற்பாட்டு நிலையை பின்தொடர்ந்து அமுல்படுத்துதல். |
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் முதலீட்டின் அறிக்கை | அரச பிணைப்பத்திரங்கள் மூலம் அரச பிணைப் பத்திரங்களில் மிகை நிதிகளை முதலீடு செய்வதன் சட்டபூர்வமான தன்மை குறித்து பொது திறைசேரியுடன் ஒப்பிட்டுப்பார்த்தல். |
| தொலைத்தொடர்பு வரி 2017/2018 இன் பெறவேண்டியவைகள் மற்றும் கொடுப்பனவுகள் | உரிம நிபந்தனையை ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு மாற்றுவதற்கும், தகுதிகாண் காலத்தில் வணிகம் தொடங்கப்படாவிட்டால் ஒரு வருடத்திற்கும். |
| இடர் கடன் குறித்த கணக்காய்வு | ரீ.ஆர்.சீ.எஸ்.எல் வழங்கிய உள்ளக சுற்றறிக்கைகளுடனான இணக்கத்தை உறுதிப்படுத்துதல். |

2. கணக்காய்வு குழு கூட்டம் 2019 மே 09 அன்று நடைபெற்றது.

2.1 அறிக்கைகள் / விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் தீர்மானங்கள் / நடவடிக்கைகள் பின்வருமாறு எடுக்கப்பட்டன:

| விடயப் பகுதி | நடவடிக்கை / எடுக்கப்பட்ட தீர்மானம் |
|---|---|
| கொழும்பு தாமரை கோபுரத்தின் பொறியியல் கணக்காய்வு | நிபுணத்துவ நபர்களை பணியமர்த்தும் செயல்முறையை விரைவுபடுத்துதல். |
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் மேற்கொண்ட அனைத்து விசேட செயற்திட்டங்களையும் கணக்காய்வு செய்ய பொறியியல் நிபுணத்துவத்துடன் ஒரு உள்ளக கணக்காய்வாளரை நியமித்தல். | ஒப்பந்த அடிப்படையில் உள்ளக கணக்காய்வாளரை நியமிக்க ஆணைக்குழு அங்கீகாரம் அளித்தது.<br><br>கூறப்பட்ட உள்ளக கணக்காய்வாளருக்கான குறிப்பு விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| செயல்நடவடிக்கைத் திட்டம், ஆண்டு அறிக்கை மற்றும் SOR | • 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்<br>• ஆளணி, நிறுவன விளக்கப்படம் மற்றும் SOR ஐ மீளாய்வு செய்தல் |
| கதிரானவில் கோவைகள் களஞ்சியப்படுத்தல் | இரண்டு கொள்கலன்களுக்கான இராக்கைளை அமைத்தல். |
| வாகன கடன் பரிசோதனை | வாகன கடன் சுற்றறிக்கை திருத்துதல். |
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் முதலீட்டின் அறிக்கை | மிகை நிதிகளை முதலீடு செய்வதன் சட்டபூர்வமான தன்மை குறித்து பொது திறைசேரியுடன் சரிபார்த்தல். |
| தொலைத்தொடர்பு வரி 2017/2018 இன் பெறவேண்டியவைகள் மற்றும் கொடுப்பனவுகள் | நல்லிணக்கங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பது குறித்து செயற்படுத்துனர்களுக்கு தெரிவித்தல். |
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் முன்னேற்றங்களை வழங்குவதற்கும் தீர்வு காண்பதற்கும் செயல்முறை குறித்த கணக்காய்வு | ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் உள்ளக சுற்றறிக்கைகளின் தேவைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்தல். |
| கொடுப்பனவுகள் (சம்பளம் மற்றும் தொடர்புடைய கொடுப்பனவுகள், கடன்கள் மற்றும் ஊழியர்களுக்கான முற்பணங்கள் தவிர) | அனைத்து ஊழியர்களுக்கும் தங்கள் கையொப்பங்களை வைக்குமாறு ஒரு நினைவூட்டல் அனுப்புதல். |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து பெறப்பட்ட கணக்காய்வு ஐயவினா | • தொலைத்தொடர்பு கோபுரங்களின் தீவு முழுவதும் பௌதீக மெய்மெய்யாய்வு செய்தல்<br>• உத்தியோகபூர்வ பயணங்கள் மற்றும் தொடர்புடைய செலவுகளில் அந்நிய செலாவணியை வெளியிடுவதற்கு 15.05.2015 திகதியிட்ட சுற்றறிக்கை எம்.எப் 01/2015/01 இன் விதிகளை செயல்படுத்துதல் |

3. 2019 யூலை 30 அன்று நடைபெற்ற கணக்காய்வுக் குழு கூட்டம்

3.1 அறிக்கைகள் / வியங்கள் கலந்துரையாடப்பட்டன, முடிவுகள் / தீர்மானங்கள் பின்வருமாறு எடுக்கப்பட்டன:

| விடயப் பகுதி | நடவடிக்கை / எடுக்கப்பட்ட தீர்மானம் |
|---|---|
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் மேற்கொண்ட அனைத்து விசேட செயற்திட்டங்களையும் கணக்காய்வு செய்ய பொறியியல் நிபுணத்துவத்துடன் ஒரு உள்ளக கணக்காய்வாளரை நியமித்தல். | • பொருத்தமான விண்ணப்பதாரரைத் தேர்ந்தெடுத்தல்.<br>• உள்ளக கணக்காய்வாளர் பொறியியலுக்கான குறிப்பு விதிமுறைகளை (TOR) தயாரிப்பதற்கான குழுவை நியமித்தல். |
| செயல்நடவடிக்கைத் திட்டம், பாதீடு மற்றும் பெறுகைத் திட்டம் | • 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.<br>• 2019 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பாதீடு மற்றும் பெறுகைத் திட்டத்தின் நகல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படும். |
| கதிரானவில் கோவைகள் களஞ்சியப்படுத்தல் | இரண்டு கொள்கலன்களுக்கான இராக்கைகளை அமைத்து பூர்த்திசெய்தல் |
| வாகன கடன் பரிசோதனை | அடுத்த கூட்டத்திற்கான அறிக்கையை சமர்ப்பித்தல் |
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் முதலீட்டின் அறிக்கை | அடுத்த கூட்டத்திற்கான முன்னேற்றத்தை சமர்ப்பித்தல் |
| இடர் கடனைக் கணக்காய்வு செய்தல் | கணக்காய்வு பரிந்துரைகளின் செயல்பாட்டு நிலையைப் பின்தொடர்ந்து அமுல்படுத்துதல். |
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் பெறுகை குறித்த கணக்காய்வு | பெறுகை செயல்முறைகளின் போது அனைத்து சூழ்நிலைகளிலும் ஜிபிஜியின் தேவைகளை கடைபிடிக்க வேண்டும் என்று நிர்வாக பிரிவுக்கு கணக்காய்வு குழு அறிவுறுத்தியது |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து பெறப்பட்ட ஐயவினாக்கள் | • தொலைத்தொடர்பு கோபுரங்களின் தீவு முழுவதும் பௌதீக மெய்மெய்யாய்வு செய்தல்.<br>• வெளிநாட்டு பயணங்களுக்கான உள்ளக சுற்றறிக்கை வெளியிடல்<br>• அலைவரிசையின் ஒளிபரப்பு ஊடக குழுவிலிருந்து தேவையான அனுமதியைப் பெறுதல். |
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் படி 2018 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் நிதிநிலைமை அறிக்கைகள். | எல்லா விடயங்களையும் கருத்தில் கொள்ளல் |

4. கணக்காய்வுக் குழு கூட்டம் 2019 ஆகஸ்ட் 30 அன்று நடைபெற்றது.

4.1 அறிக்கைகள் / வியங்கள் கலந்துரையாடப்பட்டன, முடிவுகள் / தீர்மானங்கள் பின்வருமாறு எடுக்கப்பட்டன:

| விடயப் பகுதி | நடவடிக்கை / எடுக்கப்பட்ட தீர்மானம் |
|---|---|
| கொழும்பு தாமரை கோபுரத்தின் பொறியியல் கணக்காய்வு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடலை ஏற்பாடு செய்து குழுவுக்கு முன்னேற்றத்தை தெரிவித்தல். |
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் மேற்கொண்ட அனைத்து விசேட செயற்திட்டங்களையும் கணக்காய்வு செய்ய பொறியியல் நிபுணத்துவத்துடன் ஒரு உள்ளக கணக்காய்வாளரை நியமித்தல். | குழு உள்ளக கணக்காய்வாளர் பொறியியலுக்கான குறிப்பு விதிமுறைகளை (TOR) தயாரித்திருந்தது. |
| செயல்செயல்நடவடிக்கைத் திட்டம், பாதீடு மற்றும் பெறுகைத் திட்டம் | திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், பாதீடு மீளாய்வு செய்யப்பட்டு அதன் அங்கீகாரத்திற்காக ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்படும். |
| வாகன கடன் சோதனை | முன்னேற்ற அறிக்கையை அடுத்த கணக்காய்வுக் குழு கூட்டத்தில் சமர்ப்பித்தல். |
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் முதலீட்டின் அறிக்கை | வரைவு கடிதத்தை திறைசேரியில் சமர்ப்பித்தல். |
| செஸ் கட்டணம் சேகரிப்பு குறித்த கணக்காய்வு 2018/2019 | 01.01.2018 முதல் 31.12.2018 வரையிலான காலத்திற்கான செஸ் கட்டணங்களின் இணக்க அறிக்கைகளை சமர்ப்பித்தல். |
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலைமைக் கூற்றுக்கள் தொடர்பாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13 (7) (அ) பிரிவின் படியான கணக்காய்வு அறிக்கை. | அனைத்து விடயங்களையும் கவனித்து பதிலளிக்க. |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து பெறப்பட்ட ஐயவினாக்கள் | • நெட்வேர்க் பிரிவால் அங்கீகரிக்கப்பட்ட கோபுரங்களின் எண்ணிக்கை, ஸ்பெக்ட்ராம் முகாமைத்துவ பிரிவு வழங்கிய அதிர்வெண் உரிமங்கள் மற்றும் போட்டி பிரிவினால் சேகரிக்கப்படும் கோபுர வரி தொடர்பான நல்லிணக்கத்தை மேற்கொள்ளல்.<br>• அலைவரிசையின் ஒளிபரப்பு ஊடக குழுவிலிருந்து தேவையான அனுமதியைப் பெறுதல். |

5. 2019 ஒக்தோபர் 10 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வுக் குழு கூட்டம்.

5.1 அறிக்கைகள் / விடயங்கள் விவாதிக்கப்பட்டன, முடிவுகள் / தீர்மானங்கள் பின்வருமாறு எடுக்கப்பட்டன:

| விடயப் பகுதி | நடவடிக்கை / எடுக்கப்பட்ட தீர்மானம் |
|---|---|
| கொழும்பு தாமரை கோபுரத்தின் பொறியியல் கணக்காய்வு | • கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடலை ஏற்பாடு செய்து குழுவுக்கு முன்னேற்றத்தை தெரிவித்தல்.<br>• பொதுமுயற்சிகள் தொடர்பான குழுவின் (COPE) செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்புதல் |
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் மேற்கொண்ட அனைத்து விசேட செயற்திட்டங்களையும் கணக்காய்வு செய்ய பொறியியல் நிபுணத்துவத்துடன் ஒரு உள்ளக கணக்காய்வாளரை நியமித்தல். | • விண்ணப்பதாரருடன் ஒரு நேர்காணலை ஏற்பாடு செய்து கணக்காய்வுக் குழுவுக்கு தெரிவித்தல். |
| செயல்நடவடிக்கைத் திட்டம், பாதீடு மற்றும் பெறுகைத் திட்டம் | • திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், பாதீடு மீளாய்வு செய்யப்பட்டு அதன் அங்கீகாரத்திற்காக ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்படும்.<br>• 2018 இன் ஆண்டு அறிக்கைக்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறல்.<br>• பதவியணியினர், நிறுவன அமைப்பு மற்றும் ஆட்சேர்ப்பு திட்டம் (SOR) ஆகியவற்றை மீளாய்வு செய்தல்<br>• அடுத்த கணக்காய்வுக் குழுவிற்கான முன்னேற்றத்தை சமர்ப்பித்தல். |
| வாகன கடன் பரிசோதனை | திருத்தப்பட்ட கடன் சுற்றறிக்கை அடுத்த கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பித்தல். |
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் முதலீட்டின் அறிக்கை | திறைசேரி அதிகாரிகளை சந்தித்து விடயம் குறித்து கலந்துரையாடல் |
| செஸ் கட்டணம் சேகரிப்பு குறித்த கணக்காய்வு 2018/2019 | • தாமதக் கட்டணம் சேகரித்தல்<br>• விடயங்களைக் கவனிக்க ஒரு குழுவை நியமித்தல். |
| ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலைமைக் கூற்றுக்கள் தொடர்பாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13 (7) (அ) பிரிவின் படியான கணக்காய்வு அறிக்கை. | விடயங்களைக் கவனிக்க குழுவை நியமித்தல். |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து பெறப்பட்ட ஐயவினாக்கள் | • நெட்வேர்க் பிரிவால் அங்கீகரிக்கப்பட்ட கோபுரங்களின் எண்ணிக்கை, ஸ்பெக்ட்ராம் முகாமைத்துவ பிரிவு வழங்கிய அதிர்வெண் உரிமங்கள் மற்றும் போட்டி பிரிவினால் சேகரிக்கப்படும் கோபுர வரி தொடர்பான நல்லிணக்கத்தை மேற்கொள்ளல்<br>• அலைவரிசையின் ஒளிபரப்பு ஊடக குழுவிலிருந்து தேவையான அனுமதியைப் பெறல்<br>• அமைச்சரவையின் UOM இலிருந்து ஆலோசனை சேவைகளுக்கான அங்கீகாரம் பெறல் |

அத்தியாயம்

# 06

## நிதி அறிக்கை

டிசம்பர் 2019 உடன் முடிவடைந்த ஆண்டிற்காக

**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**நிதி நிலைமைக் கூற்றுக்கள்**
**2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு**
*(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)*

| | குறிப்புக்கள் | 2019.12.31 இல் உள்ளவாறு | 2018.12.31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | **4** | 12,142,180,868 | 12,175,521,837 |
| கற்புலனாகாச் சொத்துக்கள் | **4.1** | 1 | 2,277,255 |
| புத்துருவாகும் வேலைகள் | **5** | 21,719,123,143 | 17,803,105,479 |
| முதலீடுகள் | **6** | 354,000,000 | 354,000,000 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **34,215,304,011** | **30,334,904,571** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | **7** | 2,467,771,521 | 3,813,836,424 |
| முற் கொடுப்பனவு மற்றும் முற்பணங்கள் | **8** | 225,504,893 | 581,638,428 |
| கடன் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் | **9** | 2,977,579,154 | 262,911,918 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | **10** | 3,624,973,581 | 3,647,565,507 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **9,295,829,149** | **8,305,952,278** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **43,511,133,160** | **38,640,856,849** |
| **உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **உரிமை மூலதனம்** | | | |
| அரசின் பங்களிப்புத் தொகை | **11** | 526,214,744 | 526,214,744 |
| திரண்ட மிகை | | 19,764,217,681 | 10,568,790,416 |
| மீள மதிப்பீடுசெய்யப்பட்ட மிகை | | 37,380,000 | 37,380,000 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | **20,327,812,426** | **11,132,385,160** |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| செயற்திட்டக் கடன் - எக்ஸிம் வங்கி (தாமரைக் கோபுரம் ) | | 5,775,390,598 | 7,436,902,525 |
| நிறுத்தி வைத்தல் | **12** | 46,152,801 | 46,152,801 |
| பணிக்கொடைக் கொடுப்பனவுகள் | **13** | 22756,459 | 14,042,084 |
| நகர அபிவிருத்தி அதிகாரசபை | | 9,450,000,000 | 9,450,000,000 |
| **மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | **15,294,299,858** | **16,947,097,410** |

**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**நிதி நிலைமைக் கூற்றுக்கள்**
**2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு** ***(தொடர்ச்சி.....)***
***(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)***

| | குறிப்புக்கள் | 2019.12.31 இல் உள்ளவாறு | 2018.12.31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| செலுத்த வேண்டிய கணக்குகள் | **14** | 138,715,771 | 1,934,110,203 |
| முற்பணங்கள், வைப்புக்கள் மற்றும் வேறு கொடுப்பனவுகள் | **15** | 4,295,761,430 | 5,222,557,527 |
| திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய தொகை | **16** | 1,560,142,776 | 1,497,163,849 |
| தாமரைக் கோபுர தாமத பாதிப்பு | | 1,894,400,900 | 1,907,542,700 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **7,889,020,877** | **10,561,374,279** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **23,183,320,735** | **27,508,471,689** |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | **43,511,133,160** | **38,640,856,849** |

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுக்கான முக்கியமான பகுதியாகும். 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செயற்பாடுகளின் கண்ணோட்டத்திலும் அக்காலப் பகுதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் மிகைகள் சரியானதும் உண்மையானதுமான வகையில் நிதிக் கூற்றுக்கள் வழங்குகின்றது என்று நான் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................
**எம்.கே. ஜயந்த**
**பணிப்பாளர் - நிதி**

இந்த நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதற்கும் சமர்ப்பிப்பதற்குமான பொறுப்பு ஆணைக்குழுவுக்குரியதாகும். ஆணைக்குழு சார்பாக அங்கீகரித்து கையொப்பமிட்டது.

.......................
**கமல் குணரத்ன டபிள்யூ.டபிள்யூ.வீ, ஆர்.டபிள்யூ.பீ, ஆர்எஸ்.பீ, யூ.எஸ்.பீ, என்டீசீ,பீ.எஸ்சீ மேஜர் ஜெனரல்(ஓய்வு)**
**தலைவர்**

.......................
**ஓசாத சேனாநாயக்க**
**பணிப்பாளர் நாயகம்**

.......................
**சாமிந்த குமாரசிறி**
**ஆணைக்குழு அங்கத்தவர்**

**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**2019 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் நட்டம் மற்றும் வேறு விளக்கமான வருமானக் கூற்று**
*(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)*

| | குறிப்புக்கள் | 2019.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வருமானம் | **17** | 38,575,208,162 | 48,032,936,440 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | | **38,575,208,162** | **48,032,936,440** |
| **கழி:** ஒழுங்குபடுத்தல் செலவினங்கள் | **18** | (78,881,625) | (82,245,610) |
| **தேறிய மொத்த செயற்பாட்டு வருமானம்** | | **38,496,326,537** | **47,950,690,830** |
| **கழி:** வேறு செலவினங்கள் | | | |
| நிறுவன மற்றும் நிருவாக செலவினங்கள் | **19** | 682,031,488 | 611,910,909 |
| நிதி மற்றும் வேறு செலவினங்கள் | **20** | 4,471,433 | 4,522,806 |
| அறவிடமுடியாக் கடன் தொடர்பாக ஒதுக்கம் | | 0 | 1,308,496 |
| அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல் (இலாபம் / (நட்டம்) | | (73,717,095) | 1,626,395,795 |
| **மொத்த செலவினங்கள்** | | **612,785,826** | **2,244,138,006** |
| **வருமானவரிக்கு முன்னரான தொடர்ச்சியான செயற்பாடு ஊடாக இலாபம்** | | **37,883,540,711** | **45,706,552,824** |
| **கழி:** வருமான வரி | | 0 | (2,349,240,362) |
| **வருமானவரிக்கு பின்னரான தொடர்ச்சியான செயற்பாடு ஊடாக இலாபம்** | | **37,876,397,836** | **43,357,312,462** |
| **வேறு விளக்கமான வருமானம்** | | | |
| பணிக்கொடை ஒதுக்கதின் படி இலாபம் / (நட்டம்) | | (7,142,875) | (5,056,066) |
| **வருடத்திற்கான மொத்த வேறு விபரமான வருமானம்** | | **(7,142,875)** | **(5,056,066)** |
| **வரி செலுத்திய பின்னர் வருடத்திற்கான மொத்த விளக்கமான வருமானம்** | | **37,876,397,836** | **43,352,256,396** |
| **கழி:** ஒருங்கிணைந்த நிதிப் பங்களிப்பு | **21-1** | (27,680,970,570) | (34,529,046,037) |
| **வருடத்திற்கான மொத்த விளக்கமான வருமானம் திரண்ட நிதிக்கான பங்களிப்பின் பின்னரான பங்களிப்பு** | | **10,195,427,265** | **8,823,210,358** |
| **கூட்டு:** | | | |
| **முன்கொண்டு சென்ற மொத்த விளக்கமான வருமானம்** | | **10,568,790,416** | **16,745,580,058** |
| **கழி:** திரண்ட நிதியத்திற்கு பங்களிப்பு | **21-2** | (1,000,000,000) | (15,000,000,000) |
| | | **9,568,790,416** | **1,745,580,058** |
| **முன் கொண்டு சென்ற மொத்த விளக்கமான வருமானம்** | | **19,764,217,681** | **10,568,790,416** |

**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**காசுப் பாய்ச்சல் கூற்று**
**2019 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது**
**(இலங்கை ரூபாவில் வெவளிப்படுத்தப்பட்டுள்ளன)**

| | குறிப்பு | 2019.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கையின் ஊடாக காசுப் பாய்ச்சல்** | | | |
| செயற்பாட்டு நடவடிக்கையின் ஊடாக உருவாக்கப்பட்ட காசு | **22** | 38,034,421,151 | 45,293,062,841 |
| வரி செலுத்தல்கள் | | (4,531,974,300) | (565,611,140) |
| செலுத்திய பணிக்கொடை கடப்பாடுகள் | | (3,750,811) | (4,635,950) |
| **செயற்பாட்டு நடவடிக்கையின் ஊடாக உருவாக்கப்பட்ட நிகரக் காசு** | | **33,498,696,040** | **44,722,815,751** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகணரங்கள் கொள்வனவு | | (62,791,020) | (4,897,318) |
| கற்புலனாகா சொத்துக் கொள்வனவு | | 0 | (3,530,936) |
| புத்துருவாகும் வேலைகளின் கீழான செயற்திட்டங்கள் | | (3,916,017,664) | (2,957,593,599) |
| நிலையான வைப்புக்களின் நிகர முதலீடு | | 0 | 5,867,020,046 |
| நிலையான வைப்பிலிருந்து வட்டி வருமானம் | | 32,741,587 | 0 |
| நிலையான வைப்பில் முதலீடு | | (7,650,000) | (900,000) |
| நிலையான வைப்பிலிருந்து வட்டி வருமானம் - பணிக்கொடைக் கடப்பாடுகள் | | 6,654,523 | 806,301 |
| நிலையான வைப்புக்களின் முதலீடு மற்றும் மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் அரச பிணைப் பத்திரங்களிலருந்து வட்டி வருமானம் | | 0 | 683,832,865 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் விற்பனைகளிலான வருமானம் | | 225,836 | 0 |
| ***முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான நிகர காசுப் பாய்ச்சல்கள்*** | | **(3,946,836,738)** | **3,584,737,359** |
| **நிதிச் செயற்பாடுகளின் ஊடாக உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்துதல் | 23 | 389,770,474 | 502,589,529 |
| பணச் சந்தை கொடுக்கல் வாங்கல்களின் ஊடாக வட்டி வருமானம் | | 310,471,287 | 384,498,838 |
| ஒன்றிணைந்த நிதியத்திற்கான மீளளிப்புக்கள் | | (28,680,970,570) | (49,529,046,037) |
| செயற்திட்டக் கடன் - எக்சிம் வங்கி (தாமரைக் கோபுரம்) | | (1,592,699,043.9) | (1,659,286,484) |
| **நிதிச் செயற்பாடுகள் தொடர்பாக ஈடுபடுத்திய நிகர காசு** | | **(29,573,427,853)** | **(50,301,244,155)** |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் நிகர (குறைவு) / அதிகரித்தல்** | | **(21,568,551)** | **(1,993,691,045)** |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் மாற்றம்** | | | |
| 2019 சனவரி 01 திகதியில் உள்ளவாறு | 10 | 3,647,565,507 | 5,624,491,369 |
| (குறைவு) / அதிகரித்தல் | | (21,568,551) | (1,993,691,045) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் நாணயமாற்று இலாபம் / (நட்டம்) | | (1,023,374) | 16,765,184 |
| 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு | 10 | **3,624,973,581** | **3,647,565,507** |

**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**உரிமை மூலதன மாற்றக் கூற்று**
**2019 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது**
**(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)**

| | அரச பங்களிப்பு | மீள்மதிப்பீட்டு மிகை | திரண்ட மிகை / (குறைவு) | மொத்த உரிமை |
|---|---|---|---|---|
| **2018 சனவரி 01 இல் நிலுவை** | 526,214,744 | 37,380,000 | 16,745,580,059 | 17,309,174,803 |
| **கழி:** திரண்ட நிதிக்கான மாற்றம் | - | - | (15,000,000,000) | (15,000,000,000) |
| | **526,214,744** | **37,380,000** | **1,745,580,059** | **2,309,174,803** |
| 2018 திசெம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த விளக்கமான வருமானம் | - | - | 8,823,210,358 | 8,823,210,358 |
| **2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை** | **526,214,744** | **37,380,000** | **10,568,790,416** | **11,132,385,160** |
| **2019 சனவரி 01 இல் நிலுவை** | 526,214,744 | 37,380,000 | 10,568,790,416 | 11,132,385,160 |
| **கழி:** திரண்ட நிதிக்கான மாற்றம் | - | - | (1,000,000,000) | (1,000,000,000) |
| | **526,214,744** | **37,380,000** | **9,568,790,416** | **10,132,385,160** |
| 2019 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த விளக்கமான வருமானம் | - | - | 10,195,427,265 | 10,195,427,265 |
| **2019 திசெம்பர் 31 இல் நிலுவை** | **526,214,744** | **37,380,000** | **19,764,217,681** | **20,327,812,426** |

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - 2019.12.31**

(இந்தக் குறிப்புக்களில் சகல பெறுமானங்களும் வேறு விதமாக குறிப்பிடப்படாத பட்சத்தில் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளன)

**1. பொதுத் தகவல்கள்**

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டில் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் பிரகாரம், தொலைத்தொடர்புகள் துறையினை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக உருவாக்கப்பட்ட சுயாதீன நிறுவனமாகும்.

ஆணைக்குழுவின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 276, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 08 இல் அமைந்துள்ளது.

சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் பிரதான பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழு சட்டத்தின் மூலம் தமக்குச் சொந்தமான அதிகாரங்கள் தேசிய நலனை மேம்படுத்தும் முகமாக தாம் மிகவும் பொருத்தமானது என கருதும் விதத்தில் மற்றும் விசேடங்கள்.

(அ) இலங்கையில் தேசிய மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவது தொடர்பாக சிறந்த நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய பிரகாரம் நம்பிக்கை வைக்கக் கூடிய மற்றும் வினைத்திறனான சேவைகள், (அவ்வாறான சேவையொன்றை வழங்குதல் நடைமுறைச் சாத்தியமற்ற சந்தர்ப்பங்கள் தவிர) அவசர தேவைகள், பொது தொலைபேசி சேவைகள், பெயர்ப்பட்டியல் சேவைகள், சமுத்திரத் தேவைகள், கிராமிய சேவைகள் மற்றும் வேறு பிரதேசங்களில் தேசிய நலனின் பிரகாரம் தேவையானது என கருதுப்படுகின்ற சேவைகள் உள்ளடங்கலாக, வழங்கப்படுகின்றவையாக வழிவகை செய்தல்.

(ஆ) பந்தி (அ) இன் விஸ்தரிப்புக்கு பாதகமின்றி, சகல செயற்படுத்துனர்களிடமிருந்தும் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள் வழங்குதலை உறுதிப்படுத்தல் தொடர்பாக அந்த அனைத்து செயற்படுத்துனர்களுக்கும் தேவையான தொழில்நுட்ப, நிதி மற்றும் முகாமைத்துவ வளங்கள் உள்ளமையையும் அவர்களினால் அவற்றை பயன்படுத்துகின்றமையையும் பார்த்துக் கொள்ளுதல்.

(இ) அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மற்றும் வழங்கப்படுகின்ற தொலைத்தொடர்புச் சேவைகள் மற்றும் தொலைத்தொடர்பு உபகரணங்களின் தரம் மற்றும் பல்வகைத்தன்மை தொடர்பில் வாடிக்கையாளர்கள், கொள்வனவாளர்கள் மற்றும் வேறு பயன்படுத்துனர்களின் தொடர்புகள் மற்றும் பொதுவாக பொதுமக்கள் நலன்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல்.

(ஈ) தொலைத்தொடர்புச் சேவைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நபர்களுக்கிடையில் வினைத்திறனான

போட்டித்தன்மையொன்றை பேணிச் செல்லல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் அவர்களின் வினைத்திறன் மற்றும் சிக்கனத்தன்மையை மேம்படுத்தல்.

(உ) உள்ளக மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு வசதிகள் பற்றி துரித மற்றும் தொடர்ச்சியான மேம்பாடுகள்.

(ஊ) அத்தியவசியமான தாமதங்கள் அல்லது தடைகள் அல்லது தடைகளின்றி நம்பிக்கையான மற்றும் வினைத்திறனான சேவையொன்றை வழங்குதல் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு இயலுமை உள்ளது என உறுதியாகும்.

(எ) தொலைத்தொடர்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள் தொடர்பாக புதிய தொழில்நுட்ப முறைமைகள் பற்றிய ஆராய்ச்சிகளை மேம்படுத்தல் மற்றும் அவ்வாறான புதிய தொழில்நுட்ப முறைமைகளை மேம்படுத்தல் மற்றும் அம் முறைகளை பயன்படுத்தல்.

(ஏ) இலங்கைக்கு வெளியில் தமது தொழில்முயற்சி நிலையங்கள் உள்ள, தொலைத்தொடர்புச் சேவைகள் பரந்த அளவில் பயன்படுத்துகின்றவர்கள் இலங்கைக்கு உள்ளாக தொழில்முயற்சி நிலையங்களை அமைக்கும் முகமாக ஊக்கப்படுத்தல், மற்றும்.

(ஐ) சர்வதேச குடிபெயர்வுச் சேவை தொடர்பாக இலங்கையை பயன்படுத்திக் கொள்வதனை மேம்படுத்தல்.

## 2. தயாரிப்பதற்கான அடிப்படை - கூற்றுக்களுக்கான இணக்கம்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு தனது நிதிக் கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) மற்றும் இலங்கையின் பட்டைய கணக்காளர்களின் நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்ற இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) மற்றும் 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க தயார்செய்யப்பட்டுள்ளது.

## 3. விசேட கணக்கீட்டு கொள்கைகள் பற்றிய சுருக்கம்

இந்த நிதிக்கூற்றுகளை தயார் செய்வதில் பயன்படுத்தப்பட்ட பிரதான கணக்கீட்டு கொள்கைகள் கீழ்வருமாறு.

இந்த கணக்கீட்டு கொள்கைகள் வேறுவிதமாக குறிப்பிடப்படாத பட்சத்தில், சமர்ப்பிக்கப்பட்டுள்ள வருடத்துக்காக சரியாக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

### 3.1 தயாரிப்புக்கான அடிப்படை

இலங்கை தொலைத்தொடர்புள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் தொலைத்தொடர்புகள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (''SLFRS'') இணங்கவும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (LKAS) இணங்கவும் தயார் செய்யப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய எண்ணக்கருவின் கீழ் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கணக்குகளில் பணவீக்க விளைவுகள் தொடர்பாக சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

### 3.1.1. ஐந்தொகை திகதியின் பின்னரான நிகழ்வுகள்.

ஐந்தொகை திகதியின் பின்னர் நிகழ்ந்த சகல கணிசமான நிகழ்வுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. தேவையான சந்தர்ப்பங்களில் கணக்கு வைப்பு தொடர்பாக, பொருத்தமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.1.2. வெளிநாட்டுச் செலாவணி மாற்றம் செய்தல்.

கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்த சந்தர்ப்பத்தில் நிலவிய, வெளிநாட்டு செலாவணி சதவீதம் சகல வெளிநாட்டு நாணயங்களிலும் நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள ஐந்தொகை திகதியில் காணப்படுகின்ற, செலாவணி சதவீதத்திற்கு ஏற்ப, வெளிநாட்டு நாணயத்தில் காணப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. பெறுபேறுகளாக ஏற்படுகின்ற இலாபம் அல்லது நட்டம், வருமானக் கணக்குடன் வருமானத்தில் காட்டப்பட்டுள்ளன.

## 3.2 சொத்துக்கள் மற்றும் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படை

### 3.2.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

#### (அ) அங்கிகரிப்பின் போது அளவீடு

சகல ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் திரண்ட பெறுமானத்தின் விரயம் அல்லது தேய்வடைந்த நட்டத்தின்படி பதிவு செய்யப்படும் ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பற்றிய கிரயம் அதன் கொள்வனவு விலை மற்றும் பயன்பாட்டிற்கு எதிர்பார்க்கின்ற, சொத்துக்களின் சேவை நிலைமையின் அடிப்படையில், நேரடியாக உள்ளீர்க்கப்படும் கிரயத்துடன் உள்ளடங்கும்.

ஆணைக்குழுவின் உருப்படிகளுடன் இணைந்த எதிர்கால பொருளாதார பெறுபேறுகளினை கொண்டுவருகின்ற அல்லது போக்கினை மேற்கொள்வது தொடர்பில் நிலையான விதத்தில் சொத்துக்களை கொள்வனவு செய்தல், வியாபித்தல் மற்றும் மேம்படுத்தல் போன்ற நோக்கில் மேற்கொள்ளப்படுகின்றதும் காலஎல்லை தொடர்பாக, கிரயம் மூலதன செலவீனமாக கருதப்படும். மாற்றீடு செய்யப்படும் பகுதிகளுக்கான புத்தகங்களில் காட்டப்படுகின்ற பெறுமதி அறிமுகம் செய்யப்படாது. கொண்டுவரப்படுகின்ற பதிலீடுசெய்யப்பட்ட உதிரிப் பாகங்கள் மீள் கணிப்பீடு செய்யப்படுகின்றன. ஏனைய சகல பழுதுார்தத்தல்களும் பாாமரிப்புக்களும் அவை ஏற்பட்ட நிதியாண்டு காலப்பகுதியின் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்படுகின்றன.

#### (ஆ) பெறுமானத்தேய்வு செய்தல்

காணியினை பெறுமானத்தேய்வு செய்ய முடியாது. ஆதனம் பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரயம் அல்லது அவற்றின் எஞ்சிய பெறுமதி தொடர்பாக மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அவற்றை மதிப்பீடு செய்யப்பட்ட வினைதிறன்காண் ஆயுட்காலம் பூராக ஒதிக்கீடு செய்வது தொடர்பாக வேறு சொத்துக்கள், இதனை பெறுமானத்தேய்வு செய்தல் எளிய நேர்கோட்டு முறைமையினை பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றது. சொத்தொன்றைப் பயன்படுத்துவதற்கு ஆரம்பித்த மாதத்திற்கு பெறுமானத்தேய்வு செய்யப்படுவதுடன் சொத்தை அகற்றும் மாதத்திற்கு பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை.

**(இ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்படு ஆயுட்காலம்**

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 20 வருடங்களுக்கு மேல் |
| தொலைத்தொடர்பு கோபுரங்கள் | 10 வருடங்களுக்கு மேல் |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகள் | 10 வருடங்களுக்கு மேல் |
| அலுவலக உபகரணங்கள் | 10 வருடங்களுக்கு மேல் |
| கணனிகள் | 04 வருடங்களுக்கு மேல் |
| வளிப்பதனாக்கி இயந்திரம் | 10 வருடங்களுக்கு மேல் |
| மோட்டார் வாகனங்கள் | 08 வருடங்களுக்கு மேல் |
| மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் | 10 வருடங்களுக்கு மேல் |
| மின் உயர்த்தி இயந்திரம் | 10 வருடங்களுக்கு மேல் |
| அலுவலக தொலைபேசிகள் | 10 வருடங்களுக்கு மேல் |
| அலுவலக தளபாடம் | 10 வருடங்களுக்கு மேல் |
| தொழில்நுட்பக் கருவிகள் | 10 வருடங்களுக்கு மேல் |
| இணையதள சேர்வர் | 04 வருடங்களுக்கு மேல் |
| உடற்பயிற்சி உபகரணங்கள் | 04 வருடங்களுக்கு மேல் |
| வீடியோ அலகின் உபகரணங்கள் | 04 வருடங்களுக்கு மேல் |

**(ஈ) கற்புலனாகாச் சொத்துக்கள்**

கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட கிரயத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் அனுமதிகள் மூலதன மயப்படுத்தப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட மென்பொருளை பயன்படுத்துவதற்கு கொண்டுவரப்பட்டது. இந்த செலிவனங்கள் ஒரு வருடத்திற்கு மேல் சாட்டுதல் செய்யப்படுகின்றது.

**(உ) புத்துருவாகும் மூலதன வேலைகள்**

செய்து கொண்டு செல்லப்படும் பணிகளின் மூலதன கிரயம் குறிப்பிடப்பட்டுள்ளன. இது மூலதன எதிர்பார்ப்பில் கட்டிடம் நிர்மாணித்தல் மற்றும் கட்டமைப்பு அபிவிருத்தியில் நேரடியாக செலவு செய்யப்படுகின்ற மூலதன தன்மையின் செலவினமாகும்.

**(ஊ) மீள் அங்கீகாரம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரங்களின் முன் கொண்டு சென்ற பெறுமதி விற்பனையின் போது மீள் அங்கிகாரம் செய்யப்பட்டது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முன்கொண்டு சென்ற பெறுமதியின் விற்பனையிலிருந்து கிடைத்த பெறுமதியிற்கு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வருவாய் மற்றும் நட்டங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இலாபம் மற்றும் நட்டக் கணக்கில் ஏனைய வருமானத்துடன் நிகர பெறுமதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**3.2.2 முதலீடுகள்**

1998 ஆம் அண்டின் போது ஆணைக்குழு திறைசேரி வைப்புக்களில் இருந்தான முதலீடுகளின் கீழ் ரூபா 3545,000,000 தொகையை அறவிட்டிருந்தது.

1998 ஆம் அண்டின் போது பொதுத் திறைசேரியால் பேணிச்செல்லப்பட்ட பொது வைப்புக் கணக்கிலிருந்து ரூபா 354,000,000 தொகை பெறப்பட்டிருந்தது. ஆணைக்குழுவின் 1998 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகள் மீதான 1971 இன் 38

ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(சீ) இன் பிரகாரமான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பிரிவு இலக்கம் 2.5.1(ஊ) இல் "பொது வைப்புக் கணக்கிலிருந்தான வட்டி மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் பெறவேண்டிய வட்டி கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அந்த வைப்புக்களின் மீதி ரூபா 354 மில்லியனாக இருந்தது" எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனால் 2001, 2000, 1999 திசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடங்களுக்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 25 மில்லியன் தொகை பெறவேண்டிய திறைசேரி வைப்பு வட்டியாக காட்டப்பட்டிருந்தது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்பட்ட 2002 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாாரிக்கப்பட்ட நிதிக்கூற்றில் 2002 ஆம் ஆண்டின் போது தறைசேரியால் பொது வைப்புக் கணக்கிற்கு எந்தவொரு தொகையும் செலுத்தாதிருந்தமையால் திறைசேரி வைப்பிற்கான திரண்ட வட்டி வருமானக் கணக்கு திரண்ட மிகையிலிருந்து குறைவடைந்திருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.

### 3.2.3. கிடைக்க வேண்டிய கணக்குகள்

கிடைக்க வேண்டிய கணக்குகளினை சேகரித்துக்கொள்ள முடியாத தொகைகள் கழிக்கப்பட்டு காசு பற்றுச்சீட்டுக்களின் மூலப்பிரதிகளின் பெறுமதிகளின்படி முன்கொண்டு செல்லப்படுவதுடன் இனங்காணப்படும். ஐயத்திற்கிடமான பெறவேண்டியவைகள் நீண்டகாலமாக இல்லாதவிடத்து, மதிப்பீட்டுப் பெறுமதி கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

### 3.2.4. முற்கொடுப்பனவு மற்றும் முற்பணங்கள்

**வேலை ஆரம்பிப்பு முற்பணம்**

(அ) தாமரைக் கோபுரம் - ஆண்டின் போது 100% உம் அறவிடப்பட்டுள்ளது.

(ஆ) தகவல் தொழில்நுட்ப பூங்கா -IT Park செயற்திட்டத்தின் விசாரணை செயற்பாடுகள் ஐ.சி.ரீ.ஏ.டி நிபந்தனைகளின் பிரகாரம் நடைபெறுகின்றது.

### 3.2.5 காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

காசு மற்றும் காசுக்குச் சமமனவைகள் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள பணச் சந்தை சேமிப்புக் கணக்கில் உள்ளவைகளைக் குறிப்பிடும்.

### 3.3. பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கங்கள்

ஐந்தொகை திகதியில் காணப்படுகின்ற சகல கணிசமான பொறுப்புக்கள் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் ஐந்தொகை திகதியில் காணப்படுகின்ற, ஆனால் பெறுமதி சரியாக மதிப்பிடப்படாத பொறுப்புக்கள் தொடர்பாக கணிசமான ஒதுக்கீடினை மேற்கொண்டுள்ளது.

நிதி நிலமை கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி முதல் ஒரு வருடத்தினுள் கோரிக்கையின் படி செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் நிதிக்கூற்றில் நடைமுறை பொறுப்பாக கருதப்படும். நிதி நிலைமைக்கூற்றில் நிதிக்கூற்று தினத்திலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் நடைமுறையல்லா பொறுப்புக்களாக கருதப்படும்.

### 3.3.1 மூலதன கடப்பாடுகள் மற்றும் நிச்சயமற்ற பொறுப்புக்கள்

நிதி நிலைமைக்கூற்று திகதியில் உள்ள மூலதன செலவின கடப்பாடுகள் மற்றும் நிச்சயமற்ற பொறுப்புக்கள் தொடர்பாக கணக்குகளில் குறிப்புக்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.3.2. பதவியணிக்கான நன்மைகள்

**(அ) ஓய்வு நலன் ஒதுக்கம்**

ஆண்டின் போது ஓய்வு பெறும் பணிக்கொடை ஒதுக்கம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2019(ரூபா) | 2018 (ரூபா) |
|---|---|---|
| **நிதி ஆண்டு ஆரம்பத்தில் மீதி** | **62,930,515** | **49,963,007** |
| நடமாடும் சேவை கிரயம் | 3,683,105 | 3,359,039 |
| வட்டி கிரயம் | 4,171,706 | 3,993,620 |
| **விளக்கமான வருமான கூற்றின் இலாபம் மற்றும் நட்டம் சாட்டுதல்** | **7,854,811** | **7,352,659** |
| உண்மையான நட்டம் / (இலாபம்) | 7,142,875 | 5,056,066 |
| செலுத்தப்பட்ட நலன்கள் | (3,750,812) | (4,635,950) |
| **கூட்டு:** பணிக்கொடை கடப்பாடுகளை மீளளிப்புச் செய்வதற்கான முதலீடுகள் மீதான உழைக்கப்பட்ட வட்டி | 6,654,523 | 5,194,733 |
| **வருட இறுதியில் நிலுவை** | **80,831,913** | **62,930,515** |

ஆணைக்குழுவினால் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்துதல் சட்டத்தின் கீழ் தேவையான பிரகாரம் சகல பொதுத்தகைமையுடைய ஊழியர்கள் தொடர்பான நலன்திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. நலன்திட்டங்களின் நிதியங்கள் இல்லை.
நிச்சயமான நலன் திட்டத்தின் ஊடாக ஊழியர் ஒருவர் ஓய்வு பெறுவதின்படி பெற்றுக்கொள்ளப்படுகின்ற நலன்களின் பெறுமதி கீழே விளக்கப்படுத்தப்படுகின்றது. நிச்சயமான நலன் திட்டங்கள் பற்றி நிதி நிலைமை கூற்றில் இனங்காணப்பட்ட பொறுப்புக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 19' ஊழியர் நலன்களினை தீர்மானித்துள்ள பிரகாரம் எதிர்வு கூறி, அலகு செலவு முறைமை பயன்படுத்தப்பட்டு ஆணைக்குழுவினால் வருடாந்தம் கணக்கிடப்படுகின்றது.

கடந்த வருடத்தில் அதிகம் அல்லது பற்றாக்குறை காரணமாக ஏற்படுகின்ற மாற்றத்தினூடாக எழுகின்ற இலாபம் அல்லது நட்டம் அது நிகழ்கின்ற கால எல்லையில் விளக்கமான வருமான கூற்றுத்தொடர்பாக அறவீடு செய்தல் அல்லது செலவுவைத்தல் மேற்கொள்ளப்படும். விளக்கமான வருமான கூற்று வருடம் தொடர்பாக பணிக்கொடையினை அறவீடு செய்தல் நேரடியாக இனங்கானப்படும். ஆணைக்குழுவினால் பணிக்கொடை பொறுப்புகள் தொடர்பாக சமமான பெறுமதி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படும்.

கீழ் குறிப்பிட்ட பிரதான உண்மையான எடுகோள்களை கவனத்திற் கொண்டு ஆணைக்குழுவினால் பணிக்கொடை ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டது.

கழிவு சதவீதம் - வருடாந்தம் 8%

சம்பள அதிகரிப்பு சதவீதம் - 1% - 6.7%

ஓய்வுபெறும் வயது - 60 வயது

**(ஆ) நிச்சய பங்குபற்றல் திட்டம்**

நிச்சிய பங்கு பெற்றல் திட்டம் தொடர்பாக பங்களிப்பு பற்றிய பொறுப்பு விளக்கமான வருமான கூற்றில் மேற்கொள்ளப்படுகின்ற செலவினமாக இனங்காணப்படும்.

**(இ) ஊழியர் சேமலாப நிதியம்** (EPF) **மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்** (ETF)

ஆணைக்குழுவின் சகல ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்தினதும் (EPF) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினதும் (ETF) அங்கத்தவர்களாகும்.

ஆணைக்குழு ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி (ETF) தொடர்பாக முறையே 15% இற்கும் மற்றும் 3% இற்கும் குறையாத மொத்த சம்பளத்தின் சதவீதமாக பங்களிப்புச்செய்வதுடன் ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) 10% பங்களிப்புச் செய்கின்றனர்.

**3.4 வருமான இனங்காணல்**

**3.4.1** வருமான விடயங்கள் குறிப்பு 3.4.1.2 இலிருந்து 3.4.1.4 வரை தவிர வருமானங்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 18 இற்கு ஏற்ப பிரதானமாக இனங்காணப்படும்.

**3.4.1.1 அலைவரிசை அனுமதிப்பத்திர கட்டணம்**

பட்டியல்களை விநியோகிக்கும் போது குறித்த ஆண்டு காலப்பகுதியில் அலைவரிசை அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மாற்றப்பட்ட முறை பின்வருமாறு இருந்தது. அதன் படி புதிய முறைமையில் அலைவரிசை அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் காசு அடிப்படையில் இனங்காணப்படும். அதன் பிரகாரம் அலைவரிசை அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் தொடர்ந்துவரும் வருடத்தின் வருமான முற்பணத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு சேகரிக்கப்படுவதுடன் முற்பணங்கள், வைப்புக்கள் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள் என்ற தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றது.

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் யாரேனும் வானொலி அலைவரிசை அல்லது வானொலி அலைவரிசைக் கற்றைகளை பயன்படுத்துகின்றவர்களிடம் இருந்து அலைவரிசை அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படுகின்றது. அதனால் 2019 இலிருந்து கப்பல் நிலையக்

கட்டணம் மற்றும் விமான அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பன வானொலி அலைவரிசை அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் கீழ் வகைப்படுத்தப்படுகின்து.

### 3.4.1.2 செயற்படுத்துனர் அனுமதிப்பத்திரக் கட்டணம்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் தொலைத்தொடர்புகள் செயற்படுத்துனர்களுக்கு 10 வருடங்களுக்கு அல்லது 05 வருடங்களுக்கு புதிய அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் போது அல்லது காலாவதியான அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் போது செயற்படுத்துனர்களின் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் காசு அடிப்படையில் இனங்காணப்படும்.

### 3.4.1.3 வர்த்தக அனுமதிக் கட்டணம் / வயர்களற்ற தொலைபேசி வழங்குனர் கட்டணங்கள் / சிறிய வயர்களற்ற கட்டணங்கள் / அனுமதிப்பத்திர செயன்முறை கட்டணம்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் யாரேனும் நபருக்கு அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிக்கும் போது வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் காசு அடிப்படையில் இனங்காணப்படும்.

### 3.4.1.4 செஸ் கட்டணம்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 22 (ஜீ) இன் நிபந்தனைகளுக்கு ஏற்ப செஸ் கட்டணம் இனங்காணப்படும்.

### 3.4.2 தொலைத்தொடர்புகள் வரி

2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் சட்டத்தின் கீழ் தொலைபேசி செயற்படுத்துனர்களிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற தொலைத்தொடர்பு வரிகள் வருமானமாக அங்கிகரிக்கப்படுவதுடன் அது உடனடியாக அரச திரண்ட நிதிக்கு மாற்றப்படுகின்றது.

தொலைத்தொடர்பு சேவைக்கான தொலைத்தொடர்பு வரிகளை 2018.11.05 முதல் 25% இலிருந்து 15% வரை குறைப்பதற்கும் மீண்டும் 2019.12.01 முதல் 15% இலிருந்து 11.25% வரை குறைப்பதற்கும் 2001 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தைத் திருத்துவதற்கு 2019.11.27 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை அமைச்சர்களின் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது.

வரையறுத்த சிறிலங்கா கேபள் செடலைட் நெட்வேர்க் (தனியார்) நிறுவனம், வரையறுத்த ஆஸ்க் கேபிள் விசன் (தனியார்) கம்பனி, வரையறுத்த சுப்ரீம் சட் (தனியார்) கம்பனி, வரையறுத்த லங்கா புரேட் பேண்ட் நெட்வோர்க் (தனியார்) கம்பனி மற்றும் வரையறுத்த சிடி கேபள் லிங்க் நிறுவனம் போன்றவற்றிலிருந்து செலுத்தப்படாத தொலைத்தொடர்புத் தீர்வை மற்றும் செஸ் கட்டணங்களின் அறவிடல் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு ஏற்பாட்டின் பிரகாரம் பிழையான தகவல் தொடர்பாடல் கொடுப்பனவுகள் தொடர்பாக வரையறுத்த லங்கா கேபள் செடலைட் நெட்வோர்க் (தனியார்) நிறுவனம் மற்றும் வரையறுத்த லங்கா புரேட் பேண்ட் நெட்வோர்க் (தனியார்) கம்பனிகளுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 3.4.3. தொலைத்தொடர்பு அபிவிருத்தி கட்டணம்.

2004 ஆம் ஆண்டில் 11 இலக்க நிதிச்சட்டத்தின் III ஆவது பகுதியின் கீழ் வெளியக பிரவேச செயல்படுத்துனர்களிடமிருந்து கிடைக்கின்ற தொலைத்தொடர்பு அபிவிருத்தி கட்டணங்கள் வருமானமொன்றாக இனங்காணப்படும். பின்னர் இந்த வருமானத்திலிருந்து 50 சதவீதம் அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திற்கு மீளளிப்பு செய்யப்படும்.

### 3.4.4 சர்வதேச ரீதியாக வெளிச்செல்கின்ற அழைப்புக்களுக்கான வரி

2004 ஆம் ஆண்டின் 11 இலக்க நிதிச்சட்டத்தின் III ஆம் பிரிவு மற்றும் 2011 திசெம்பர் 29 ஆந் திகதிய 1738/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின் கீழ் வெளியக பிரவேச தொலைபேசி செயற்பாட்டு கம்பனிகளினால் கிடைக்கின்ற சர்வதேச வெளிச்செல்லும் அழைப்புகள் தொடர்பாக வரிகள் வருமானமொன்றாக குறித்த திகதியில் அல்லது வழங்கப்பட்ட திகதியில் இனங்காணப்பட்டுள்ளதுடன் அரசின் திரண்ட நிதியத்திற்கு மீளளிப்புச்செய்யபடுகின்றன.

2004 ஆம் ஆண்டின் 11 இலக்க நிதிச்சட்டத்தின் கீழ் 2019 மே 14 ஆந் திகதிய 2123/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 2019 இன் பாதீட்டு தீர்மானங்களின் பிரகாரம் வெளியக உள்நாட்டு பிரவேச தொலைபேசிகளுக்கான (OLAC) கட்டணங்கள் 2019.06.01 முதல் அமுலாகும் வகையில் நீக்கப்பட்டிருந்தது.

### 3.4.5 தொகுதி குறுந்தகவல் சேவை (SMS) வரி

2018 ஆம் ஆண்டில் 35 இலக்க நிதிச்சட்டத்தின் XIII ஆவது பிரிவு மற்றும் 2014/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் என்பவற்றின் கீழ் 2019.01.01 முதல் தொகுதி குறுந்தகவல் சேவை (SMS) வரி விதிக்கப்படுகின்றது.

### 3.4.6 செலுயூலர் கோபுர வரி

2018 ஆம் ஆண்டில் 35 இலக்க நிதிச்சட்டத்தின் XII ஆவது பிரிவு மற்றும் 2014/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் என்பவற்றின் கீழ் 2019.01.01 முதல் செலுயூலர் கோபுர வரி விதிக்கப்படுகின்றது.

### 3.4.7 நானாவித வருமானம்

நனாவித வருமானம், குறுங்கால நிலையான வைப்புக்கள், பணச்சந்தை முதலீடுகளின் வட்டி வருமானம் மற்றும் கொக்காவில் குத்தகை என்பனவற்றினை உள்ளடக்குகின்றன. வட்டி வருமானம் முதிர்வடைகின்ற தினத்தின்படி அட்டுறு இலாபம் அல்லது நட்டம் என்ற அடிப்படையில் இனங்காணப்படும்.

### 3.4.8 வருமான வரிகள்

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வருமான வரிச் சட்டத்தின் கீழ் திருத்தப்பட்டவாறான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட வரி விடுதொகை 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க புதிய உந்நாட்டு அரசிறை சட்டத்தினை வலுப்படுத்தியதன் மூலம் நீக்கப்பட்டது. அத்தோடு இது 2018.04.01 ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்தும் திகதி செயல்வலுப் பெறுகின்றது.

2019.04.01 முதல் அமுலாகும் வகையில் திரண்ட நிதியத்திற்குப் கொடுப்பனவைச் செய்வதற்கு தகைமை பெறும் எந்தவொரு பொதுக் கூட்டுத்தாபனத்தினதும் வருமான வரி கழிப்பனவு செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் தானியங்கி மதிப்பீட்டு வரி செலுத்தலுடன் பொருளாதார சேவைக் கட்டணங்கள் மற்றும் நிறுத்திவைத்தல் வரி என்பன காலாண்டு ரீதியில் ரூபா 2,878,983,488.00 தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்படுமாயின் அது வரிச் செலவாக நிதியாண்டின் கீழ் கொண்டுவரப்படும்.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் வரி விதி காலம் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறு சனவரி 01 முதல் திசெம்பர் 31 வரை காணப்படுகின்றது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டுக்கான வரிப் பொறுப்பு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2019 (ரூபா) |
|---|---|
| வரிக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம் | 37,883,540,711 |
| **கூட்டு:** வரிவிதி வருமானத்தை (நட்டத்தை) தீர்மானிப்பதில் அனுமதிக்க முடியாத வரி தாக்கம் | 24,014,640 |
| **கழி:** வரிவிதி வருமானத்தை (நட்டத்தை) தீர்மானிப்பதில் அனுமதிக்கக் கூடிய வரி தாக்கம். | (29,931,933,517) |
| வருமான வரிக்கு தாக்கல் செய்யப்படும் கணக்கீட்டு இலாபம் / (நட்டம்) | 7,975,621,834 |
| வட்டி வருமானம் | 352,651,807 |
| **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **8,328,273,641** |
| **கழி:** தகைமைபெற்ற கொடுப்பனவு | 8,950,000,000 |
| **மொத்த வரி விதி வருமானம்** | **இல்லை** |
| ஆண்டுக்கான வரி வீதம் | 28% |
| **ஆண்டுக்கான வரித் தாக்கம்** | **இல்லை** |
| **வரி செலவுவைத்தல்** | |
| 1 ஆந் தவணை | 940,626,309 |
| 2 ஆந் தவணை | 934,796,003 |
| 3 ஆந் தவணை | 926,281,750 |
| நிறுத்திவைத்தல் வரி (WHT) கொடுப்பனவு | 18,928,094 |
| பொருளாதார சேவைக் கட்டணக் (ESC) கொடுப்பனவு | 58,351,332 |
| **மொத்த வரி செலவுவைத்தல்** | **2,878,983,488** |

### 3.4.7. பொருளாதார சேவைக்கட்டணம் (ESC)

பொருளாதார சேவைக்கட்டணம் விசேட சதவீதத்திற்கு ஏற்ப பொறுப்புக்கூறவேண்டிய புரள்வின்படி செலுத்த வேண்டியதாகும். 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக்கட்டணங்கள் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் பொருளாதார சேவை வருமான வரி பொறுப்புக்களில் இருந்து குறைக்கப்படும். சட்டத்தில் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் சகல உரித்தல்லாத செலுத்த வேண்டிய வருமான வரி மீளளிப்புச் செய்யப்படும்.

### 3.5 செலவினங்கள்

செலவினம் வருமானத்தின் விசேட உருப்படிகளின் உழைப்புக்கள் மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற கிரயத்திற்கிடையிலான நேரடித்தொடர்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற விளக்கமான வருமானக்கூற்றில் இனங்காணப்படும். ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்காகவும் வினைத்திறனான விதத்தில் மூலதனச் சொத்துகளைப் பராமரிப்பதற்காகவும் மேற்கொள்ளப்படுகின்ற சகல செலவினங்களும் வருடத்திற்கான மிகை வருமானத்திலிருந்து அறவீடு செய்யப்படும்.

2019.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலைமைக் கூற்றிலுள்ள விரிவான வருமானக்கூற்றில் காப்புறுதிச் செலவினம், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் செலவினங்கள் என்பன அட்டுறு அடிப்படையில் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் அது முன்னைய நிதியாண்டுகளில் காசு அடிப்படையில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

### 3.6 செயற்திட்டங்கள்

### 3.6.1 கொழும்பு தாமரைக் கோபுரம்

இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவினால் 2010 ஒக்தோபர் 27 மற்றும் 2011 திசெம்பர் 14 ஆம் திகதிய முறையே கோவை இலக்கம் 10/2473/401/301 மற்றும் 11/2262/501/026 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் கொழும்பு தாமரைக்கோபுரம் என்ற பெயரில் 350 மீற்றர் உயரமான பல்பணி தொலைக்காட்சி மற்றும் தொலைத்தொடர்பு கோபுரத்துடன் கூடிய கழியாட்டம் வழங்குகின்ற பூங்காவாக கொழும்பில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று அமைச்சரவையினால் இந்தச் செயற்திட்டத்தினை நிர்மாணிப்புச் செய்வதற்கான பணிகள் சைனா நெசனல் இலக்ரோனிக் இம்போடர்ஸ் என்ட் எக்ஸ்போட்ஸ் கோர்பரேசன்ஸ் (சி.இ.ஐ.இ.சி) மற்றும் எய்ரோ ஸ்பேஸ் லோங்க் மார்ச் இன்டர்நெசனல் ரேட் கொ. லிமிடட் (ஏ.எல்.ஐ.ரீ)) கம்பனிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கொழும்பு தாமரைக் கோபுர செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக ஒரு பாரிய களியாட்ட பூங்காவொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்படும்.

இந்த நிர்மாணிப்புக் கிரயம் ஐக்கிய அமெரிக்க டொலர் 104.3 மில்லியன்கள் என்ற வகையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், அதில் 85% இலங்கை அரசு சார்பாகவும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பிணையாளர் ஒருவராக கையொப்பமிட்ட, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (இ.தொ.ஒ.ஆ ) மற்றும் EXIM வங்கியினால் கையொப்பமிட்ட BLA-201207 ஆம் இலக்க வாடிக்கையாளர்களின் கடன் உடன்படிக்கையின் கீழ் Export-Import Bank of சீனா (EXIM) வங்கியினால் 14 வருட கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படும். அமெரிக்க டொலர் 15.645 மில்லியன்களில் 15% செயற்பாட்டுக் கிரய நிலுவை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2019.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு இச் செயற்திட்டத்தின் நிறைவு செய்யப்பட்ட அளவு 90% ஆகும். திரண்ட தாமத இழப்பீட்டான ஐ.அ.டொ. 10,430,000 தொகை இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் 20, 21 மற்றும் 22 இலிருந்து குறைக்கப்பட்டதுடன் 2019.12.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப்பொறுப்பாக சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது. மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் செயற்திட்ட உசாவுகை அலகின் சிபாரிசு (பீசீயூ) மற்றும் அங்கீகாரம் மற்றும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட சமரசக் குழுவின் (சீஏஎன்சீ) உடன்பாட்டின் பிரகாரம் எச்.எஸ்.பி.சி இலிருந்து அறவிட்டுக் கொள்ளமுடியாத கேள்வி வங்கி உத்தரவாதத்தின் சமர்ப்பிப்பு மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் நிறுத்தி வைத்தவைகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

எக்சிம் வங்கி கடன் ஐ.அ.டொ. 67,259,754 தொகை காலாவதியாகியதுடன் இ.தொ.ஒ.ஆ. நிதியிலிருந்து ஐ.அ.டொ. 21,395,247 நிலுவை ஒப்பந்த தொகையை செலுத்துவதற்கு 2018.01.11 ஆந் திகதிய 17/3004/701/059 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

மொத்த கடன் பெறுகைக் கிரயம் மற்றும் தொடர்புடைய செலவினங்கள், இலங்கை கணக்கீட்டு நியமம் 23 இன் பிரகாரம் செயற்திட்டத்தின் நிறைவில் அவை மூலதனமாக்கப்படும், எனவே, கொழும்பு தாமரைக் கோபுர செயற்திட்ட நிர்மாணிப்புக்காக எக்சிம் வங்கிக் கடனின் 100 % அர்ப்பணிப்புச் செய்யப்பட்டுள்ளன.

### 3.6.2 காணி – தாமரைக் கோபுரம்

2011 திசெம்பர் 22 ஆம் திகதிய கோவை இல 11/2262/501/026/TBR ஐ கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 7 ஏக்கர்கள் 2 ரூட் 8.41 பேர்ச் (ஹெக்டேயர் 3.0564) அளவினை உள்ளடக்கிய "கொழும்பு தாமரைக் கோபுரம்" நிர்மாணிக்கப்படுகின்ற தாமரைக் கோபுர காணி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் (UDA) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (இ.தொ.ஒ.ஆ ) மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் (UDA) 2012 சனவரி 23 ஆம் திகதி கையொப்பமிட்ட கோவை இல. 5023 புரிந்துணர்வு உடன்படிக்கையின் (MOU) பிரகாரம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் ரூபா 1500 மில்லியன்கள் தொகையை செலுத்துதல் மற்றும் கையளிக்கும் உடன்படிக்கை கையொப்பமிட்ட தினம் முதல் 34 வருடங்களுக்குள் ரூபா 300 மில்லியன் செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளது.

காணி கையளிக்கப்பட்ட தினம் முதல் உரிய அதிகாரிக்கு பயன்பாட்டு பற்றுச்சீட்டு மற்றும் ஆதனவரி வீதத்தை செலுத்துவதற்கு உட்பட்டு, 2012 யூலை 18 ஆம் திகதிய, நகர அபிவிருத்தி அதிகாரியின் கடிதத்தின் ஊடாக வெற்று பௌதீக உரிமை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டது. உரிய அதிகாரிகளினால் உரிய நடைமுறைகளுக்கு உட்பட்டு உரிமை உரித்தை கையளிக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்படும்.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு எற்கனவே நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 2,250 மில்லியன் செலுத்தியிருந்த போதும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் (MOU) பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு காணியைக் கையளிப்பதற்கு

தவறியிருந்தது. அதனால் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இக்கொடுப்பனவை இடைநிறுத்தியிருந்தது.

### 3.6.3. தகவல் தொழில்நுட்ப பூங்கா அம்பாந்தோட்டை சூரியவெவ

2012 யூன் 14 ஆம் திகதிய 12/0836/501/019 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்திற்கு ஏற்ப 2012 யூலை 04 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் தொலைத்தொடர்பு ஊடக நிலைய செயற்திட்டம் (அம்மாந்தோட்டை த. தொ. பூங்கா செயற்திட்டம்) ஒன்றை தாபிப்பதற்கான ஆரம்ப செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செயற்திட்டத்தின் பொறியியலாளராக இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம் (SLLRDC) நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஒப்பந்த நிர்மாணம் M/S வரையறுத்த துடாவே பிரதர்ஸ் (தனியார்) கம்பனிக்கு கேள்வியினால் அங்கீகரிக்கப்பட்ட நிர்மாணக் கிரயம் ரூபா 2,493,870,318.00 தொகையில் கையளிக்கப்பட்டிருந்தது.

திட்டமிட்ட பிரகாரம் 2015 யூன் அளவில் 3 ஆம் மாடி வரை கட்டிடத்தின் பிரதான கட்டுமாணத்தை ஒப்பந்தாரர் நிறைவு செய்துள்ளார். எவ்வாறாயினும், இந் நிர்மாணத்தை அண்டிய ஏனைய செயற்திட்டங்கள் திட்டமிட்ட பிரகாரம் ஆரம்பிக்கப்பட வில்லை என இ.தொ.ஒ.ஆ., இலங்கை முதலீட்டு சபை (BOI) மற்றும் சனாதிபதி செயலகம் என்பன அவதானித்துள்ளதுடன் செயற்திட்டத்தின் மீள் கட்டமைப்புக்கான தேவையை அவர்கள் அழுத்தியுள்ளனர்.

வேலைத்தளத்தில் உள்ள பொருட்களின் பெறுமதி ரூ. 423.9 மில்லியன்கள் உள்ளடங்கலாக மொத்தமாக செய்யப்பட்ட வேலை உள்ளடக்குவதுடன் இச் செயற்திட்டத்தின் நிறைவு செய்யப்பட்ட சதவீதம் 33 ஆகும். 2018.12.31 ஆம் திகதியாகும் போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மீளளிப்பு மற்றும் வேலை ஆரம்பிப்பு முற்பண மீட்டல் என்பன முறையே ரூ. 46 மில்லியன் மற்றும் ரூ. 157 மில்லியன் ஆகும்.

இந்தச் செயற்திட்டத்தின் பொறியியலாளர் ஆலோசகராக இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம் (SLLRDC) செயற்திட்டத்தை கட்டமைப்புச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் வரையறுத்த M/S துடாவே பிரதர்ஸ் (தனியார்) கம்பனி என்னவற்றுக்கிடையில் கைசாத்திடப்பட்ட ஒப்பந்தம் 2016 ஆகஸ்ட் 10 ஆம் திகதி நிறைவடைந்தது. எனவே, செயற்திட்ட பொறியியலாளரான இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தின் சிபாரிசின் பிரகாரம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு வரையறுத்த M/S துடாவே பிரதர்ஸ் (தனியார்) கம்பனி உடனான ஒப்பந்தத்தை முடிவுறுத்தல் தவிர வேறு மாற்றுவழிகள் இருக்கவில்லை. இந்தச் செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மொத்த கிரயம் ரூ.

715 மில்லியன்கள் ( மீண்டும் அறவிட்டுக் கொள்வதற்குள்ள ரூ 157 முற்பணத் தொகை உள்ளடங்கலாக) ஆக இருப்பதுடன் வரையறுத்த M/S துடாவே பிரதர்ஸ் (தனியார்) கம்பனி என்ற ஒப்பந்தக்காரர், ஒப்பந்தத்தை முடிவுறுத்தல் பற்றிய இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு எதிராக பிணக்கு தீர்த்தல் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

பிணக்கு சமரசச் சபைத் (DAB) தீர்மானத்தை கவனத்திற் கொண்டு, சில கிரய கூறுகள் மற்றும் நிறுத்தி வைத்தல் தொகையான ரூ. 46 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகையான ரூ. 157 மில்லியனுக்கு எதிராக பதிவளிப்புச் செய்வதற்கு உடன்பாடு காணப்பட்டது. இச் செயற்திட்டத்திற்கான பொறியியலாளரின் - இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம், ஆலோசனையின் பிரகாரம் ரூ. 50 மில்லியன் வங்கி உத்தரவாதமொன்றின் மூலம் நிலுவைத் தொகையான ரூ. 50 மில்லியனால் ஈடு செய்யப்பட்டது. அத்தோடு நடுவாண்மை தீர்ப்புக்கு முன்வைக்கப்பட்டது. குறிப்பு இல. 3.7 (இ) பார்க்கவும்.

அரசாங்க மதிப்பீட்டாளரினால் காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படுகின்ற போது சூரியவெவ காணியின் கிரயம் மூலதனமாக்கப்படும்.

## 3.7. நிச்சயமற்ற செலவினங்கள்.

### (அ) மாவட்ட நீதிமன்ற வழக்கு இல. DC/DMR/6188/2010

Gewaan Engineering கம்பனியின் உரிமையாளரான திரு. காமினி ராஜபக்ஷ, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை பொறுப்புதாரராகக் கொண்டு, 6188/2010 ஆம் இலக்க வழக்கு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2007 யூலை 19 ஆம் திகதி முறைப்பாட்டாளர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்டவருக்கிடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்படிக்கைகளை மீறல் பால் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அது தொடர்பான சேதத்தை அறவிட்டுக் கொள்ளும் நோக்கில் முறைப்பாட்டாளர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதுடன் எதிர்பார்த்த நிவாரணத்தின் கீழ் முறைப்பாட்டாளர் சேதம் தொடர்பாக எதிர்பார்த்த தொகை ரூபா 1.5 மில்லியன் ஆகும்.

### (ஆ) உயர்நீதிமன்ற சிவில் வழக்கு இல. HC Civil No. 137/2011

சட்டப்படியான சமரசத்துடன் வழக்கு தீர்ப்பின் திகதி வரை ரூபா 47,345,112,000 தொகை மற்றும் முழுமையான தொகையை மீளளிக்கும் வரை தீர்ப்பின் தொகையை சேகரிக்கும் வழக்குத் தீர்ப்பு / கட்டளை தொடர்பாக வரையறுத்த இலக்ரோடெக்ஸ் கம்பனியால் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு எதிராக இல. HC (Civil) 137/11

வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் பதில் கோவைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அலைவரிசைக் கற்கை அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 172,500,000 தீர்க்கப்படாததன் காரணமாக மீள் கட்டமைப்புச் செய்யும் கட்டணமொன்று அறவிடப்பட்டுள்ளது. மேலும், முறைப்பாட்டாளரினால் தீர்க்கப்படாத அலைவரிசை பற்றுச்சீட்டு ரூ. 2,300,000 ஆகும்.

(இ) <u>தகவல் தொழில்நுட்ப பூங்கா - அம்மாந்தோட்டை (தொடர்பு. SLNAC/33-10-2018)</u>

அம்பாந்தோட்டை சூரியவெவயில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2013 யூலை 29 ஆந் திகதி உரித்தாளிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் துடாவே பிரதர்ஸ் (தனியார்) நிறுவனம் (உரிமையாளர்) ரூ. 706,066,168.44 பாதிப்புத் தொகையை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடமிருந்து (வாடிக்கையாளர்) அறவிடுவதற்கு தவறியிருந்தது. இந்த விடயம் பிணக்கு தீர்த்தல் சபையில் நிலுவையாக இருந்தது. சட்மா அதிபதி திணைக்களம் வாடிக்கையாளர் (இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு) சார்பாக தோன்றியிருந்தது.

(ஈ) <u>மாவட்ட நீதிமன்ற வழக்கு இல. DC/DMR/3277/17</u>

முழுமையான யாழ்பாணக் குடா மற்றும் அருகில் உள்ள தீவுகளை உள்ளடக்கிய பரிவர்த்தனை நிலையத்திற்கு பாதிப்பையும் சேவை துண்டிப்புக்குமான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக ஏற்பட்ட சேதங்களை ஈடுசெய்வதற்கு ரூபா 14,800,000,000 தொகையினைக் கோரி வழக்கொன்றை பிரதிவாதி தாக்கல் செய்தார்.

**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2019.12.31** *(தொடர்ச்சி)*
***(இலங்கை ரூபாவில் வெவளிப்படுத்தப்பட்டுள்ளன)***

**4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| கிரயம் | 2019.01.01 திகதியில் நிலுவை | 2019 ஆம் ஆண்டு தொடர்பாக | | 2019.12.31 இல் நிலுவை |
|---|---|---|---|---|
| | | கொள்வனவு | மாற்றல்-விற்பனை | |
| காணி | 148,863,771 | 0 | 0 | 148,863,771 |
| குத்தகைக்கு எடுத்த காணிகள் | 345,502 | 0 | 0 | 345,502 |
| கட்டிடங்கள் | 150,381,065 | 0 | 0 | 150,381,065 |
| கொக்காவில் கோபுரம் | 314,933,479 | 0 | 0 | 314,933,479 |
| வவுனியா கோபுரம் | 29,900,741 | 0 | 0 | 29,900,741 |
| வாகனங்கள் | 168,717,224 | 0 | 0 | 168,717,224 |
| வளிப் பதனாக்கிகள் | 16,454,854 | 695,641 | 12,691 | 17,137,804 |
| மின் உயர்த்தி | 4,683,848 | 0 | 0 | 4,683,848 |
| மின் பிறப்பாக்கி | 2,665,428 | 0 | 0 | 2,665,428 |
| கணனிகள் | 99,334,787 | 13,582,682 | 138,749 | 112,778,720 |
| இணையர் சேர்வர் | 2,213,661 | 3l,881,890 | 0 | 34,095,551 |
| வேறு அலுவலக உபகரணங்கள் | 35,276,177 | 11,107,703 | 8,739 | 46,375,141 |
| கையடக்க தொலைபேசிகள் | 1,175,049 | 89,000 | 0 | 1,264,049 |
| அலுவலக தளபாடங்கள் | 23,641,029 | 1,562,199 | 65,657 | 25,137,571 |
| தொழில்நுட்ப உபகரணங்கள் | 70,126,463 | 3,579,105 | 0 | 73,705,569 |
| FMMS செயற்திட்ட கண்காணிப்பு உபகரணங்கள | 61,712,127 | 0 | 0 | 61,712,127 |
| FMMS செயற்திட்ட உபகரணங்கள் | 408,303,544 | 0 | 0 | 408,303,544 |
| உடற்பயிற்சி உபகரணங்கள் | 5,629,707 | 0 | 0 | 5,629,707 |
| ஊடக அலகு உபகரணங்கள் | 12,572,266 | 292,800 | 0 | 12,865,066 |
| | **1,556,930,722** | **62,791,020** | **225,836** | **1,619,495,906** |
| தாமரைக் கோபுரக் காணி | 11,715,212,127 | 0 | 0 | 11,715,312,127 |
| | **13,272,142,850** | **62,791,020** | | **13,334,708,033** |

| தேய்மானம் | 2019.01.01 திகதியில் நிலுவை | 2019 ஆம் ஆண்டு தொடர்பாக | | 2019.12.31 இல் நிலுவை |
|---|---|---|---|---|
| | | கொள்வனவு | மாற்றல்-விற்பனை | |
| கட்டிடங்கள் | 124,956,621 | 4,341,069.85 | 0 | 129,291,691 |
| கொக்காவில் கோபுரம் | 244,537,474 | 31,493,347.93 | 0 | 216,010,822 |
| வவுனியா கோபுரம் | 23,920,593 | 2,990,074.14 | 0 | 26,910,667 |
| வாகனங்கள் | 130,238,799 | 16,242,756.72 | 0 | 146,481,556 |
| வளிப் பதனாக்கிகள் | 12,121,620 | 771,774 | 12,691 | 12,880,703 |
| மின் உயர்த்தி | 4,683,848 | 0 | 0 | 4,683,848 |
| மின் பிறப்பாக்கி | 2,665,428 | 0 | 0 | 2,665,428 |
| கணணிகள் | 93,881,642 | 6,756,394 | 138,749 | 100,499,287 |
| இணைய சேர்வர் | 2,213,661 | 5,227,511 | 0 | 7,441,172 |
| வேறு அலுவலக உபகரணங்கள் | 25,482,324 | 2,444,922 | 8,719 | 27,918,507 |
| கையடக்க தொலைபேசிகள் | 804,382 | 72,135 | 0 | 876,517 |
| அலுவலக தளபாடங்கள் | 16,598,757 | 1,378,596 | 65,657 | 17,911,697 |
| தொழில்நுட்ப உபகரணங்கள் | 33,329,670 | 6,044,261 | 0 | 39,173,931 |
| FMMS செயற்திட்ட கண்காணிப்பு வாகனங்கள் | 26,500,498 | 7,164,016 | 0 | 33,664,514 |
| FMMS செயற்திட்ட உபகரணங்கள் | 337,145,861 | 10,760,214 | 0 | 347,906,076 |

| | | | | |
|---|---|---|---|---|
| உடற்பயிற்சி உபகரணங்கள் | 5,629,707 | 0 | 0 | 5,629,707 |
| ஊடக அலகு உபகரணங்கள் | 11,910,126 | 444,917 | 0 | 12,355,043 |
| | **1,096,621,013** | **96,131,988** | **225,836** | **1,192,527,165** |

| | | | | |
|---|---|---|---|---|
| **நிகர புத்தகப் பெறுமதி** | **12,175,521,837** | | | **12,142,180,868** |

*குறிப்பு:*

காணி தொடர்பான பெறுமதியான ரூ. 148,235,572 இல் நீர்கொழும்பு கதிரானயில் அமைந்துள்ள ரூ. 45,000,000 பெறுமதியான காணிகளின் பெறுமதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேற்படி இடத்தின் பரப்பு 112 ஏக்கர் 01 ரூட் மற்றும் 10.5 பேர்ச் ஆகும். காணியின் பரப்பின் அண்ணளவாக 69% அளவான கடான பிரதேச செயலாளரினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சுவிகரிக்கப்பின் ஊடான தாக்கங்கள் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனினும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2019.04.02 ஆந் திகதிய GM/LM/5549 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் இன்னும் 35 எக்கர், 02 றூட், 30 பேர்ச் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான நிலப் பகுதி எனக் குறிப்பிட்டு அதன் பெறுமதி ரூபா 359,375,000 என மதிப்பிடப்பட்டிருந்தது. இது 2019.12.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்றில் LKAS 16 இன் ஏற்பாடுகளின் படி பாதிப்பினை ஏற்படுத்தாதிருந்த போதும் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சொத்து விடயத்தில் இது வரையில் திருப்திகரமானதாக இருக்கவில்லை.

## 4.1 கற்புலனாகா சொத்துக்கள்

| கிரயம் | 2019.01.01 திகதியில் நிலுவை | 2019 ஆம் ஆண்டு தொடர்பாக | | 2019.12.31 இல் நிலுவை |
|---|---|---|---|---|
| | | கொள்வனவு | மாற்றல்-விற்பனை | |
| கணனி மென்பொருள் | 21,455,861 | 0 | 0 | 21,455,861 |
| | **21,455,861** | **0** | **0** | **21,455,861** |

| தேய்வு | 2019.01.01 திகதியில் நிலுவை | 2019 ஆம் ஆண்டு தொடர்பாக | | 2019.12.31 இல் நிலுவை |
|---|---|---|---|---|
| | | கொள்வனவு | மாற்றல்-விற்பனை | |
| கணனி மென்பொருள் | 19,178,605 | 2,277,255 | **0** | 19,178,605 |
| | **19,178,605** | **2,277,255** | **0** | **19,178,605** |
| **நிகர புத்தகப் பெறுமதி** | **2,277,255** | | | **1** |

## 5. புத்துருவாகும் வேலைகள்

| | 2019.01.01 திகதியில் நிலுவை | 2019 ஆம் ஆண்டு தொடர்பாக | | 2019.12.31 இல் நிலுவை |
|---|---|---|---|---|
| | | கொள்வனவு | (மாற்றல்) | |
| பிரதான தலைமையக கட்டிடம் | 10,057,910 | 0 | 0 | 10,057,910 |
| தாமரைக் கோபுர நிர்மாணம் | 17,108,423,931 | 3,766,965,543 | 0 | 20,875,389,474 |
| த.தொ.பூங்கா -அம்மாந்தோட்டை | 684,015,309 | 0 | 0 | 684,015,309 |
| தொ.ஒ.ஆ. தலைமை அலுவலக நிர்மாணம் - புதிய கட்டிடம் | 608,329 | 79,548,047 | 0 | 80,156,376 |
| கதிரான நிர்மாணம் | 0 | 47,366,941 | 0 | 47,366,941 |
| அலைவரிசை மேற்பார்வை-வலைப்பின்னல் | 0 | 249,900 | 0 | 249,900 |
| புத்துருவாகும் வேலை | 0 | 21,887,232 | 0 | 21,887,232 |
| | **17,803,105,479** | **3,916,017,664** | **0** | **21,719,123,143** |

| | | 31.12.2019 | 31.12.2018 |
|---|---|---|---|
| **6. முதலீடுகள்** | | | |
| திறைசேரி வைப்புக்கள் | | 354,000,000 | 354,000,000 |
| | | **354,000,000** | **354,000,000** |
| **7. கிடைக்க வேண்டிய கணக்குகள்** | | | |
| கிடைக்க வேண்டிய செஸ் கட்டணங்கள் | | 429,991,796 | 465,636,257 |
| கிடைக்க வேண்டிய தொலைத்தொடர்பு அபிவிருத்தி கட்டணங்கள் | | 782,030,936 | 957,178,524 |
| கிடைக்க வேண்டிய வெளிச் செல்லும் உள்நாட்டு பிரவேசக் கட்டணங்கள் | | 0 | 39,280,793 |
| கிடைக்க வேண்டிய தொலைத்தொடர்பு வரி | | 772,310,122 | 977,293,794 |
| அறவிடப்பட வேண்டிய கொகாவில் கோபுரம் | | 81,776,444 | 83,297,174 |
| கிடைக்க வேண்டிய கோபுர வரி | | 339,276,667 | 0 |
| கிடைக்க வேண்டிய குறுந்தகவல் வரி | | 57,540,518 | 0 |
| அறவிடப்பட வேண்டிய பதவியணி கடன்கள் | | 2,461,716 | 2,547,337 |
| அறவிடப்பட வேண்டிய கொகாவில் கோபுரம் வாடகை | | 2,138,310 | 700,561 |
| கிடைக் வேண்டிய விமான பயணச்சீட்டு | | 148,200 | 97,920 |
| வியாாபாரக் கடன்பட்டோர் | **07 A** | 96,811 | 1,287,804,064 |
| | | **2,467,771,521** | **3,813,836,424** |

**07 A வியாாபாரக் கடன்பட்டோர்**

| | 31.12.2019 | 31.12.2018 |
|---|---|---|
| வானொலி அலைவரிசைக் கட்டணங்கள் | 373,775,691 | 1,661,483,613 |
| பயிலுனர் வானொலி அனுமதிப்பத்திரக் கட்டணம் | 32,790 | 39,981 |
| | **373,808,482** | **1,661,523,593** |
| **குழி** - அறவிட முடியாக் கடனுக்கான ஒதுக்கம் ** | (373,711,670) | (373,719,529) |
| | **96,811** | **1,287,804,064** |

| **குறிப்புகள்: (1)** | **Debtors** | | **Provisions** |
|---|---|---|---|
| **அறவிட முடியாக் கடன் தொடர்பாக ஒதுக்கம் | | | |
| 02 வருடங்களுக்கு மேல் | 373,700,914 | **100%** | 373,700,914 |
| ஒரு வருடத்திற்கு மேல் 02 வருடத்திலும் குறைவு | 107,568 | **10%** | 10,757 |
| 06 மாதங்களிலும் அதிகம் ஒரு வருடத்திலும் குறைவு | 0 | **0%** | 0 |
| 02 மாதங்களுக்கு மேல் 06 மாதங்களிலும் குறைவு | 0 | **0%** | 0 |
| ஒரு மாத்திலும் அதிகம் 02 மாத்திலும் குறைவு | 0 | **0%** | 0 |
| ஒரு மாதத்திலும் குறைவு | 0 | **0%** | 0 |
| | **373,808,482** | | **373,711,670** |

**குறிப்புகள்: (2)**

மேலே உள்ள பிரகாரம் முறையே ஒரு வருடத்திற்கு மேல் அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் பட்டோர் தொடர்பாக நூற்றுக்கு 100% மற்றும் 10% ஒதுக்கம் வழங்கப்பட்ட பின்னர் நியாயமான பெறுமதியுடன் அறவிட முடியாக் கடன்கள் பிரகடனப்படுத்தப்பட்டன.

**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2019.12.31** *(தொடர்ச்சி.....)*
**(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)**

| | | **31.12.2019** | **31.12.2018** |
|---|---|---|---|
| **8 முற் கொடுப்பனவுகள் மற்றும் முற்பணம்** | | | |
| விசேட முற்பணங்கள் | | 575 | 575 |
| விழா முற்பணங்கள் | | 158,000 | 205,111 |
| கொள்வனவு முற்பணங்கள் | | 77,140 | 202,140 |
| முற்செலுத்தல்கள் | | 43,487,917 | 2,464,652 |
| வேலை ஆரம்பிப்பு முற்பணக் கொடுப்பனவு - (தாமரைக் கோபுரம்) | | 0 | 421,684,520 |
| வேலை ஆரம்பிப்பு முற்பணக் கொடுப்பனவு -(IT PARK) | | 157,081,430 | 157,081,430 |
| வேலை ஆரம்பிப்பு முற்பணம் (H/O New) | | 13,387,576 | 0 |
| வேலை ஆரம்பிப்பு முற்பணம் (கதிரான) | | 11,312,256 | 0 |
| | | **225,504,893** | **581,638,428** |
| **9 கடன் மற்றும் வேறு கிடைக்கவேண்டியவைகள்** | | | |
| இடர் கடன் | | 35,629,277 | 34,555,456 |
| மோட்டார் வாகன கடன்கள் | | 193,991,532 | 184,937,193 |
| ஆதன கடன்கள் | | 1,362,749 | 1,724,586 |
| மோட்டார் சைக்கிள் கடன்கள் | | 1,138,315 | 203,298 |
| அறவிடப்பட வேண்டிய சம்பள குறைப்புக்கள் | | 506,643 | 16,987 |
| வேறு கிடைக்க வேண்டியவைகள் | | 2,210,000 | 2,086,122 |
| தேர்தல் கடமை கொடுப்பனவு | | 398,738 | 0 |
| CEB காப்புறுதி பிணை வைப்பு A/C (IT PARK) | | 125,000 | 125,000 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் (நி.வை.வரி) | | 0 | 17,861,411 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் (வருமான வரி மிகை ஒதுக்கீடு) | | 2,713,380,890 | 0 |
| உரித்துக்கான பொருளாதார சேவைகள் கட்டணங்கள் | | 25,711,011 | 18,276,866 |
| தாமரைக் கோபுர மின்சார பாதுகாப்பு வைப்பு | | 3,125,000 | 3,125,000 |
| | | **2,977,579,154** | **262,911,918** |
| **10 காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | | | |
| வங்கியில் உள்ள காசு | **10 A** | 246,410,798 | 866,915,447 |
| கையில் உள்ள காசு | **10 B** | 35,000 | 70,000 |
| பணச் சந்தை சேமிப்புக் கணக்கு – (இல.119-2-001-2-3693169) | | 3,378,527,783 | 2,780,580,061 |
| | | **3,624,973,581** | **3,647,565,507** |
| **10 A வங்கியில் உள்ள காசு** | | | |
| மக்கள் வங்கி – நாராஹேன்பிட்ட கிளை, (வைப்புக் கணக்கு) கணக்கு இலக்கம் - 119402113960300 (RFC USD 0032) | | 106,926,792 | 106,141,131 |
| மக்ள் வங்கி - நாராஹென்பிட்ட கிளை (ஒன்று சேர்க்கும் கணக்கு) நடைமுறைக் கணக்கு இல 119-1-001-4-3693169 | | 138,726,159 | 737,578,215 |
| மக்கள் வங்கி – நராஹென்பிட கிளை (சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர் வரி) நடைமுறைக் கணக்கு இல 119-1-001-3-3693264 | | 258,338 | 312,076 |
| இலங்கை வங்கி – நாராஹென்பிட கிளை நடைமுறக் கணக்கு இல 2323167 | | 499,509 | 22,884,024 |
| | | **246,410,798** | **866,915,447** |
| **10 B கையில் உள்ள காசு** | | | |
| சில்லறைக் காசு – பிரதான அலுவலகம் | | **10,000** | **10,000** |
| சில்லறைக் காசு – நிருவாக மற்றும் மனித வளப் பிரிவு | | 5,000 | 5,000 |
| சில்லறைக் காசு – கொகாவில் | | 0 | 10,000 |
| சில்லறைக் காசு – தாமரைக் கோபுரம் | | 0 | 25,000 |
| சில்லறைக் காசு – பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம் | | 15,000 | 15,000 |
| சில்லறைக் காசு -- இணக்கப்பாடுகள் | | 5,000 | 5,000 |
| | | **35,000** | **70,000** |

**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2019.12.31** *(தொடர்ச்சி.....)*

**(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)**

| | **31.12.2019** | **31.12.2018** |
|---|---|---|
| **11 அரச பங்களிப்புக்கள்** | | |
| உலக வங்கி கடன் உடன்படிக்கைகள் | 298,572,434 | 298,572,434 |
| ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 19,533,906 | 19,533,906 |
| திறைசேரியால் மூலதன பங்களிப்பு | 208,108,404 | 208,108,404 |
| | **526,214,744** | **526,214,744** |

| | | |
|---|---|---|
| **12 நிறுத்தி வைத்தல்கள்** | | |
| நிறுத்தி வைத்தல்கள் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பூங்கா - (IT Park) | 46,152,801 | 46,152,801 |
| | **46,152,801** | **46,152,801** |

| | | |
|---|---|---|
| **13 பணிக்கொடை நன்மைகள்** | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கம் | 80,831,913 | 62,930,515 |
| நிலையான வைப்புக்கள் (பணிக்கொடை) | (52,150,000) | (44,500,000) |
| பணிக்கொடை நன்மைகள் தொடர்பாக நிலையான வைப்புக்கள் மீதான கிடைக்க வேண்டிய வட்டி | (5,925,454) | (4,388,432) |
| **நிகர நலன் பொறுப்புக்கள்** | **22,756,459** | **14,042,084** |

| | | |
|---|---|---|
| **14 செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| அட்டுறு செலவினங்கள் | | |
| தொலைபேசி – அலுவலகம் | 717,013 | 1,010,070 |
| தொலைத்தொடர்பு கொடுப்பனவுகள் | 0 | 219,112 |
| சம்பள கட்டுப்பாடு | 99,183 | 99,183 |
| செலுத்த வேண்டிய சம்பளங்கள் | 185,884 | 185,634 |
| செலுத்த வேண்டிய விதவை மற்றும் அனாதைகள் நிதி | 99,981 | 97,280 |
| மின்சாரம் | 933,903 | 1,047,053 |
| நீர் | 28,560 | 66,751 |
| சுத்திகரிப்பு சேவைகள் | 662,593 | 553,741 |
| பாதுகாப்புச் சேவைகள் | 3,428,717 | 2,573,800 |
| மேலதிக நேர வேலை | 1,027,507 | 1,385,575 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 3,719,311 | 3,354,845 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 446,316 | 402,581 |
| இணையதளம் | 335,143 | 317,243 |
| மருத்துவ காப்புறுதி உரித்துக்கள் | 250,995 | 250,995 |
| செலுத்த வேண்டிய போக்குவரத்து மற்றும் இணைந்த படிகள் | 2,400 | 6,156 |
| பதவியணி நலன்புரி | 88,490 | 794,091 |
| பத்திரிகைகள் மற்றும் அறிவித்தல்கள் | 447,988 | 84,080 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 2,518,460 | 2,367,460 |
| உபகாரக் கொடுப்பனவுகள் | 39,079,628 | 35,263,211 |
| நிறுத்தி வைத்தல்கள்- பொது | 363,965 | 66,279 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் (பொருளாதார சேவைகள் கட்டணம் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி) | 29,915,560 | 56,290,538 |

| | | |
|---|---|---|
| சம்பளத்தை குறைத்தல் | 134,101 | 132,189 |
| திருத்தம் மற்றும் பராமரிப்பு | 17,987,507 | 3,653,025 |
| செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் | 1,027,622 | 993,032 |
| செலுத்த வேண்டிய உழைக்கும் போது செலுத்தும் வரி (ஆணைக்குழு அங்கத்தவர் கொடுப்பனவுகள்) | 56,537 | 2,338,664 |
| வருமான வரிக்கான ஒதுக்கங்கள் | 0 | 1,818,593,410 |
| செலுத்த வேண்டிய நானாவித கொள்வனவு மற்றும் வழங்கல் | 9,140,515 | 716,286 |
| பதவியணி கடன் மீதான மேலதிக அறவீடுகள் | 12,657 | 13,657 |
| செலுத்த வேண்டிய எரிபொருள் | 112,224 | 150,698 |
| செலுத்த வேண்டிய அச்சிடல் மற்றும் காகிதாதிகள் | 1,111,771 | 1,023,437 |
| செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி | 0 | 12,628 |
| செலுத்த வேண்டிய அங்கத்துவ பணம் | 877,920 | 0 |
| நானாவித செலுத்த வேண்டியவைகள் | 365,000 | 0 |
| கோரப்படாத ஊழியர் ஊதியங்கள் | 2,146,762 | 0 |
| தாக்கல் செய்தல் மற்றும் தங்கியிருத்தல் நீதிமன்றம் | 25,500 | 47,500 |
| நானாவித சென்மதிகள் | 21,366,057 | 0 |
| | **138,715,771** | **1,934,110,203** |

**15 முற்பணம், வைப்பு மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்**

| | | |
|---|---|---|
| முற்பணமாக கிடைத்த வருமானங்கள் | 2,601,814,402 | 3,312,802,741 |
| விலைமனு தொடர்பாக செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 1,566,167 | 1,524,167 |
| மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் - ஊழியர் | 2,086,843 | 2,086,843 |
| மெகாவோட்ஸ் 1800 எல்லை தொடர்பாக கிடைத்த முற்பணம் | 57,500,000 | 57,500,000 |
| தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பம் பற்றிய வினைதிறனான இடர் முகாமைத்துவ மாநாடு | 34,210 | 34,210 |
| சேதமடைந்த என்டனாக்களுக்கான காப்புறுதி உரிமைகள் | 0 | 25 |
| அலைக்கற்றை அனுமதிப்பத்திரக் கட்டணங்களின் மேலதிக அறவிடல் | 2,158,081 | 2,129,435 |
| C.T.O தொலைத்தொடர்பு நிலைய செயற்திட்டம் | 924,492 | 924,492 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட பெறுமதியின் படி வரிக் கட்டுப்பாட்டு கணக்கு | 18,649,359 | 223,392,670 |
| நிர்மாண கடன்பட்டோர் | 751,650 | 751,650 |
| செயற்திட்டக் கட்டணம் - எக்சிம் வங்கி ( தாமரைக் கோபுரம்) | 1,610,276,227 | 1,621,411,295 |
| | **4,295,761,430** | **5,222,557,527** |

**16 திறைசேரிக்குச் செலுத்த வேண்டியவை**

| | | |
|---|---|---|
| திறைசேரிக்கு செலுத்த வேண்டிய தொலைத்தொடர்பு அபிவிருத்தி நிதியம் 50% | 391,015,467 | 478,589,261 |
| திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய வெளிச் செல்லும் உள்நாட்டு பிரவேச கட்டண வரி | 0 | 39,280,793 |
| திறைசேரிக்கு செலுத்த வேண்டிய தொலைத்தொடர்பு வரி | 772,310,124 | 979,293,795 |
| திறைசேரிக்குச் செலுத்தவேண்டிய குறுந்தகவல் வரி | 57,540,518 | 0 |
| திறைசேரிக்குச் செலுத்தவேண்டிய செலுயூலர் கோபுர வரி | 339,276,667 | **0** |
| | **1,560,142,776** | **1,497,163,849** |

**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2019.12.31** *(தொடர்ச்சி.....)*
**(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)**

| | | 31.12.2019 | 31.12.2018 |
|---|---|---|---|
| **17 வருமானம்** | | | |
| வருமானங்கள் - அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | **17 A** | 16,175,312,122 | 17,563,075,810 |
| தொலைத்தொடர்பு வரிகள் | | 15,065,669,041 | 24,349,276,331 |
| தொலைத்தொடர்வு அபிவிருத்திக் கட்டணங்கள் | **17 B** | 5,337,850,939 | 5,581,629,186 |
| வெளிச் செல்லும் உள்நாட்டு பிரவேசக் கட்டணங்கள் | | 192,765,504 | 538,955,113 |
| கையடக்க குறுஞ்செய்தி சேவைகள் வரி | | 419,083,887 | 0 |
| செலியூலர் கோபுர வரி | | 1,384,526,669 | 0 |
| | | **38,575,208,162** | **48,032,936,440** |
| **17 A வருமானம் - அனுமதிப்பத்திர கட்டணங்கள்** | | | |
| முறைமை செயற்படுத்துனர் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | | 168,367,347 | 122,448,980 |
| செஸ் கட்டணங்கள் | | 4,713,114,906 | 4,550,705,960 |
| வானொலி அலைவரிசை கட்டணங்கள் | | 7,048,993,937 | 10,789,520,442 |
| தொலைத்தொடர்பு அலைக்கற்றை கட்டணங்கள் | | 4,032,142,857 | 1,071,428,571 |
| பயன்படுத்துனர் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | | 13,726,325 | 13,818,111 |
| பயிலுனர் வானொலி அனுமதிப்பத்திரம் | | 85,364 | 163,630 |
| கப்பல் நிலைய அனுமதிப்பத்திர கட்டணம் | | 0 | 449,994 |
| விமான நிலைய அனுமதிப்பத்திரம் | | 0 | 401,530 |
| கம்பிகள் இல்லாத தொலைபேசிகளை பகிர்ந்தளிக்கும் கட்டணங்கள் | | 116,388,349 | 114,619,244 |
| பரீட்சைக் கட்டணம் | | 312,140 | 367,511 |
| விண்ணப்பப் படிவம் தயார் செய்யும் கட்டணம் | | 1,016,327 | 1,020,408 |
| குறுஞ் செய்தி இலக்க கட்டணங்கள் | | 31,887,730 | 26,530,612 |
| நானாவித வருமானம் - 17 A(1) | | 369,991,603 | 1,108,518,638 |
| | | **16,496,026,883** | **17,799,993,632** |
| **கழி:** தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | | (320,714,761) | (236,917,822) |
| | | **16,175,312,122** | **17,563,075,810** |
| **17A(1)நானாவித வருமானங்கள்** | | | |
| பதவியணி கடன்களிலிருந்து பெற்ற வட்டி வருமானம் | | 9,438,934 | 7,800,124 |
| நிலையான வைப்புக்களின் படி வட்டி வருமானம் | | 32,741,587 | 683,832,865 |
| பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கலின் படி வட்டி வருமானம் | | 310,471,287 | 384,498,838 |
| கொகாவில் குத்தகை | | 16,700,091 | 15,406,525 |
| வேறு வருமானங்கள் -நானாவித | | 406,009 | 4,199,591 |
| நிலையான சொத்துக்களை அகற்றுதல் | | 225,836 | 0 |
| திரைப்படம் மற்றும் தொலைக் காட்சி நாடக அறவிடல் | | 0 | 10,400,000 |
| அறவிடமுடியாக் கடன் அறவிடல் | | 7,859 | 0 |
| நீதிமன்ற வழக்குகளிலிருந்து அறவிட்டுக் கொள்ளல் | | 0 | 2,380,696 |
| | | **369,991,603** | **1,108,518,638** |
| **17 B தொலைத்தொடர்பு அபிவிருத்தி கட்டணங்கள் (தொ.அ.க)** | | | |
| ரீ.டி.சீ. வருமானம் | | 5,337,850,939 | 5,581,629,186 |
| | | **5,337,850,939** | **5,581,629,186** |

**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2019.12.31** *(தொடர்ச்சி.....)*
**(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)**

| | **31.12.2019** | **31.12.2018** |
|---|---|---|
| **18 ஒழுங்குபடுத்தல் செலவினங்கள்** | | |
| ITU வருடாந்த அங்கத்துவ நிதி | 28,697,136 | 26,636,951 |
| APT வருடாந்த அங்கத்துவ நிதி | 2,753,480 | 2,397,118 |
| SAFIR வருடாந்த அங்கத்துவ நிதி | 877,920 | 1,071,157 |
| SATRC ஆன பங்களிப்பு | 81,042 | 127,145 |
| வருடாந்த நூல்நிலைய அங்கத்துவ நிதி | 5,566,525 | 5,666,572 |
| CTO வருடாந்த அங்கத்துவ நிதி | 17,891,406 | 35,381,542 |
| ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளுக்காக பங்குபற்றல் | 20,000 | 0 |
| தொடர்பாடல் ஆய்வுக் கற்கைகள் | 3,538,600 | 3,577,430 |
| வழக்குகளை கோவை செய்தல், ஆஜராகும் நீதிமன்ற செயற்பாடுகள் | 0 | 114,128 |
| வெளிநாட்டு பிரதிநிதிகளின் வருகை | 14,153,285 | 136,522 |
| தாமர கோபுர செயற்திட்டம் | 0 | 24,190 |
| பாடசாலை மற்றும் சமூக ஒருங்கிணைப்புச் செய்தல் | 1,198,978 | 1,351,666 |
| ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் தொடர்பாக போக்குவரத்து மற்றும் விநியோக செலவீனம் | 0 | 1,500 |
| சர்வதேச மாநாட்டு ஒத்துழைப்புக்கள் | 0 | 36,821 |
| தொழில் முயற்சியாளர்கள் தொடர்பாக ஐ.ரி.உ-ரி.ஆர்.சி. உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் | 0 | 10,000 |
| பொதுமக்கள் விழிபூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 95,410 | 168,130 |
| கிராமத்திற்கு தொடர்பாடல் செயற்திட்டம் | 3,452,612 | 5,544,739 |
| உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - ஐரீயு - ஏபிரி | 48,021 | 0 |
| பலதரப்பட்ட ஒழுங்குபடுத்தல் செலவினங்கள் | 49,750 | 0 |
| பயிலுனர் தொடர்பாடல் வானொலி | 189,880 | 0 |
| PYT அலைவரிசை அனுமதிப்பத்திரம் | 249,500 | 0 |
| CTO வருடாந்த கூட்டம் | 18,080 | 0 |
| ITU உலக தொடர்பாடல் தகவல் சங்கம் | **78,881,625** | **82,245,610** |

**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2019.12.31** *(தொடர்ச்சி...)*
***(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)***

| | 31.12.2019 | 31.12.2018 |
|---|---|---|
| **19 அலுவலக மற்றும் நிருவாக செலவினங்கள்** | | |
| சம்பளம் | 185,045,114 | 167,042,327 |
| ஊ.சே.நி. ( 15% பங்களிப்பு) | 26,246,905 | 23,444,942 |
| ஊ.ந.நி ( 3% பங்களிப்பு) | 5,249,381 | 4,695,918 |
| போக்குவரத்துக் கொடுப்பனவுகள் | 21,084,665 | 19,374,024 |
| வீட்டு வாடகைக் கொடுப்பனவுகள் | 16,080,690 | 14,736,703 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 6,340,833 | 3,313,674 |
| செயலாற்றுகை ஊக்கப்படிகள் | 39,840,973 | 36,602,559 |
| விசேட ஊக்கக் கொடுப்பனவுகள் | 367,785 | 348,871 |
| மேலதிக கொடுப்பனவுகள் | 358,689 | 2,476,023 |
| உபகாரக் கொடுப்பனவுகள் | 59,735,832 | 40,519,848 |
| மேலதிக நேர வேலைகள் | 16,360,234 | 15,247,454 |
| தலைவரின் சம்பளங்கள் | 1,106,667 | 1,200,000 |
| பயன்படுத்தாத மருத்துவ விடுமுறை | 10,830,714 | 10,420,588 |
| ஓய்வூதியத்திற்கான ஆணைக்குழுவின் பங்களிப்பு | 1,254,606 | 1,345,161 |
| தொலைத்தொடர்பு கொடுப்பனவு | 2,566,493 | 2,701,852 |
| சீருடைகள் | 752,428 | 785,254 |
| பதவியணி நலன்புரி | 4,629,803 | 7,934,824 |
| விளையாட்டு செயற்பாடுகள் அபிவிருத்தி | 3,063,696 | 1,500,000 |
| பதவியணி தொழில்சார் அங்கத்துவ கட்டணம் | 595,016 | 626,006 |
| உள்நாட்டுப் பயிற்சிகள் | 1,102,863 | 1,395,770 |
| ஆணைக்குழு அங்கத்தவர் கொடுப்பனவுகள் | 113,500 | 262,500 |
| கணக்காய்வுக் குழு கொடுப்பனவுகள் | 171,750 | 168,250 |
| 2/3 வீட்டுக் கடன் வட்டி மீளளிப்புச் செய்தல் | 4,942,774 | 5,126,002 |
| பணிக்கொடை | 3,683,105 | 3,359,039 |
| மின்சாரம் | 12,894,921 | 13,380,319 |
| நீர் | 526,342 | 487,685 |
| துப்பரவு ஏற்பாட்டுச் சேவைகள் | 6,409,796 | 6,454,720 |
| பாதுகாப்பு சேவைகள் | 13,657,530 | 11,086,450 |
| தீர்வை மற்றும் வரிகள் | 885,207 | 3,000 |
| நூல்நிலையப் புத்தகங்கள் | 109,979 | 68,356 |
| அச்சடித்தல் மற்றும் எழுதுகருவிகள் | 14,139,701 | 11,733,439 |
| எரிபொருள் | 3,756,142 | 3,885,742 |
| தபால் கட்டணங்கள் | 797,618 | 878,625 |
| தொலைபேசி, பெக்ஸ் மற்றும் பீஏபிளக்ஸ் | 4,687,070 | 6,076,255 |
| காப்புறுதி (ஆதனம் மற்றும் மருத்துவ) | 16,334,036 | 52,889,494 |
| இணையதளக் கட்டணங்கள் | 6,684,363 | 4,414,579 |
| செய்திப் பத்திரிகைகள் மற்றும் அறிவித்தல்கள் | 2,761,495 | 5,044,512 |
| ஆலோசனைக் கட்டணங்கள் | 356,003 | 179,500 |
| மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் | 376,283 | 681,499 |
| தொழிற் தகைமைப் படி | 6,525,690 | 0 |

**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2019.12.31** *(தொடர்ச்சி...)*
**(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)**

| | 31.12.2019 | 31.12.2018 |
|---|---|---|
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 2,500,000 | 1,100,000 |
| சட்டச் செலவீனங்கள் / ஒழுக்காற்று விசாரணைகள் / ஆரம்ப புலனாய்வுகள் | 574,296 | 318,348 |
| பெறுமானத் தேய்வு | 96,131,988 | 89,018,668 |
| தேய்வுகள் | 2,277,255 | 9,807,868 |
| நானாவித நிருவாகச் செலவினங்கள் | 3,484,240 | 2,241,500 |
| நானாவித கொள்வனவுகள் மற்றும் விநியோகங்கள் | 1,996,474 | 1,965,189 |
| நானாவித செயற்பாட்டுக் கிரயம் | 658,840 | 571,444 |
| அலுவலக உபகரண பராமரிப்பு | 18,260,969 | 11,174,579 |
| மின்பிறப்பாக்கி பராமரிப்பு | 0 | 49,725 |
| வாகன பராமரிப்பு | 5,839,317 | 4,397,987 |
| கட்டிடம் மற்றும் உட்கட்டமைப்பு பராமரிப்பு | 3,638,485 | 4,313,054 |
| தொழில்நுட்ப உபகரண பராமரிப்புக்கள் | 10,979,766 | 93,840 |
| மென்பொருள் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி | 24,554,235 | 1,831,728 |
| கோபுர பராமரிப்பு | 20,667 | 244,262 |
| மின்பிறப்பாக்கி பராமரிப்பும் பராமரித்தலும் | 123,729 | 0 |
| நிலையக் கண்காணிப்பும் பராமரிப்பும் | 7,896,225 | 2,563,522 |
| நிலைய பராமரிப்பு - த.தொ. பூங்கா சூரியவெவ | 0 | 12,310 |
| திருத்தம் மற்றும் பராமரிப்பு - நானாவித | 17,143 | 0 |
| இணையதள தரப்படுத்தல் மார்க்கம் | 0 | 289,364 |
| சி.சி.ரீ.வி. பராமரிப்பு | 3,170 | 25,760 |
| குத்தகைக் கட்டிட வாடகை | 648,000 | 0 |
| | **682,031,488** | **611,910,909** |

**<u>20 நிதி மற்றும் பிற செலவினங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 299,727 | 279,186 |
| முத்திரை வரி | 0 | 250,000 |
| பணிக்கொடை நிதி ஒதுக்கத்தின் மீதான வட்டி | 4,171,706 | 3,993,620 |
| | **4,471,433** | **4,522,806** |

**<u>21 திரண்ட நிதியத்திற்கான பங்களிப்புச் செய்தல்</u>** **21-1**

| | | |
|---|---|---|
| 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான தொலைத்தொடர்பு சட்டத்தின் கீழ் பங்களிப்பு | 7,950,000,000 | 6,850,000,000 |
| 2019.12.31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் சட்டத்தின் கீழ் பங்களிப்பு | | |
| செலுத்தப்பட்ட தொலைத்தொடர்பு வரிகள் | 15,065,669,041 | 24,349,276,331 |
| தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணங்கள் 50% | 2,668,925,470 | 2,790,814,593 |
| செலுத்தப்பட்ட வெளிச் செல்லும் உள்நாட்டு பிரவேசக் கட்டணத்தின் மீதான வரி | 192,765,504 | 730,277,739 |
| திறைசேரிக்குச் செலுத்திய குறுந்தகவல் வரி | 419,083,887 | 0 |
| திறைசேரிக்குச் செலுத்திய செலுயூலர் கோபுர வரி | 1,384,526,669 | 0 |
| | **27,680,970,570** | **34,529,046,037** |

**<u>தொலைத்தொடர்புச் சட்டத்தின் கீழ் பங்களிப்புச் செய்தல்.</u>** **21-2**

| | | |
|---|---|---|
| 2018.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விளக்கமான மொத்த வருமானம் தவிர | **1,000,000,000** | **15,000,000,000** |

**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2019.12.31** *(தொடர்ச்சி...)*
**(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)**

| | | 31.12.2019 | 31.12.2018 |
|---|---|---|---|
| **22 செயற்பாட்டின் ஊடாக உருவாக்கப்பட்ட காசு** | | | |
| வரிக்கு முந்திய நிகர இலாபம் | | **37,883,540,711** | **45,706,552,824** |
| **சீராக்கம் தொடர்பாக** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண பெறுமானத் தேய்வு | | 96,131,988 | 89,018,668 |
| கற்புலனாகா சொத்துக்களின் தேய்வு | | 2,277,255 | 9,807,868 |
| அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயக் கடன் மற்றும் கடன்பட்டோருக்கான ஒதுக்கங்கள் | | 0 | 1,308,496 |
| அறவிட முடியாக் கடன் மீள் அறவிடல் | | (7,859) | 0 |
| ஓய்வூதிய நலன் பகிர்வு | | 3,683,105 | 3,359,039 |
| நிலையான வைப்புக்கள் மூலம் வட்டி வருமானம் | | (32,741,587) | (683,832,865) |
| பணப் பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல் வட்டி வருமானம் | | (310,471,287) | (683,832,865) |
| ஓய்வூதிய பணிக்கொடை கடப்பாடுகள் மீதான வட்டிக் கிரயம் | | 4,171,706 | 3,993,620 |
| வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல் மீதான இலாபம் / நட்டம் | | (73,717,095) | 1,626,395,795 |
| நிலையான சொத்து அகற்றல் மீதான இலாபம் / நட்டம் | | (225,836) | 0 |
| **தொழிற்படு மூலதன மாற்றம்** | | | |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | **22-1** | 1,346,072,763 | 2,523,876,193 |
| முற்கொடுப்பனவு மற்றும் முற்பணம் | **22-2** | (40,851,154) | (2,522,763) |
| கடன் மற்றும் வேறு கிடைப்பனவுகள் | **22-3** | (1,286,345) | (106,485,077) |
| நிலையான வைப்பு வட்டி பெறவேண்டியவை | | (1,537,022) | 0 |
| செலுத்த வேண்டிய கணக்குகள் | **22-4** | 23,198,978 | (30,369,935) |
| முற்பணங்கள், வைப்புக்கள் மற்றும் வேறு கொடுப்பனவுகள் | | (926,796,097) | (4,496,881,931) |
| திறைசேரிக்கு செலுத்த வேண்டியவை | | 62,978,927 | (647,202,434) |
| தாமரைக் கோபுர தாமத சேதங்கள் | | 0 | 1,680,544,180 |
| **செயற்பாட்டின் ஊடாக உருவாக்கப்பட்ட நிதி** | | **38,034,421,151** | **45,293,062,841** |

**22-1 கிடைக்க வேண்டிய கணக்குகள்**

| | | |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய செஸ் | 429,991,796 | 465,636,257 |
| கிடைக்க வேண்டிய ரீடிசி | 782,030,936 | 957,178,524 |
| கிடைக்க வேண்டிய ஔல்ஏசி மீதான தீர்வை | 0 | 39,280,793 |
| கிடைக்க வேண்டிய தொலைத்தொடர்பு தீர்வை | 772,310,122 | 977,293,794 |
| கிடைக்க வேண்டிய கொகாவில் கோபுரம் | 81,776,444 | 83,297,174 |
| கிடைக்க வேண்டிய கோபுர வரி | 339,276,667 | 0 |
| கிடைக்க வேண்டிய குறுந்தகவல் வரி | 57,540,518 | 0 |
| கிடைக்க வேண்டிய நிலுவையான பதவியணி கடன் | 2,461,716 | 2,547,337 |
| கிடைக்க வேண்டிய கொகாவில் குத்தகை | 2,138,310 | 700,561 |
| கிடைக்க வேண்டிய விமானச் சீட்டுக் கட்டணம் | 148,200 | 97,920 |
| வானொலி அலைக்கற்றை கட்டணம் | 373,775,691 | 1,661,483,613 |
| பயிலுனர் வானொலி அனுமதிப் பத்திரக் கட்டணம் | 32,790 | 39,981 |
| | **2,841,483,191** | **4,187,555,954** |
| | **1,346,072,763** | |

| | 31.12.2019 | 31.12.2018 |
|---|---|---|
| **22-2 முற் கொடுப்பனவுகள் மற்றும் முற்பணம்** | | |
| விசேட முற்பணங்கள் | 575 | 575 |
| விழா முற்பணங்கள் | 158,000 | 205,111 |
| கொள்வனவு முற்பணங்கள் | 77,140 | 202,140 |
| முற்செலுத்தல்கள் | 43,487,917 | 2,464,652 |
| | **43,723,632** | **2,872,478** |
| | **(40,851,154)** | |
| **22-3 கடன் மற்றும் வேறு கிடைப்பனவுகள்** | | |
| இடர் கடன் | 35,629,277 | 34,555,456 |
| மோட்டார் வாகன கடன்கள் | 193,991,532 | 184,937,193 |
| ஆதன கடன்கள் | 1,362,749 | 1,724,586 |
| மோட்டார் சைக்கிள் கடன்கள் | 1,138,315 | 203,298 |
| அறவிடப்பட வேண்டிய சம்பள குறைப்புக்கள் | 506,643 | 16,987 |
| வேறு கிடைப்பனவுகள் | 2,210,000 | 2,086,122 |
| தேர்தல் கடமை கொடுப்பனவு | 398,738 | 0 |
| CEB காப்புறுதி பிணை வைப்பு A/C (IT PARK) | 125,000 | 125,000 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் (நி.வை.வரி) | 0 | 17,861,411 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் (வருமான வரி மிகை ஒதுக்கீடு) | 2,713,380,890 | 0 |
| உரித்துக்கான பொருளாதார சேவைகள் கட்டணங்கள் | 25,711,011 | 18,276,866 |
| தாமரைக் கோபுர மின்சார பாதுகாப்பு வைப்பு | 3,125,000 | 3,125,000 |
| | **2,977,579,154** | **262,911,919** |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் (வருமான வரி மிகை ஒதுக்கீடு) | **(2,713,380,890)** | **0** |
| | **264,198,264** | **262,911,919** |
| | **(1,286,345)** | |
| **22-4 செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| நிதி நிலமை பற்றிய கூற்று | 138,715,771 | 1,934,110,203 |
| **கழி:** வருமான வரிக்கான ஏற்பாடுகள் | 0 | (1,818,593,410) |
| | **138,715,771** | **115,516,793** |
| | **23,198,978** | |
| **23 வேலை ஆரம்பிப்பு முற்பணக்கொடுப்பனவுகள்** | | |
| வேலை ஆரம்பிப்பு முற்பணக் கொடுப்பனவு - தாமரைக் கோபுரம் | 7,214,214 | 421,684,520 |
| வேலை ஆரம்பிப்பு முற்பணக் கொடுப்பனவு -(IT PARK) | 157,081,430 | 157,081,430 |
| வேலை ஆரம்பிப்பு முற்பணம் (H/O New) | 13,387,576 | **0** |
| வேலை ஆரம்பிப்பு முற்பணம் (கதிரான) | 11,312,256 | **0** |
| | **188,995,476** | **578,765,950** |
| | **389,770,474** | |

அத்தியாயம்

07

# கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கை

මගේ අංකය / எனது இல. / My No. பிஎம்யு/ஏ/ரீஆர்சி/01/19/15 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 2020 ஆகஸ்ட் 31

தலைவர்

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் ரூபா 13,334,708,033 ஆன ஆணைக்குழுவின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்கள் என்பன அதன் நியாயமான பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆணைக்குழுவிற்கு ரூபா 45,000,000 பெறுமதியான 112 ஏக்கர் 01 றூட் 10.5 பேர்ச் அளவினையுடைய காணியில் அண்ணளவாக 69 சதவீதமான அளவு பிரதேச செயலகமொன்றினால் கைப்பற்றப்பட்டிருந்த போதும் அதற்குரிய சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் ரூபா 12,978,983 கிரயமான நிலையான சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வசாண்டின் போது கணனி மற்றும் அலுவலக உபகரணங்கள் ரூபா 2,182,606 கூடுதலாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,185,480 ஆன மதியுரைக் கட்டணங்கள் உட்பட ரூபா 3,129,527 ஆன செலவினம் நிதிக்கூற்றுக்களில் பதிவுசெய்யப்படாமை காரணமாக அந்த அளவினால் ஆண்டின் இலாபம் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது பொருளாதார சேவைகள் கட்டணங்கள் வரிக்கு உட்பட்ட புரள்வு, வரி செலுத்தும் பட்டோலையின் பிரகாரம் ரூபா 16,812,468,625 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 15,431,747,032 ஆனமையால் அப்பெறுமதிகளுக்கு இடையே ரூபா 1,380,721,593 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் பெறுமதி சேர் வரிக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி 18,649,359 மற்றும் வரி பட்டோலையின் பிரகாரம் செலுத்த வேண்டிய வரிப் பொறுப்பு ரூபா 63,459,533 ஆக இருந்தமையால் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி மீதான பொறுப்பு ரூபா 44,810,174 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அசைவுறாது காணப்பட்ட ரூபா 354,000,000 தொகையான திறைசேரி வைப்பாகக் காண்பிக்கப்பட்ட முதலீட்டை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு எந்தவொரு சான்றும் காணப்படாதிருந்ததுடன் திறைசேரியின் நிதிக்கூற்றுக்களிலும் இம்மீதியை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் முனைப்பழியிலான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து எனது அறிக்கையின் முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுதப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் ஆணைக்குழுவினால் பேணப்பட்டிருந்தன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் (அ), (ஆ), (உ), (ஊ), (எ) போன்ற அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

  மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் கீழே காட்டப்படுகின்ற வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆளுகை சபை உறுப்பினர் ஆணைக்குழுவுடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்பு உள்ளதாகவும்

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாது செயற்பட்டுள்ளதாகவும்

| சட்டங்கள் விதிகள்/ ஏற்பாடுகளுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் அங்கீகாரமில்லாமல் மீளாய்வாண்டில் ஆணைக்குழுவினால் ரூபா 1,200,000 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2017 இன் 14 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டம் மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | உரிய உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து உழைக்கும் போதே செலுத்தம் வரியாக ரூபா 9,163,291 தொகை மீளாய்வாண்டின் போதும் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2011 இன் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு வரிச் சட்டம் | தொலைத்தொடர்பு வரி அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டிய போதிலும் 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதி வரையில் ஒரு நிறவனத்திடமிருந்து ரூபா 6,358,657 அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 6.5.1 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கையுடன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள் 2020 மே 21 ஆந் திகதி |

| | | |
|---|---|---|
| | | மற்றும் வரைவு ஆண்டறிக்கை 2020 யூலை 24 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (ii) | 8.3.7 ஆம் பிரிவு | வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்படாத செலவினங்களுக்காக செலவினங்களை மேற்கொள்வதற்கு முன்னர் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் பாதீட்டை மிகைத்து ரூபா 46,879,609 செலவினத்திற்காக அந்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | 9.14.2 ஆம் பிரிவு | ஆட்சேர்க்கும் நடைமுறைகளுக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஊடாக திறைசேரி செயலாளரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி | சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் பரிந்துரையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமும் பெறப்படாமல் பதவியணியினர்களுக்கு ஊக்குவிப்புப் படி, மிகையூதியப் படி மற்றும் வீட்டு வாடகை படி மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத விடுமுறைகளுக்காக படிகளாக மீளாய்வாண்டின் போது ரூபா 126,488,209 மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 757(2) | ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு உரிய அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (உ) | 2007 யூன் 01 ஆந் திகதிய என்எஸ்சீசீ/3/ஏபீசீ/24 ஆம் இலக்க சம்பள மற்றும் ஆளணி | பதவி நிலைத்தரமல்லாத பதவியணியினர்களுக்காக ரூபா 2,000 தொகையான மாதாந்த போக்குவரத்துப் |

| | |
|---|---|
| ஆணைக்குழுவின் கடிதம் | படியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 6,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் ரூபா 8,196,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியிருப்பதாகவும்

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை இடம்பெற்றிருக்கவில்லையெனவும் இணங்கியொழுகவும், சிக்கனமாகவும் வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டு பயன்படுத்தவில்லையெனவும்,

(அ) பெறுகைத் திட்டத்தினை செயற்படுத்துதல்

---------------------------------------------------------------------

பெறுகைத் திட்டத்தினை தயாரிப்பதன் தேவைப்பாட்டினை சரியாக இனங்காணாமை காரணமாக மீளாய்வாண்டிற்குரிய பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 101 விடயங்களில் ஆண்டின் போது 36 செயற்பாடுகள் செயற்பாடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 170,569,111 பெறுமதியான 40 பெறுகை செயற்பாடுகள் மற்றும் நிதியங்கள் இல்லாமையால் பாரிய அளவிலான 04 பெறுகை செயற்பாடுகள் ஆண்டில் பூர்த்தி செயற்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறே 2019 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாமல் ரூபா 3,317,736 பெறுமதியான 08 பெறுகை செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்

----------------------------

(i) கொக்காவில் நிலையத்தின் நடமாடும் செயற்பாட்டு கட்டிடத்தின் கொங்கிரீட் கூரை நீர் தடை (water proofing) செய்வதற்காக பொறியியல் செயற்பாடுகளுக்கான மத்திய உசாத்துணை பணியகத்திற்கு (CECB) 2017 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்த போதும் Heat insulation work உள்ளடக்கப்படாமல் ரூபா 453,430 ஆன

மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆணைக்குழுவினால் பராமரிப்ப கோரப்பட்ட வேண்டுகேள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டின் போது இத்திருத்திற்னகாக புதிய ஒப்பந்தமொன்றை வழங்குவதற்காக கேள்வி மதிப்பீட்டின் போது ஒப்பந்தக்காரரின் தகைமை கருத்திற் கொள்ளப்படாமல் ரூபா 1,116,350 இற்கு ஒப்பந்தம் தனியார் நிறுவனமொன்றுக்கு 2019 யூன் 19 ஆந் திகதி வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இதன் போது ஆணைக்குழு பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் இச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தது.

(ii) ஆணைக்குழுவின் புதிய கட்டிட நிர்மாணம்

---

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 209,093,034 இற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு 2019 சனவரி 31 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

- 2016 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய அமப/16/1604/701/022 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவின் தற்போதுள்ள தலைமை அலுவலகத்தை புதுப்பிப்பதற்காகவும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் மதியரை அலகினாலும் அறிவிக்கப்பட்டிருந்ததன் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு ரூ. 502 மில்லியனை செலவிடுவதற்கு குறித்த செயற்பாட்டிற்காக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் நிதியை இந்த நோக்கத்திற்காக பயன்படுத்த பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரமளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம், "தலைமை அலுவலகத்தை நவீனமயமாக்குவதற்கு" அமைச்சரவை அங்கீகாரம் அளித்த போதிலும், அதற்கு முரணாக பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு புதிய கட்டிடமொன்ற நிர்மாணிப்பதற்காக ரூபா 502 மில்லியனை செலவிடுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டிருந்ததாகவும் ஆலோசனை நிறுவனங்களுடன்

கலந்தாலோசித்து அதனை 344 மில்லியன் வரை குறைத்துக் கொண்டுள்ளதாகவும் என குறிப்பிட்டு 2018 யூலை 10 ஆந் திகதி தேவையான குழுவினை நியமிப்பதற்காக ஜனாதிபதி செயறலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

- மேற்படி கடிதத்தின் பிரகாரம் ரூபா 344 மில்லியன் பெறுமதியான நிர்மாணத்திற்கான குழு நியமனம் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.7.1 மற்றும் 2.92 பரிவுகளின் பிரகாரம் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழுவொன்றும் அதனுடன் இணைந்ததாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றம் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்று 2 ஆண்டுகள் தாமதத்தின் பின்னரும் இதற்காக அமைச்சின் றுெகை குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

- இதற்காக கேள்வி கோரும் போது ரூபா 200 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியாக குறைக்கப்பட்டு ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு நீடிப்பு'' (Extension to main Building) என மாற்றப்பட்டு குறிப்பிடப்பட்டிருந்தது. மதிப்பீட்டுப் பெறுமதி குறைக்கப்பட்டிருந்த போதும் மேலதிக வேலைகளுக்காக ரூபா 33 மில்லியன் செலவிடுவதற்கு நேர்வதாக மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் மதியுரை குழுவினால் 2019 நவம்பர் 27 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த ஒப்பந்தம் முறையான திட்டமொன்றில்லாமல் மேற்கொள்ளப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.
- இதன் போது மதியுரை சேவைகள் வழங்கும் ஒப்பந்தம் அமுலாகும் திகதியான 2018 ஏப்ரல் 30 என இடப்பட்டு 2019 யூன் ஆம் திகதி வரை ஒப்பந்தம் முற்படுத்தி கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**(iii) தாமரைக் கோபுர செயற்திட்டம்**

2010 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 10/2473/401/031 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தாமரைக் கோபுர நிர்மாண ஒப்பந்தம் 02 சீன கம்பனிகளுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2012 சனவரி 03 ஆந் திகதி தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு இக்கம்பனியுடன் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தன. ஒப்பந்தப் பெறுமதி ஐ.அ.டொலர் 104,300,000 தொகையாக இருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2012 நவம்பர் 12 ஆம் திகதி முதல் 2015 மே 12 ஆந் திகதி வரையான 912 நாட்களில் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாகக் காணப்பட்ட போதும் 2017 ஒக்தோபர் 31 வரை ஒப்பந்தக் காலத்தை நீடிப்பதற்கு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இந்நிர்மாணத்திற்காக நிதியத்தை வழங்குவதற்கு 2012 செப்தம்பர் மாதம் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, EXIM வங்கியுடன் கடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியில் 85 சதவீதம் அதாவது 88.655 அ.டொ. மில்லியன் வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்த போதும் 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதி வரை கடன்தொகை பெற்று பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது.

- 2011 திசெம்பர் 14 ஆந் திகதிய அமப/11/2262/501/026/ரீபீஆர் ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2.59 ஹெக்டேயர் காணி நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலம் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட வேண்டிய போதும் அவ்வாறு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.
- நிர்மாண ஒப்பந்த கால அட்டவணையின் பிரகாரம் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக மொத்தக் கடனையும் குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் இருந்ததுடன் குறித்த காலப்பகுதியில் 67,259,758 அ.ஐ.டொ மில்லியன் கடன் தொகையில் 76 சதவீதம் வழங்கப்பட்டிருந்தது. இதன் போது 21,395,242 ஆன கடன்தொகை அளவினை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்த போதும் மொத்த கடன் தொகைக்காக காப்புறுதி கட்டணங்கள், இணக்கப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் முகாமைத்துவக் கட்டணங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

இவ்வாறு பெற்றுக்கொள்ளாத கடன் தொகைக்கு விகிதாசாரமாக கொடுப்பனவு செய்யப்பட்ட அ.ஐ.டொ 2,091,287 காப்புறுதி கட்டணங்கள், அ.ஐ.டொ. 627,789 இணக்கப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் அ.டொ.192,557 என மொத்தம் அ.டொ 2,911,633 முகாமைத்துவக் கட்டணங்கள் என்பன விளைவற்ற செலவினமொன்றாக இருந்தன.

- இச்செயற்திட்டத்திற்குரியதாக தயாரிக்கப்பட்டிருந்த நிதி இயலளவு அறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிலிருந்து செயற்திட்டததின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும் அதன் மூலம் வருடாந்தம் ரூபா 1.685 மில்லியன் வருமானமொன்றை உழைத்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தாமதமானதன் பேரில் அவ்வருடாந்த வருமானம் இழக்கப்ப்டிருந்தது. அதன் பிரகாரம் நிதி இயலளவு அறிக்கையின் பிரகாரம் உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தின் மீது கணக்கிடும் போது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 7,722 ஆக இருந்தது.

- 2010 ஒக்தோபர் 29 ஆந் திகதிய அமப/10/2473/401/031 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் 5.4 iii ஆம் இலக்கத்தின் மூலம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உரித்தன் கீழ் முககாமைத்துவு ஆலோசணைக் கம்பனியொன்றை தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் அவ்வாறான கம்பனியொன்றை தாபிக்க ஆணைக்குழுவிற்கு அதிகாரம் காணப்படவில்லை. 2019 செப்தம்பர் ஆந் திகதிய அமப/19/2305/103/140 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மேற்குறித்த விடயம் அகற்றப்பட்டு கொழும்பு தாமரைக் கோபுர ஆதனங்கள் வணிகமயமாக்கலை முகாமைத்துவம் செய்வதற்காக அரச கம்பனியொன்றாக தாபிப்பதற்கு திறைசேரியால் அங்கீகாரம் கையளிக்கப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடுகள கணக்காய்வு திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் தாமரைக் கோபுரத்லிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருமானம் உழைக்கும் இயலுமை மேலும் குறைவடைவதாக அவதானிக்கப்பட்டது.

- ஆணைக்குழுவிற்கும் ஒப்பந்தக்காரருக்கும் இடையிலான ஏற்படுத்தப்பட்ட நிர்மாண ஒப்பந்தத்தின் 8.7 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தக்காரரால் ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய தாமத அபராதம் ஒப்பந்தத் தொகையில் 0.05 சதவீதமும் கூடியது 10 சதவீதமுமாக இருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தக்காரரிடம் இருந்து இறவிடப்பட வேண்டியய தாமத தண்டப்பணம் அ.டொ. 10,430,000 அளவு ஆணைக்குழுவினால் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய தொகையில் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்த போதும் அதற்கு செயற்திட்ட மதியுரையாளரான மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பரிந்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை.

- தாமரைக் கோபுர நிர்மாண ஒப்பந்தத்தின் வேலைகள் 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி கையளிக்க வேண்டியிருந்த போதும் ஒப்பந்தக்காரரால் இதுவலை அது கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை தாமதமான காலம் 1035 நாட்களாக இருந்த போதும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமத கட்டணங்கள் அறவிடுவதற்காக 200 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

- ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட வருமானத்திலிருந்து கடன் தவணையை கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்ட வகையில் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யாமை காரணமாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அ.டொ. 39,335,307 தொகை கடன் மற்றும் வட்டியாக ஆணைக்குழு பணமாக கொடுப்பனவு செய்திருந்தது, இவ்வாறு கடன் தவணை மற்றும் வட்டி கொடுப்பனவு செலுத்த நேர்ந்தமை காரணமாக திரட்டிய நிதியததிற்கு செய்யப்பட்ட அனுப்புகை 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2017,2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 5,000 மில்லயன், ரூபா 6,150 மில்லியன் மற்றும் ரூபா 19,050 மில்லியனாக ரூபா 30,400 மில்லியன் குறைவடைந்திருந்தது.

- தாமரைக் கோபுர நிர்மாணத்திற்காக கடன் தொகை நிர்மாணத்திற்கான கடன்தொகையை பெற்றுக்கொண்டதன் காரணமாக காப்புறுதி கட்டணங்கள், இணக்கப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் முகாமைத்துவக் கட்டணங்கள் என்பன 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட்டியாக முறையே அ.டொ. 1,573,054, அ.டொ. 797,895, அ.டொ. 8,665,620

மற்றும் அ.டொ. 12,738,807 என மொத்தம் அ.டொ. 23,775,376 தொகை மேலதிகமாக செலவிடுவதற்கு ஆணைக்குழுவிற்கு நேர்ந்தது.

(இ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்தக்காரரால் கோபுரத்தை இதுவரை ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்படாதிரந்த போதும் 2019 செப்தம்பர் 16 ஆந் திகதி தாமரைக் கோபுரத்தை உத்தியோபூர்வமாக திறந்து வைக்கும் விழாவிற்காக ரூபா 11,325,012 செலவிடப்பட்டிருந்தது.

(ii) 2019 செப்தம்பர் 16 ஆந் திகதி நடைபெற்ற கொழும்பு தாமரைக் கோபுரம் திறப்பு விழாவின் செயற்பாடுகளை, முகாமைத்துவம் செய்வதற்காக உடன்படிக்கையொன்றில்லாமல் அரச நிறுவனமொன்றிற்கு ரூபா 6,172,472 தொகை வழங்கப்பட்டிருந்த போதும் அது 2019 ஆம் ஆண்டின் பெறுகை திட்டத்திற்கோ அல்லது திருத்திய பெறுகை திட்டத்திற்கோ உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் மேலதிகமாக வழங்கப்பட்ட 02 சேவைகளுக்காக இந்நிறுவனத்திற்கு ரூபா 1,058,594 தொகை கொடுப்பனவு செய்வதற்கு ஆணைக்குழுவின் தலைவர் அங்கீகாரம் வழங்கியிருந்தார்.

(iii) திறப்பு விழாவிற்காக உணவு பானங்களை வழங்குவதற்காக 2019 செப்தம்பர் 12 ஆந் திகதி கட்டளையொன்று மூலம் ரூபா 900,000 இற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 பிரிவின் பிரகாரம் சேவை நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டு முறைான ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

(அ) 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதி அளவில் ஆணைக்குழுவிற்கு செஸ் செலுத்த வேண்டிய மூன்று நிறுவனங்களில் ஒன்று 2016 ஏப்ரல் முதல் 2019 திசெம்பர் வரையும் மற்றைய நிறுவனம் ஒரு ஆண்டு காலப்பகுதியில் செஸ் வரி கொடுப்பனவு செய்திருக்கவில்லை. அவ்வாறே கிடைக்க வேண்டிய ஆரம்ப செஸ் வரி மீதியான ரூபா 1,610,199 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை

(ஆ) ஸ்ரீ லங்கா டெலிகொம் கம்பனியால் 2017 மார்ச் மாதத்தின் போது தாமதமாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 6,779,212 ஆன தொலை தொடர்பு ஒழுங்குபடுத்தல் கட்டணங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 813,505 ஆன மிகை கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கொக்காவில் அன்டனா மற்றும் டிரான்ஸ்மிஷன் கோபுரம் என்பவற்றைப் பயன்படுத்துகின்ற 08 செயற்படுத்துனர்களிடமிருந்தும் 03 அரச நிறுவனங்களிடமிருந்தும் குத்தகை உடன்படிக்கை செய்யப்படாதிருந்த காரணத்தினால் அச் செயற்படுத்துனர்களிடமிருந்து நீண்டகால தவணைப் பணம் கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேலும் இந்த உடன்படிக்கை செய்த இரண்டு செயற்படுத்துனர்களிடமிருந்து ரூபா 1,323,856 ஆன குத்தகை பணம் 2019 ஆம் ஆண்டின் திசெம்பர் மற்றும் ஆகஸ்ட் மாதத்திலிருந்து அறவிட வேண்டியிருந்தது.

(உ) கொக்காவில் அன்டனா மற்றும் டிரான்ஸ்மிஷன் கோபுரம் என்பவற்றைப் பயன்படுத்துகின்ற 05 செயற்படுத்துனர்களிடமிருந்து மின்சாரப் பட்டியலுக்காக ரூபா 81,813,102 அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் இம்மீதியில 03 அரச நிறுவனங்களிடமிருந்து ரூபா 81,314,547 அறவிடப்பட வேண்டியிருந்தது இதில் சுயாதீன தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்திடமிருந்தும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்தும் 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை முழுமையாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக முழுமையாகவும் மேலும் சில வருடங்களுக்கு பகுதி பகுதியாக மின்பட்டியல் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் இந்நிறுவனங்களிலிருந்து 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 74,627,891 தொகையை அறவிடுவதில் நிச்சியமற்ற தன்மை காணப்படுகின்றது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதி வரை ஆணைக்குழுவின் கடன்பட்டோர் மீதியில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 373,700,914 ஆக இருந்ததுடன் அதில் 38 ஆண்டுகளில் பழைய கடன் மீதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதில் ரூபா 1 மில்லியனுக்கு மேற்பட்ட 18 கடன்பட்டோரிடமிருந்து மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கிடைக்காமை காரணமாக ரூபா 344,792,045 ஆன கடன் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது.

(எ) அறவிடப்படவேண்டிய மீதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து ரூபா 145,254,449 தொகையாக இருந்ததுடன் அத்தொகையை அறவிடுவதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

தனியார் கம்பனியொன்றிடமிருந்து ரூபா 174,800,000 உட்பட 08 நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 197,130,954 ஆக இருந்தது. இக்கடன் மீதியில் ரூபா 8,184,000 தொகை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து அறவிட வேண்டியதாக காணப்பட்ட போதும் அந்த அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் அம்மீதி உறுதிப்படுத்தப்படாமையால் அத்தொகையை அறவிடுதல் மற்றும் ஆணைக்குழு ஆரம்பிப்பதற்கு முன்னிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட 04 நிறுவனங்களின் மீதியான ரூபா 5,613,513 தொகையை அறவிடுவதில் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது.

(ஏ) ஆணைக்குழுவினால் வாடகைக்கு பெற்றுக்கொண்ட தனியார் கட்டிடமொன்று 2015 ஆம் ஆண்டின் போது கட்டிடம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக செலுத்திய பிடிகாசு (key money) ஆன ரூபா 1,350,000 தொகையை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஐ) உத்தியோகத்தர் ஒருவருக்கு வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட காலப்பகுதியில் ஊக்குவிப்பு படிகளாக கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 424,000 தொகையை 2019 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய ஒழுக்காற்று கட்டளையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மீள அறவிடுவதற்கு ஆணைக்குழு தவறியிருந்ததுடன் சேவையிலிருந்து நீக்கப்பட்ட இந்த உத்தியோகத்தருக்கு பணிக்கொடை கொடுப்பனவு தாமதமானமையால் ரூபா 166,500 ஆன மிகை கொடுப்பனவு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) பதவியணியினர் நிர்வாகம்

(i) மீயளாய்வாண்டின் இறுதியில் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 299 ஆக இருந்த போதும் உள்ளவாறான பதவியணியினர் 212 ஆக இருந்தமையபால் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 66 ஆக இருந்தன. ஆணைக்குழுவின் அமைப்பு கட்டமைப்பு, ஊழியர் எண்ணிக்கை மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்தம் செய்தல் மீளாய்வாண்டின் இறுதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத உதவிக் கணக்காளர் பதவிக்காக 2015 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்க்கப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கு நி.பி 71 இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டில் சம்பளம், வீட்டு வாடகை படிகள், ஊக்குவிப்பு படிகள் மற்றும் போக்குவரத்து படிகளாக ரூபா 1,939,975 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

www.trc.gov.lk | dgtsl@trc.gov.lk

**இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**

276 எல்விட்டிகல மாவத்தை கொழும்பு 8 இலங்கை
**தொ:** +9411 2689345/ 2689351/ 2689352 **பெக்ஸ்:** +9411 2689341